# தமிழரசு

அக்டோபர் 16–31, 1998 ரூ.3















**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

## இந்த இதழில்...


★ அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலைஞர் உரை 2

★ "அனைவரும் ஒரு தாய் மக்கள்" கலைஞர் உரை 9

★ வீரபாண்டிய கட்டபொம்மன் 14

★ கவிதைகளும் காலங்களும் 17

★ விடுதலைப் போராட்டங்களில் ஆவணக் காப்பகங்களின் பங்கு 18

★ இருட்டான பகல் 24

★ உலக இரத்த தான நாள் 30

★ பண்டைத் தமிழகக் களிமண் தகடுகள் 31

★ கறுத்த குறிப்புகள் - சிறுகதை 33

★ வேளாண்மை 38

★ அமார்த்திய சென் 46


**'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்'**

பொருள் : அடக்கம் அழியாத புகழைக் கொடுக்கும்; அடங்காமை வாழ்வையே இருளாக்கிவிடும்

(- கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து.)


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029

புரட்டாசி–ஐப்பசி

அக்டோபர் 16–31, 1998

மலர்:30 இதழ்:8

விலை ரூ.3


**முதலாம் அட்டையில்:** மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கோவையில் அமைந்துள்ள சமத்துவபுரத்தைத் திறந்து வைத்தல்.

**கடைசிப் பக்க அட்டையில்:** நோபல் பரிசு பெற்ற இந்தியப் பொருளாதாரப் பேராசிரியர் அமார்த்திய சென்.

பத்மவாசன்

# "சாதிமோதல்கள் - கலவரங்கள் ஏற்படாதிருக்க ஒரு நல்ல தீர்வு காண வழிவகுப்போம்!"

அங்கொன்று இங்கொன்றாக - பரவலாகத் தலைதூக்கும் சாதிமதக் கலவரங்களை அடியோடு அடக்கும் வகைபற்றி ஆராய, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றைக் கூட்டிக் கலந்தாலோசித்தார். அரசு தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள மாநாட்டுக் கூட்ட அரங்கில் 22-10-98, 26-10-98 ஆகிய இருநாட்கள், **கலைஞர்** தலைமையில் நடைபெற்ற அக்கூட்டம் மொத்தத்தில் 12 மணி நேரம் நடைபெற்றது. தமிழகத்தில் உள்ள 41 கட்சிகளைச் சேர்ந்த 60க்கும் மேலானோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு அரிய ஆலோசனைகளை வழங்கினார்கள். இக்கூட்டத்திற்கு வருகை தந்தோரை வரவேற்று - அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைத் தொடங்கிவைத்து மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய தொடக்க உரை விவரம் வருமாறு :

"அனைத்துக் கட்சிக் கூட்டம் என்பது பொதுவாக எழுந்துள்ள சில பிரச்சினைகளில் நம்முடைய பொதுவான கருத்துக்களை அறிவித்து, உருவாகியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண என்ன வழிவகைகளை மேற்கொள்ளலாம் என்பதற்கான அரிய ஆலோசனைகளை நல்ல கருத்துக்களை அரசுக்கு எடுத்துரைக்கப் பயன்படுகின்ற ஒரு கூட்டம் என்பதை நான் விளக்கத் தேவையில்லை.

கடந்த காலங்களில் பலமுறை அரசின் சார்பில் இதுபோன்ற அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்காக நடைபெற்றிருக்கின்றன. இன்று எந்தப் பிரச்சினைகளுக்காக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறதோ இதே பிரச்சினைக்காக இதற்கு முன்பு இந்த ஆட்சியிலேயே இரண்டு முறை அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் கூட்டப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டில் ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சி மற்றும் அனைத்து சமுதாயத் தலைவர்கள் கலந்துகொண்ட இரண்டு கூட்டங்கள் அதிலே தொடர்ந்து கூறப்பட்ட கருத்துக்கள், அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் இவைகளையெல்லாம் நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

இருந்தாலும்கூட இன்னும் தமிழகத்தில் மதவாத பிணக்குகளும், ஜாதி சமய சர்ச்சைகளும் அறவே நின்றபாடில்லை என்பதற்கு அடையாளமாக சிற்சில நிகழ்ச்சிகள் நாம் வேதனைப்படத்தக்க அளவுக்கு நடைபெறுவதை யாரும் மறுக்க இயலாது. மறக்கவும் முடியாது.


### *வழிவகை காண்போம்*

இத்தகைய நிலைமைகள் அறவே அகற்றப்படுவதற்கு ஏற்ற வழிவகைகளைக் காண வேண்டும் என்பதற்காகத் தான் அனைத்துக் கட்சியைச் சார்ந்துள்ள தலைவர்களையும், பிரதிநிதிகளையும் அழைத்து, உங்களுடைய அரிய ஆலோசனையைக் கேட்பதற்காக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

இக்கூட்டத்தினுடைய நோக்கம் என்ன என்பதைத் தெரிந்திருக்கின்ற உங்களுக்கு அதைப்பற்றி அதிகமாக விளக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகின்றேன். இருந்தாலும் இங்கே எடுத்துவைக்க வேண்டிய கருத்துக்களுக்கு அடிப்படையாக நடைபெற்ற சில சம்பவங்களை மத அடிப்படையிலும், ஜாதி அடிப்படையிலும் ஏற்பட்டுள்ள சில நிகழ்வுகளை உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அரசின் அறிக்கையின் மூலமாக விளக்கப்பட்டிருக்கிறது.

# மத நல்லிணக்க சமூக ஒற்றுமைக்கான அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம்.

நாள்: 22 மற்றும் 26 · 10 · 98



அஃதன்னியில் குறிப்பாகவும், தனிச் சிறப்பாகவும் - ஆனால், அதே நேரத்திலே வேதனைப்படத்தக்க வகையிலும் அண்மையில் இராமநாதபுரம் வட்டாரத்தில் நடைபெற்ற ஜாதிப்பூசல் அதன் விளைவாகப் பத்துக்கு மேற்பட்ட உயிர்களுடைய இழப்பு. உடைமை இழப்பு இவைகளை நேரில் சென்று கண்டு வந்த தலைவர்களும் பலர் இங்கே இருக்கின்றார்கள். நானும் நேரில் சென்று அந்த நிகழ்வுகளை எல்லாம் பார்த்துவிட்டு வந்து இருக்கின்றேன். அவர்களுக்கு நிவாரணம் அளிப்பது என்பது ஒரு வகையிலே இருந்தாலும்கூட இந்த நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பது தான் மிக முக்கியம். ஏற்றவகையில் நிவாரணம் அளிக்கப்பட்டதா என்பது ஒரு அரசைப் பார்த்து மக்கள் பிரதிநிதிகள் எழுப்புகின்ற வினாவாக இருந்தாலும், அதற்கு விளக்கம் அளிக்க வேண்டியது அரசினுடைய கடமையாகும். இதுபோன்ற நிலைமைகள் எழாமல் இருப்பதற்கு என்னென்ன செயல்களை மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு முடிவை இந்தக் கூட்டத்திலே எடுப்பது சிலாக்கியமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

இந்தியாவில் தமிழ்நாட்டிலே மாத்திரமல்லாமல் பிற மாநிலங்களிலும் இதுபோன்ற மதவாத ஜாதியச் சச்சரவுகள் நடைபெற்ற வண்ணம்தான் இருக்கின்றன; அதற்காக மற்ற மாநிலங்களைக் காட்டியோ, முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் காட்டியோ, இப்போது நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை யாரும் நியாயப்படுத்த முடியாது. அப்படி நியாயப்படுத்த இந்த அரசும் முன்வராது என்பதை நான் மிகத் தெளிவாகத் திட்டவட்டமாக இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த ஜாதீய உணர்வுகள் மாய வேண்டும்; உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்கின்ற நிலைமைகள் அறவே அகற்றப்பட வேண்டும் என்பதற்காக இந்தியாவினுடைய மாபெரும் தலைவர்கள் எல்லாம் பல நேரங்களிலே கருத்துக்களை எடுத்துரைத்து இருக்கின்றார்கள். அதற்கான பெரும் பணிகளை ஆற்றி இருக்கின்றார்கள்.

### *மூத்தோர் மொழிந்தவை*

இந்தியாவினுடைய பிரதமராக வீற்றிருந்த ஆசியாவின் ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், "பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்க வேண்டும். மக்களில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று இருக்கக்கூடாது. எல்லாச் சமயத்தினரும் அன்னியோன்யமாய் வாழ வேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன்" என்று சூளுரைத்தார்கள்.

உலக உத்தமர் காந்தியடிகள் "125 ஆண்டுகள் வாழவேண்டும் என்று நான் விரும்பினேன். ஆனால், எனக்கு இப்போது அந்த எண்ணம் போய்விட்டது. மிருகங்களையும் விடக் கேவலமாக ஒருவரை ஒருவர் வகுப்புக் கலவரங்களில் ஈடுபட்டு அடித்துக் கொள்வதைக் கண்டு என் மனம் அலுத்துவிட்டது. ஆகவே நான் இனி வாழ்வதில் அர்த்தமில்லை" என்று வேதனையோடு குறிப்பிட்டார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் - காந்தியடிகளுடைய பிறந்த நாளைக் கொண்டாடும்போது சென்னை வானொலியில் உரையாற்றிய நேரத்தில், "வகுப்புக் கலவரம், தீண்டாமைக் கொடுமை, வலியோர் சிலர் எளியோர்தமை வதை புரியும் கொடுமை, கவலை ததும்பும் கிராமங்கள், அரசியல் சூதுகள், சமுதாயச் சதிகள் எல்லாம் நெளிகின்றன, அடக்குவார் எவர் உளர் என்று கொக்கரித்தபடி" என்று தன்னுடைய கவலையை வெளிப்படுத்தினார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கண்ணியத்திற்குரிய காயிதே

மில்லத் போன்ற பெரும் தலைவர்கள் எல்லாம் பக்குவப்படுத்திவந்த மண்ணில் இன்னும் இத்தகைய வேற்றுமைகள் ஒழிந்தபாடில்லை என்று எண்ணும்போது நாம் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாக இருக்கின்றோம். எனவே, இந்த நிலையை மாற்றுவதற்கான வழிவகைகளை இந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டு இருக்கின்ற தலைவர் பெருமக்கள், கட்சிகளின் உறுப்பினர்கள் எடுத்து இயம்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### *அரசு உதவிகள்*

குறிப்பாக இராமநாதபுரம் சம்பவத்தைப் பற்றி இங்கே கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்பு சில விவரங்களைத் தர விரும்புகிறேன். விவரங்கள் முழுமையாக உங்களுக்குத் தரப்பட்டபோதிலும்கூட, நிவாரணங்களைப் பொறுத்தவரை, தமிழகத்திலே கடந்த கால அரசாக இருந்தாலும்சரி, இந்த அரசாக இருந்தாலும்சரி, ஒரு சம்பவத்திலே இறந்தவர்கள், ஊனமுற்றவர்களுக்கு, காயப்பட்டவர்களுக்கு, வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்று அதிகபட்சமாக 10 ஆயிரம் ரூபாயும், வீடுகளுக்கு 2,500 ரூபாயும், கூரைவீடு என்றால் 1,500 ரூபாயும் என்ற நிலையிலேதான் இதுவரையிலும் தரப்பட்டு வந்தன. அவைகள் கடந்த காலத்திலே, இந்த ஓராண்டு காலமாக மேலும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகின்றன. இந்த இராமநாதபுரம் சம்பவத்தைப் பொறுத்தவரையில் வீடுகளுக்கும், கடைகளுக்கும் 25 ஆயிரம் அளவிற்குகூட நிவாரணத் தொகை வழங்கப்பட்டு இருக்கின்றது. அதனுடைய விவரங்களை மாத்திரம் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ரூ.25,000 வீதம் 10 வீடுகளுக்கும், ரூ.25,000 வீதம் 29 கடைகளுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த வகையில் ரூ.9,75,000 வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்து ரூ.24,500 ஒரு கடைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.24,000 ஒரு வீட்டுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.21,000 வீதம் 8 வீடுகளுக்கு ரூ.1,68,000 வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.20,000 வீதம் ஒரு வீட்டுக்கு, ரூ.20,000 வீதம் 4 கடைகளுக்கு 1 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.18,000 வீதம் 3 வீடுகளுக்கு 54,000 ரூபாயும், 16,000 வீதம் 6 வீடுகளுக்கும், ஒரு கடைக்கும் ரூ.1,12,000 வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.15,000 வீதம் 20 வீடுகளுக்கும், 11 கடைகளுக்கு ரூ.4,65,000 வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.14,000 வீதம் ஒரு வீட்டுக்கும், ரூ.13,000 வீதம் 2 வீடுகளுக்கும், 2 கடைகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.12,500 வீதம் 2 கடைகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 10 ஆயிரம் வீதம் 37 வீடுகளுக்கும் 25 கடைகளுக்கும் ரூ.6,20,000 வழங்கப்பட்டிருக்கிறது.

**ரூ.4001 முதல் ரூ.9,999 வரை 104 வீடுகளுக்கும், 41 கடைகளுக்குமாக ரூ.8,63,900 வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.1,001 முதல் 4,000 வரை 64 வீடுகளுக்கு** வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் ரூ.1,001 முதல் 4,000 ரூபாய் வரை 62 கடைகளுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.3,35,250. ரூ.501 முதல் 1000 வரை 43 வீடுகளுக்கும் அதேபோல் 17 கடைகளுக்கும் வழங்கப்பட்ட தொகை ரூ.58,600. ஒரு ஓடு விழுந்தால் கூட அந்த வீடு சேதமுற்றது என்று சொன்ன வகையில் 500 ரூபாய் வரை 33 வீடுகளுக்கும் 13 கடைகளுக்கும் வழங்கப்பட்ட தொகை ரூ.23,000.

அரசு சொத்துக்கள் இழப்பு என்ற வகையில் ரூ.12,68,000 வழங்கப்பட்டிருக்கிறது. இறந்தவர்களுடைய இழப்பீட்டுத் தொகையாக ரூ.16 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. காயமுற்றவர்களுக்கு இழப்பீட்டுத்தொகை ரூ.55,000 வழங்கப்பட்டிருக்கிறது.

இதுவரை ரூ.68,35,250 வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் சேத விபரங்களைக் கண்டறிந்து வர வருவாய்த்துறை உயர் அதிகாரி திரு.பாண்டியன், ஐ.ஏ.எஸ். அவர்கள் அனுப்பப்பட்டு அவர் அந்தப் பணிகளை இன்று முதல் மேற்கொண்டிருக்கிறார்.

ஒன்றை மாத்திரம் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். நடைபெற்ற இதுபோன்ற கலவரங்களில், இந்த ஆட்சியிலும் சரி, வேறு ஆட்சிகளிலும் சரி, இந்த அளவுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை. அந்த அளவுக்கு இப்போது வழங்கப்பட்டிருக்கிறது.

### *நல்ல தீர்வு காண...*

மேலும் சில கடைகள் 8 இலட்சம் 10 இலட்சம் ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிற கடைகள் இன்ஷ்யூர் செய்யப்பட்டிருக்கின்றனவா என்று அறிந்து அந்தத் தொகைக்கு மேலாகத் தரவேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இவைகளன்னியில் மேலும் சில உதவிகளும் அந்த மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதை இராமநாதபுரம் மாவட்டச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டு இருப்பதால் அதை எடுத்துக் கூறுகின்றேன்.

பொதுவாக இத்தகைய பிரச்சினைகள் இனியும் தோன்றாமல் இருக்க அதற்கு முற்றாக ஒரு முடிவேற்படுத்த நல்ல தீர்வு காண உங்களுடைய நல்ல கருத்துக்களை வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

*- இவ்வாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைத் தொடங்கிவைத்து உரையாற்றினார்.*




### எது சரி?

'சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?
சமயபேதம் வளர்த்தே தளர்வது நன்றா?
மாந்தரில் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரேகுலமாய் வாழ்வது சரியா?
வாய்ந்தபோர்க் குறிபோல் மதக்குறி இனிதா-
மனமொழி மெய்ஒன்றி மகிழுதல் இனிதா?
ஆய்ந்துபார் நெஞ்சமே!'

**- புரட்சிக் கவிஞர்**

# முன்னேற்றப் பாதையில் பெண்கள்

வி.சங்கரன்



"ஆஸ்திக்கு ஒரு ஆண்; ஆசைக்கு ஒரு பெண்" - இது தமிழில் வழங்கும் ஒரு பழமொழி. இப்போது "நாமிருவர் நமக்கு ஒருவர்", என்ற காலம் வந்துவிட்டது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்தக் காலத்தில் இப்பழமொழி பொருத்தமற்றதுதான். எனினும் இப்பழமொழியிலிருந்து ஒரு கருத்து தெளிவாகத் தெரிகிறது. அதாவது, குடும்பத்தில் பெண் குழந்தைக்கு உள்ள முக்கியத்துவத்தை இப்பழமொழி எடுத்துக்காட்டுகிறது. பெண் குழந்தை பிறந்துவிட்டால், "மகாலட்சுமி வந்துவிட்டாள்" என்றும் பெரியவர்கள் கூறுவது வழக்கம். பெண், செல்வத்தைக் கொண்டு வருகிறாள் என்பது இதன் பொருள்.

சில குடும்பங்களில் எல்லாம் ஆண் வாரிசுகளாக இருக்கும். அவர்கள் ஒரு பெண் குழந்தை பிறக்காதா என்று ஏங்கித் தவிப்பதைச் சில சமயம் நாம் பார்த்துவருகிறோம்.

"மாதராய் பிறந்திட மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்றார்கள் கவிஞர்கள். சமூகம் முழுவதுமே பெண்ணைச் சுற்றியே அமைந்திருக்கிறது. அனைத்து நடவடிக்கைகளுக்கும் பெண்தான் மையமாக இருக்கிறாள். வீட்டுக்கும், நாட்டுக்கும் கண்போல, கண்ணின்மணி போல விளங்குகிறாள். எந்தச் சமூகமாக இருந்தாலும் அதன் பண்பாடு, நாகரீகத்தைப் பிரதிபலிப்பவள் பெண்தான். தனது பாரம்பரிய ஆடைகள், நகைகள், பாடல்கள், நடனங்கள் மூலமாகப் பெண் இனம் சமூகப் பண்பாட்டைக் கட்டிக்காக்கிறது. அதனால்தான் கலாசார நிகழ்ச்சிகளில் பெண்கள் அதிகம் பங்கேற்கும் நாட்டுப்புறப் பாடல்கள், நடனங்கள் முக்கியமாக இடம் பெறுகின்றன.

### வெற்றிக்குப் பின்னால்...

ஒரு மனிதனின் வாழ்க்கையை உருவாக்குபவள் பெண். அதுதான் பெண்மையின் மகத்துவம். ஒரு ஆண் பிறந்தது முதல் மரணம் வரை, அவன் வாழ்க்கைப் பாதையைச் சீரமைப்பவள் பெண்தான். தாய்மை அடைந்து பிள்ளைப் பெறுகிறாள். அக்குழந்தைக்குப் பால் கொடுத்து வளர்க்கிறாள். குழந்தை உடல்நலத்தைப் பேணிப்பாதுகாக்கிறாள். அவனது தேவைகளை அறிந்து உதவி செய்கிறாள். அத்துடன் பெண்ணின் கடமை முடிவதில்லை.

அந்தப் பிள்ளை வளர்ந்து திருமணம் ஆகும்போது மற்றொரு பெண் வாழ்க்கைத் துணையாக வருகிறாள். மனைவி, கணவனுக்கு நண்பனாகவும், அறிவுரை கூறும் ஆசான் ஆகவும், வழிகாட்டும் விளக்காகவும் விளங்குகிறாள்.

சத்ரபதி சிவாஜி மாவீரனாக விளங்கியதற்கு அவன் அன்னைதான் காரணம். சிவாஜியின் சிறு வயதில் அவன் அன்னை பாடிய வீரம் செறிந்த தாலாட்டுப் பாடல்கள் அவனை முழுமையாக ஆட்கொண்டு மாவீரனாக வளர உதவியது. ஒரு மனிதனின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்றே பொதுவாக நம்பப்படுகிறது.

உடல் ரீதியாகவும் பெண், வலிமை மிக்கவள். குடும்பத்தில் ஏற்படும் கோபதாபங்கள், மனப் போராட்டங்களைச் சகித்துக்கொள்ளும் சக்தி அவளுக்கு உண்டு. நோய்களுக்கும் அவள் எளிதில் இலக்காவதில்லை. ஆணைக்காட்டிலும்

அதிககாலம் வாழ்கிறாள். பெண் ஒரே நேரத்தில் பல அலுவல்களைக் கவனிக்கும் திறன் பெற்றவள். காரணம் அவள் வளர்க்கப்பட்ட விதம் அப்படி. வீட்டில் சமையல் செய்வது, குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது போன்ற பல பணிகளைச் செய்கிறாள். ஆசிரியை, செவிலியர், தட்டச்சர் போன்ற பணிகளில் பெண்கள் ஆண்களைவிடத் திறமையாகப் பணியாற்றுவதைப் பார்க்கிறோம்.

### சாதனை படைத்த பெண்கள்

ஆணைவிடப் பெண் எந்த விதத்திலும் குறைந்தவள் அல்ல. பெண்கள் படைத்த எத்தனையோ சாதனைகளை வரலாறு கூறுகிறது.

முதல் சுதந்திரப் போரின்போது பிரிட்டிஷாரை எதிர்த்துப் புயலாகப் போராடியவள் ஜான்சிராணி. பிரிட்டன், பிலிப்பைன்ஸ் மற்றும் முக்கியத் தெற்காசிய நாடுகளில் பெண்கள் ஜனாதிபதிகளாகவும், பிரதமர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஏன், இந்தியாவில் இந்திராகாந்தி பிரதமர் பதவியை வகித்தார்.

இப்போதும் பெண்கள் ஆளுநர்களாகவும், முதல்வர்களாகவும் இருக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் பெண்கள் இருக்கிறார்கள். பொறியாளர், விஞ்ஞானி, விமான ஓட்டி, இராணுவ வீரர், வழக்கறிஞர், காவலர் என அவர்கள் எல்லாத் தொழில்களிலும் வியாபித்துள்ளனர்.

பி.டி.உஷா சர்வதேச விளையாட்டு அரங்குகளில் நம் நாட்டுக்குத் தங்கப் பதக்கங்களை வென்று தந்தார். இசைத்துறையில் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் சாதனையை மறக்கமுடியுமா? இவ்வளவு ஏன்? விண்வெளிப் பயணத்தில் கூட, அண்மையில் கல்பனா சாவ்லா என்ற பெண் இடம் பெற்றார். அருந்ததி ராய் தனது நவீனத்துக்கு, புகழ் மிக்க பூக்கர் விருதைப் பெற்றார்.

நம் தமிழகத்தில் மதுரையை ஆண்ட ராணி மங்கம்மா, புலவர்களுக்கெல்லாம் புலவரான ஔவையார் ஆகியோர் வாழ்ந்திருக்கிறார்கள்.

தொன்றுதொட்டே குடும்பப் பொருளாதாரத்துக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பெரும் பங்காற்றி வந்துள்ளனர் பெண்கள். வீட்டில் அவர்கள் செய்யும் வேலை மதிப்பிட இயலாதது. பணத்தால் அதை அளவிட முடியாது. கிராமங்களில் பெண்கள் இல்லையென்றால் விவசாய வேலைகளே நடக்காது. நாற்றுநடுதல், களை எடுத்தல், அறுவடை ஆகியவற்றில் முழுக்க முழுக்கப் பெண்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். கிராமங்களில் உள்ள தொழிலாளர்களில் ஏறத்தாழப் பாதிப்பேர் பெண்களே.

இப்போது, ஆலைகளில் மேலும் மேலும் பெண்கள் நியமிக்கப்படுகின்றனர். அலுவலகங்களில் மேலாளர், நிர்வாகி உட்பட பல வேலைகளுக்குப் பெண்கள் நியமிக்கப்படுகின்றனர். வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு நியாயமான பங்கு கிடைக்க வகை செய்யத் தமிழ்நாடு அரசு உள்ளாட்சி மன்றங்களில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்துள்ளது. அரசுப் பணிகளிலும் இட ஒதுக்கீடு அளித்துள்ளது. துவக்கப் பள்ளிகளில் இனி ஆசிரியைகளை மட்டுமே நியமிக்கவேண்டும் எனக் கொள்கை முடிவு எடுத்து அறிவித்துள்ளது. சிறுமிகளிடையே கல்வி அறிவைப் பரப்ப அரசு பல நடவடிக்கைகளை எடுத்தது.

அவற்றின் விளைவாக, பள்ளி செல்லும் சிறுமிகளின் எண்ணிக்கை 1982-83ல் சுமார் 6 இலட்சமாக இருந்தது, 1997-98ல் ஏறத்தாழ 14 இலட்சமாக அதிகரித்துள்ளது. மேல்நிலைப்பள்ளி அளவில் படிப்பை நிறுத்தும் மாணவிகள் விகிதம் கடந்த 10 ஆண்டுகளில் 6 சதவீதம் குறைந்துள்ளது. படிப்பிலும் மாணவர்களைவிட மாணவிகள்தான் பிரகாசிக்கின்றனர். பொதுத் தேர்வுகளில் முதலிடங்களை அதிகம் பிடிப்பவர்களும் மாணவிகளே.

### பெண் குழந்தையின் உரிமைகள்

ஐக்கிய நாடுகள் சபை சாசனத்தில் பெண் குழந்தைகளுக்குப் பல உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்திய அரசு இந்த உரிமைகளை 1992ஆம் ஆண்டு அங்கீகரித்தது. உயிர்வாழும் உரிமை, பாதுகாப்புப் பெறும் உரிமை, வளர்ச்சி பெறும் உரிமை, ஓய்வெடுக்கும் உரிமை, மன மகிழ் நிகழ்ச்சிகளுக்கான உரிமை, கலாச்சாரப் பணிகளுக்கான உரிமை... இப்படிப் பல உரிமைகள் இவற்றில் அடங்கியுள்ளன.

குழந்தைகளுக்கான உரிமை அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. குழந்தைகள் ஆரோக்கியமான முறையில் வளர வாய்ப்பு, வசதிகளை அளிக்க வேண்டும் எனக் கட்டளைக் கொள்கை கூறுகிறது. அதுமட்டுமின்றி, சுதந்திரமான சூழலில், கண்ணியத்துடன் அவர்கள் வளரவேண்டும். குழந்தைகளை, சிறுவர் சிறுமிகளைத் தவறாகப் பயன்படுத்தாமல் பாதுகாப்பு அளிப்பதும் இதில் அடங்கும். இதையொட்டி அரசு 1974-ல் குழந்தைகளுக்கான தேசியக் கொள்கையை உருவாக்கியுள்ளது. அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ள கட்டளைக் கொள்கையை இது வலியுறுத்துகிறது.

"குழந்தைகளுக்குப் போதிய சேவைகளை அரசு அளிக்க வேண்டும். குழந்தை பிறப்பதற்கு முன்பும், பின்னரும் வளரும் பருவத்திலும் அவர்கள் முழு அளவில் உடல் ரீதியிலும் மன ரீதியிலும் வளர அரசு வாய்ப்பு, வசதிகளை வழங்கவேண்டும். சமூக வளர்ச்சிக்கு அரசு உதவவேண்டும்" எனப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இக்கொள்கைக்கு இணங்க, பல சட்டங்களை அரசு இயற்றியுள்ளது. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பது, குழந்தைத் திருமணத்தைத் தடுப்பது, வரதட்சனையைத் தடை செய்வது, பிச்சை எடுக்க விடுவதைத் தடுத்தல் போன்ற சட்டங்கள் இயற்றப் பட்டுள்ளன. நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யவும் திட்டம் உள்ளது. சென்னையில் இளைஞர்களின் கேலி கிண்டலால் ஒரு கல்லூரி மாணவி உயிர் இழந்த துயரச் சம்பவத்தை அடுத்து, பெண்களைக் கேலி செய்வதைத் தடை செய்து தமிழ்நாடு அரசு அண்மையில் அவசரச்சட்டம் பிறப்பித்தது.

நாடு விடுதலை பெற்ற பின்னர், பெண் குழந்தைகள், மகளிர் நிலை மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது. பெண் குழந்தைகளுக்குக் கல்வி வழங்குவதைத் தொடர முயற்சி செய்யப்படுகிறது. அத்துடன் பெண் குழந்தைகளின் நலனைப் பேணவேண்டியதன் அவசியம் பற்றி மக்களிடையே மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நல்ல பலன்கள் ஏற்படும். தற்போது பெண்கள் முன்னேற்றப்பாதையில் பீடுநடை போடுகின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை.

# மூலிகைகள்

மனிதன் தோன்றுவதற்கு முன்பே மூலிகைகள் தோன்றியுள்ளன. மூலிகை களின் பெருமைகளைச் சித்தர்கள் கூறியுள்ளனர். ''ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்'' என்ற பழமொழியால், மூலிகை - வேர்களின் பெருமைகளையறிந்து நோய் நீக்கப்பட்டதை அறியமுடிகிறது. காசரலி, கீழாநெல்லி போன்ற எண்ணிலடங்கா மூலிகைகள் வெளிநாடுகளுக்குச் சென்று ஆங்கில மருந்துகளெனத் திரும்பி நம் நாட்டிற்கே வந்து மிகுதியான விலைக்கு விற்கப்படுகின்றன; குணந்தருகின்றன. மூலிகைகளைப் பயன்படுத்திப் பல தீமைகளைச் செய்யச் சிலர் முற்பட்டதால் மறைமுகச் சொற்களால் மூலிகைகளுக்குப் பெயரிட்டனர்.


நோய் வராமல் காக்கும் தன்மையும், வந்தபின் நீக்கும் தன்மையும் மூலிகை களுக்குண்டு. நம் முன்னோர்களால் கோவில் களிலும் ஊர்ப்பொதுத் தோட்டங்களிலும் மூலிகைகள் வளர்க்கப்பட்டன என்பதை ''பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்'' ''மருந்தாகித் தப்பா மரத்தற்றால்'' எனத் திருவள்ளுவர் கூறுவதிலிருந்தும், கல்வெட்டுக் களாலும் அறியலாம். மூலிகை மருத்துவம் காலத்தால் முந்தியது, செயல்பாட்டில் சிறந்தது, விலையில் குறைந்தது, மேற் கொள்ளுவதெளிது, எதிர்விளைவும், பக்க விளைவுமில்லாதது. 2,50,000 மூலிகைகள் உள்ளனவென்பர். சித்த மருத்துவம் நோய் களை மெதுவாக - ஆனால் அடியோடு நீக்கவல்லது.

ஒரு மூலிகையைப் பார்த்தவுடன் அதன் தோற்றத்தைக் கொண்டே இந்த நோய்களை நீக்கும் என அறியலாம். பால் மருவை நீக்கும் பால் மதி போன்ற பூக்களுடைய அம்மாம் பச்சரிசி, இதயநோய் நீக்கும் சிவப்பு நிறமுடைய செம்பரத்திப் பூப் போன்ற மூலிகைகளுள்ளன.

சர்க்கரை நோயை நீக்கும் சர்க்கரைக் கொல்லி (சிறு குருஞ்சான்), மஞ்சட்காமாலை நோயை நீக்கும் மஞ்சள் கரிசலாங் கண்ணி, குப்பை போன்ற மேனியை நன்மேனியாக்கும் குப்பைமேனி, வாதநோயை நீக்கும் வாத நாராயணன், முடக்கு நோயை நீக்கும் முடக்கற்றான் போன்ற மூலிகைகள் தன் பெயரிலேயே தான் நீக்கும் நோயைக் குறிப் பிடுகின்றன. அரலி போன்ற நச்சு மூலிகைகளும், துளசி, அவுரி, சுக்கு, மிளகு போன்ற நச்சு முறிவு மூலிகைகளும் உள்ளன.

நாயுருவி போன்ற பசி நீக்கும் மூலிகைகளும், 45 கற்பக மூலிகைகளும் உள்ளன. பப்பாளி, எள், மாவிலங்கம் போன்ற குடும்பக் கட்டுப்பாட்டு மூலிகைகளும், ஆண், பெண் பிறக்க அரசு, ஆல் போன்ற மூலிகைகளும், மலடு நீக்கப் பல வகையான மூலிகை களுள்ளன. குடல் கல் நீக்க வாழைத்தண்டு, மூலம் நீக்கக் காட்டுக் கருணை போன்ற மூலிகைகளும் உள்ளன.

எலும்பு முறிவைச் சரியாக்கும் பிரண்டை போன்ற மூலிகைகளும், ஓமவல்லி, கற்பூரவல்லி, மரு, திருநீற்றுப்பச்சை, கறிவேம்பு, பொதினா, பூண்டு போன்ற மணந் தந்து நோய் நீக்கும் மூலிகைகளும், கொழுப்பைக் குறைக்கும் பூண்டு, வெங்காயம், வெந்தயம் போன்ற மூலிகைகளும் உள்ளன. நினை வாற்றலைப் பெருக்க வல்லாரை போன்ற மூலிகைகளுமுள்ளன.



மூலிகைகளுக்குப் பெருமை சேர்க்கும் திரிகடுகம், சிறுபஞ்சமூலம் போன்ற தமிழ் நூல்களும் இங்கே உள்ளன. பண்டை இலக்கியங்களில் பல இடங்களில் மூலிகைகளின் பயன்கள் கூறப்பட்டுள்ளன.

''மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று'' - என்ற திரு வள்ளுவரின் வாக்கிற்கேற்ப வாத, பித்த, கப நிலைகளைச் சமன் செய்யப் பல மூலிகைகளுமுள்ளன. சுருங்கச் சொன்னால், ''உணவே மருந்து, மருந்தே உணவு'' என்ற முறையில் பதார்த்த குணசிந்தாமணி வழியாக உணவின் நன்மை தீமைகளையறிந்து உண்டு, நோய்வருமுன் காக்கும் வல்லமை மூலிகைகளுக்கே உண்டு.

**- புலவர் ந.சு.மணியன்**

# வாசகர் இதயம்

தமிழ்நாடு அரசுக்கான இலச்சினையை உருவாக்கிய பெருமையாளரே ஓமந்தூரார்தான் என்ற செய்தியை விளக்கிய கலைஞருக்கு அதை எங்களுக்கெல்லாம் தெரிவித்த 'தமிழரசு'க்கு எங்கள் நன்றி.

- மு. செல்வம், கீரப்பாளையம்

'மனித நேயம்' கவிதை நல்ல பல தத்துவங்களின் விளக்கமாக இருந்தது. இவ்வாறான கவிதைகள் வெளியீட்டைத் தோடரவும்.

- கோ.நேரு, எரவலம்

'இன்ப ஒளி காட்டிடுக!
எம்மதமும் ஒன்றெனவே,
துன்பமிலா வாழ்வுபெறத்
துணைபுரிக! — அன்புடனே;
சீரோங்கும் தமிழரசே!
திகமும் சமத்துவத்தைப்
பாரோங்கச் செய்திடுக பரிந்து.

- ஏ. சண்முகம், பனை ஓலைப்பாடி.

கலைஞர் அரசில் விருதுநகர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் பற்றி அறிந்து மகிழ்ந்தோம்; இதேபோல் அடுத்தடுத்து எல்லா மாவட்ட வளர்ச்சிப் பணிகளையும் 'தமிழரசில்' வெளியிடவும்.

- க. பத்மாவதி, திருப்பூர்

டாக்டர் எஸ்.டி. ஜெயராஜ் மருத்துவக் கட்டுரை மூலம் மாரடைப்பிற்காக 'ஸ்டென்ட்' என்ற புதுமுறையை அறிவித்திருப்பதற்கும், அதன் மூலம் நடுத்தர மக்கள் பயன்பெறச் செய்த தமிழக அரசுக்கும் நன்றி.

- வெ. சென்றாயன், சேலம்-12

"காவிரி நதிநீர் பற்றிய பேச்சுவார்த்தை தொடர்பான ரத்தினச் சுருக்கக் கட்டுரையை வெளியிட்டமைக்கு உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

- ஜெ. சரவணன், திருப்பத்தூர்

'விழியில் இருட்டு மொழியில் வெளிச்சம்' என்ற கவிஞர் சாமி பழனியப்பன் இலக்கியக் கட்டுரை என் உள்ளம் கவர்ந்தது; தொடரட்டும் இத்தகைய இலக்கிய மணம்.

- கவிஞர் ம. நாராயணன். வேலூர்.

'நூல்நயம்' பகுதி தமிழரசு ஏட்டில் தவறாது இடம்பெற்றால், தரமான நூல்களை நாங்கள் இனம் காண உதவியதாக இருக்கும்.

- தளவை இளங்குமரன், செங்கற்பட்டு

'தமிழ் கூறும் நல்லுலகில்' இலக்கிய ரீதியிலும் பணி ஆற்றிவரும் தமிழரசுக்கு இதயபூர்வமான பாராட்டுகள்.

- கி. பங்காரு, எலவம்பட்டி

அலோபதி, ஆயுர்வேதிக், சித்தா என்கிற எல்லாத் தரப்புக் கட்டுரைகளையும் மருத்துவப் பகுதியில் மாறி மாறி இடம்பெறச் செய்தால் நல்லது.

- வி. விநாயகம், குகையநல்லூர்

"இன்றைக்கு ஏறத்தாழ 12 கோடி ரூபாய் அளவில் பல்வேறு நலத் திட்டங்கள் இங்கே கோவையில் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு இருக்கின்றன.

அந்தத் திட்டங்களின் அடிப்படையிலே சில அடிக்கல் நாட்டு விழாக்கள் இன்றைக்கு இந்த மேடையில் நடைபெற்றிருக்கின்றன; சில திறப்பு விழாக்களும் நடைபெற்றிருக்கின்றன. இவைகளையெல்லாம் மிஞ்சுகிற வகையில் மாவட்ட ஆட்சியர் சந்தானம் அவர்கள் எடுத்துக் கொண்ட அரும் முயற்சியின் காரணமாக - பெருமுயற்சியின் காரணமாக - அயராத முயற்சியின் காரணமாக - அவர் கொண்ட ஆர்வமிகு முயற்சியின் காரணமாக இங்கே அமைத்திருக்கின்ற சமத்துவபுரத்தைக் காணக் காண நான் மிகுந்த மகிழ்ச்சிக்கும் - பெருமிதத்திற்கும் ஆளாகிறேன்.

# "நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்கின்ற மனதைப் பெறவேண்டும்"

கோவையில் நடைபெற்ற **சமத்துவபுரம்** திறப்பு விழாவில் முதலமைச்சர் **கலைஞர்** உரை:

இந்தத் திட்டத்தைக் கடந்த ஆண்டு அறிவித்து, முதல் கட்டமாகத் தமிழகத்தில் 50 இடங்களில் சமத்துவபுரங்களை உருவாக்க வேண்டுமென்று குறிப்பிட்டு, இன்றைக்கு 6வது சமத்துவபுரம் திறந்துவைக்கப்பட்டிருக்கின்றது. முதல் சமத்துவபுரம் மதுரை மாவட்டத்தில், மேலக்கோட்டை கிராமத்தில் 17-8-1998 அன்று திறந்துவைக்கப்பட்டது.

2-வது சமத்துவபுரம் சிவகங்கை மாவட்டம் அரசனூரில் 29-8-1998 அன்று திறந்து வைக்கப்பட்டது.

3-வது சமத்துவபுரம் தூத்துக்குடி மாவட்டத்தில், திருவைகுண்டம் வட்டம், அனவரதநல்லூரில் 16-9-1998 அன்று திறந்து வைக்கப்பட்டது.


4-வது சமத்துவபுரம் நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம், பொன்னாக்குடி கிராமத்தில் 17-9-1998 அன்று திறந்து வைக்கப் பட்டது.

5-வது சமத்துவபுரம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில், 30-9-1998 அன்று திறந்து வைக்கப்பட்டது.

6-வது சமத்துவபுரம் இன்றைக்கு (23-10-1998) கோவை மாவட்டத்தில் செட்டிப்பாளையம் கிராமத்தில் திறந்து வைக்கப்படுகிறது.

**தொகுப்பு வீடுகள் கட்டுவதில் தமிழ்நாடுதான் முன்னணி**

இந்த சமத்துவபுரம் திட்டம் போலவேதான் தி.மு.கழக ஆட்சியில் தமிழகத்தில் இந்தியாவிலேயே முதல் தடவையாக ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகள் கட்டித் தருகிற திட்டம் 74ஆம் ஆண்டு - நான் அப்போது ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது தொடங்கப்பட்டது. அந்தத் திட்டம் மாநில அளவில் தொடங்கப்பட்ட திட்டம் என்றாலுங்கூட, அதனுடைய சிறப்பைக் கருதி மத்திய அரசு அந்தத் திட்டத்தை இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களில் நடத்த முன்வந்து, இன்றைக்கு இந்தியாவில் அந்தத் திட்டம் 'இந்திராகாந்தி வீடு கட்டும் திட்டம்' என்ற பெயரால் நடைபெற்று வருகிறது. ஆனாலும்கூட, அந்தத் தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் கட்டப்படுகிறது. அந்தத் தொகுப்பு வீடுகள் கட்டுவதில் இந்தியாவிலேயே இன்றைக்குத் தமிழ்நாடுதான் முன்னணியில் இருக்கிறது என்பதை நான்




மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிற நாம் கிராமப் புறங்களில் - நகர்ப்புறங்களில் சென்னை, கோவை, சேலம், மதுரை போன்ற நகர்ப்பகுதிகளில் ஏழை எளிய மக்கள் குடிசைகளில் வாழ்கின்றவர்களுக்காக ஏற்கெனவே ஒரு திட்டம் - குடிசை மேம்பாட்டுத் திட்டம் என்று இருந்தது. அந்தத் திட்டம் அப்படியே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், குடிசைகளை அகற்றும் திட்டம் - Slum Clearance Board என்ற குடிசைகளை மாற்றி அமைக்கின்ற ஒரு திட்டத்தை உருவாக்கி பல்வேறு நகரங்களில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக வீடுகள் கட்டித் தரப்பட்டு அந்த அடுக்குமாடி வீடுகளில் ஏற்கெனவே குடிசைகளில் வாழ்ந்த நடுத்தர ஏழை மக்கள் இந்த மாடி வீடுகளில் வாழ்கிற நிலைமையை உருவாக்கி இருப்பதும் இந்த அரசுதான்.

### எல்லோரும் சமத்துவத்தைக் கற்க வேண்டும்

அதன் தொடர்ச்சியாக இன்றைக்கு ‘சமத்துவபுரம்’ என்ற பெயர் வைக்கக் காரணம் - எல்லோரும் சமத்துவத்தைக் கற்க வேண்டும்; எல்லோரும் சமத்துவமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற அந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமென்பதுதான் இன்றைக்குச் சமத்துவபுரம் திட்டத்தின் முக்கியமான நோக்கம். இந்த நோக்கம் நிறைவேறிக் கொண்டிருக்கும்போது இங்கொன்றும் அங்கொன்றுமாக மதக்கலவரம், சாதிக்கலவரம் நடைபெறாமல் இல்லை. இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் அந்தக் கலவரங்கள் நடைபெற்றாலுங்கூட தமிழ்நாடு அதற்கு ஓரளவு விதிவிலக்காகத்தான் இருந்தது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் போன்ற தலைவர்களுடைய வழிகாட்டுதலில் தமிழகம் நடைபோட்ட அந்தக் காலந்தொட்டு இன்றுவரையில் அவர்களால் பண்படுத்தப்பட்ட இந்த மண்ணில் மதக் கலவரத்திற்கு இடமில்லை. சாதிச் சச்சரவுகளுக்கு - சாதிக் கலவரங்களுக்கு இடமில்லை என்கின்ற இன்பமான நிலை இருந்தது; மகிழத்தக்க நிலை இருந்தது.

### சமத்துவபுரங்களின் இன்றியமையாமை

ஆனால், கடந்த சில ஆண்டுகளாக - ஏறத்தாழ பத்தாண்டு காலமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக மதக்கலவரம், இனக்கலவரம், ஜாதிக்கலவரம் நடைபெறத் தொடங்கி அது முழுமையாக - முற்றாக நீங்கியபாடில்லை என்கின்ற அந்த வருத்தத்தின் தாக்கத்தினால்தான், சமத்துவபுரங்கள் இன்றைக்கு நாட்டில் - குறிப்பாக தமிழ் மாநிலத்தில் தோன்ற வேண்டிய ஒரு இன்றியமையாமை, அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த சமத்துவபுரத்திலே இன்றைக்கு குடியேறுகின்ற மக்கள் யார் யாரென்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் சுட்டிக் காட்டியதைப்போல நூறு வீடுகள் என்றால் தாழ்த்தப்பட்டவர்கள் நாற்பது வீடுகளில் குடியமர்த்தப்படுகிறார்கள்.

அதைப்போல 25 வீடுகளில் பிற்படுத்தப்பட்டவர்களும், மற்றுமொரு 25 வீடுகளில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களும், 10 வீடுகளில் உயர் வகுப்பார் என்று கருதப்படுபவர்களும் குடியமர்த்தப்படுகிறார்கள்.

இந்த 100 வீடுகளை ஏதோ கட்டினோம்; அதற்கு வந்தால் வரட்டும் - வராவிட்டால் போகட்டும் என்ற நிலையிலே கட்டப்பட்ட வீடுகளல்ல இவைகள். இந்த வீடுகள் யார் யாருக்கு எந்தெந்த முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது என்றால், விதவைகளாக இருப்பவர்கள், கணவனால் கைவிடப்பட்டு,வாழ முடியாத சூழ்நிலையிலே இருப்பவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், சிறுபான்மைச் சாதியினர் மற்றும் சிறுபான்மை மதத்தினர் ஆகியோரையும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தேவைக்கு அதிகமாக இருக்கும் இனங்களில் குலுக்கல் முறையிலும், சரியான தேவைக்கு, சரியான தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இருப்பார்களேயானால், குலுக்கலின்றி நேரடியாகவும் தேர்வு செய்யப்பட்டு, இந்த வீடுகளிலே குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

இந்த 100 பயனாளிகளுக்குத் தரப்பட்டுள்ள இந்த வீட்டுமனை தலா 5 சென்ட் வீதம் தரப்பட்டுள்ளது. இந்த 5 சென்ட் இடத்தில் 250 சதுரடி பரப்பில் வீடு கட்டப்பட்டுள்ளது. வீட்டையொட்டி குளியல் மற்றும் கழிப்பறை வசதியும் அமைக்கப்பட்டுள்ளது. கூரை தட்டையாக கட்டப்பட்டு ஆர்.சி.சி.கான்கிரீட் போடப்பட்டுள்ளது.

இதில் மேல் கூரையில் தட்பவெப்ப மாற்றத்தைத் தாங்கும் செங்கல் கப்பி, சுண்ணாம்பு மற்றும் சிமெண்டால் ஆன தளம் அமைக்கப்பட்டுள்ளது.

**சமத்துவபுரக் கட்டட அமைப்பு**

இந்தக் கட்டட அமைப்பு எதிர்காலத்திலே விரிவுபடுத்திக் கொள்ளவும்; மாடிகளைக்கூட கட்டிக் கொள்ளவும், மாடிக்குப் படிக்கட்டு அமைக்க வசதி கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. 100 பயனாளிகளுக்கும் ஒருவருக்கு 35 ஆயிரம் வீதம் மொத்தம் 35 இலட்ச ரூபாய் மானியமாக அரசினால் வழங்கப்பட்டு அந்தத் தொகையிலே வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

**"ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுவதில் தமிழ்நாடு தான் இந்தியாவிலேயே முன்னணியில் உள்ளது!"**

மேலும், அவர்கள் வீட்டு வசதியைப் பெருக்கிக் கொள்ள விரும்புவார்களேயானால் - அவர்களுக்குத் தேவையான கடன் வசதியைக்கூட வங்கிகளிலிருந்து பெற்றுத்தர மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக அரசு ஆவன செய்யும் என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது. அதை இங்கே கண்டீர்கள்.

இங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கண்டீர்கள். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பள்ளிக்கட்டடம், சத்துணவுச் சமையல் கூடம், சுகாதாரக் கூடம், சமுதாயக் கூடம், கிளை நூலகம், நியாய விலைக் கடை, தொலைக்காட்சி அறை ஆகியவையும் கட்டப்பட்டுள்ளன. இவைகளெல்லாம் பத்திரிகைகளில் வந்து, யாராவது படித்துப் பார்த்தால், தாங்கள் இருக்கின்ற வீட்டை விட்டுவிட்டு இந்த வீட்டில் குடி வரலாமா என்று எண்ணக்கூடிய அளவிற்கு அவ்வளவு வசதிகள் சமத்துவபுரத்திலே இன்றைக்கு செய்யப்படுகிறதென்றால், காரணம் - எல்லோரும் சமத்துவமாக இருக்க வேண்டும் என்கின்ற ஆசையைத் தவிர வேறல்ல.

இங்கு அமைக்கப்பட்டுள்ள சாலையோர மரங்களுக்கும், ஒவ்வொரு வீட்டு மனையிலும் நடப்பட்டுள்ள பயன்தரும் மரங்களுக்கும் பாசன வசதி செய்யும் பொருட்டு கோவை வேளாண்மைப் பொறியியல் துறையினரால் சொட்டுநீர்ப் பாசன வசதி அமைக்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள சமத்துவபுர குடியிருப்புகளில் இந்த வசதி இல்லை. இந்த வசதி இங்கே இப்போது செய்யப்பட்டிருக்கின்றது.

ஒவ்வொரு வீட்டிற்கும் தனி மீட்டர் பொருத்தப்பட்ட மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. தெருக்களில் மொத்தம் 21 சுழல் விளக்குகள் பொருத்தப்பட்டு விளக்கு வசதிகளும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சமத்துவபுரத்தில் வாழ்கின்ற பெரியவர்கள் முதல்

குழந்தைகள் வரை அனைவரும் மாலை நேரத்தில் ஓய்வெடுப்பதற்கும், விளையாடுவதற்கும் வசதியாகப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள சாலைகள் அனைத்திற்கும் தார் போடப்பட்டுள்ளது. செட்டிப்பாளையம் கிராமத்தில் இருந்து சமத்துவபுரம் முகப்புவரை செல்லும் ஒரு கி.மீ. நீளமுள்ள முக்கிய சாலைக்கும் தார் போடப்பட்டுள்ளது.

பூங்காவிலும், தெருவோரங்களிலும், பள்ளி வளாகத்திலும், சமுதாயக்கூட வளாகத்திலும், சுற்றுப்புறங்களிலும் வனத்துறையினரால் பல்வேறு நிழல்தரும் மரங்கள் நடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வீட்டிலும் பயன்தரும் பழமரக் கன்றுகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மேலும் வீட்டுமனைகளில் தென்னங்கன்றுகளும் நடப்பட்டுள்ளன.

சமத்துவபுரத்தில் குடியிருக்கும் பயனாளிகள் யாராவது இறக்க நேரிட்டால் அவர்களுடைய சடலங்களைப் புதைக்க விரும்புவோர் அல்லது எரிக்க விரும்புவோர் செட்டிப்பாளையம் கிராமத்திலே உள்ள பொது சுடுகாட்டிலேயேதான் எரிக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

சமத்துவபுரத்திலே இருப்பவர்கள் யார்? யார் என்பது உங்களுக்குத் தெரியும். இந்த சமத்துவபுரத்திலே இந்துக்கள் இருக்கிறார்கள். கிறித்துவர்கள் இருக்கிறார்கள், முஸ்லீம்கள் இருக்கிறார்கள், இந்துக்களிலே ஆதிதிராவிடர்கள் இருக்கிறார்கள், அருந்ததியர்கள் இருக்கிறார்கள், அய்யர்கள் இருக்கிறார்கள், அய்யங்கார்கள் இருக்கிறார்கள், அத்தனை பேரையும் கொண்டதுதான் இந்த சமத்துவபுரம்.

அதனால்தான் சொல்கிறேன். இந்தப் பகுதி மாத்திரம் சமத்துவபுரமாக இருந்தால் போதாது. தமிழகமே சமத்துவபுரமாக ஆக வேண்டும். எதிர்காலத்தில் இந்தியாவே சமத்துவபுரமாக ஆக வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. என்னுடைய கனவு.

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் அந்தத் தெருக்களுக்கு இடப்பட்டிருக்கின்ற பெயர்கள் கவர்ச்சிகரமானது மாத்திரமல்ல, என்னை மகிழ்விப்பவையும் கூட.

மதுரையிலே இலக்கியப் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர், ஆறுகளின் பெயர்களை இந்த சமத்துவபுரத்தின் தெருக்களுக்கு எல்லாம் வைத்திருக்கிறார். ஒருவேளை இந்த சமத்துவபுரம் 'நம்பர் ஆறு' என்பதால் தெருக்களுக்கு ஆறுகளின் பெயர்கள் இடப்பட்டு இருக்கின்றனவோ என்னவோ, பிரச்சினை இல்லை. மனிதர்களின் பெயர்களை வைத்தால் பிரச்சினை. ஆறுகளுடைய பெயர்களை வைத்தால் என்னுடைய பெயரை ஏன் வைக்கவில்லை வைகை ஆறு சண்டைக்கு வராது. அமராவதி ஆறு சண்டைக்கு போகாது. அந்தப் பெயரை ஏன் வைத்தாய் என்று காவிரி ஆறு சண்டைக்குப் போகாது. காவிரிச் சண்டையே தீர்ந்துபோன காலத்தில் இன்றைக்கு நாம் இருக்கிறோம்.

**அரசின் எண்ணம் ஈடேற ஒத்துழைப்பீர்**

எனவே ஆறுகளுடைய பெயர்கள் வைக்கப்பட்டு இதிலே சச்சரவுகளுக்கு இடம் இல்லாமல் செய்யப்பட்டு இருப்பது போற்றத்தக்க ஒன்று. குப்பைகளைப் போடுவதற்குக் கூட ஆங்காங்கே வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவும் செய்து கொடுத்து இங்கே குடிவைக்கப்பட்டிருக்கின்ற சமத்துவபுரத்துப் பெருமக்கள் மாவட்ட ஆட்சித் தலைவருடைய எண்ணத்தை நிறைவேற்றவும் அரசின் எண்ணத்தை நிறைவேற்றவும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமத்துவபுரத்திலுள்ள மக்கள் மாத்திரமல்ல, பொதுவாக இந்த மாநிலத்திலுள்ள மக்களெல்லாம் அப்படி ஒத்துழைப்புத் தரவேண்டும். குப்பை போடுவதற்காகத் தனியாகத் தொட்டி வைத்தால்கூட அதற்காக ஒரு வசதி செய்து ஒரு சாதனத்தை வைத்தால்கூட குப்பைகளை அதில் போடுவது கௌரவக் குறைவு என்று சிலபேர் கருதி, குப்பைத் தொட்டிக்கு வெளியிலே குப்பையைப் போடும் பழக்கம் இன்றைக்கும் நம் நாட்டிலே இருக்கிறது.

நான் காரில் போகும் நேரத்தில்கூட ஏதாவது ஒரு தாளைக் கிழிக்க நேரிட்டால், கிழித்த தாளை கார் கதவைத் திறந்து வெளியிலே வீசுவது அல்லது கிழிக்கப்பட்ட தாளை வெளியிலே வீசுவது கிடையாது. கிழிக்கப்பட்ட தாளை சட்டைப் பையிலே போட்டுக் கொள்வேன். பிறகு நான் போய் இறங்கியபிறகு வீட்டிலோ, கோட்டையிலோ அதை எடுத்து அங்கேயுள்ள குப்பைக் கொட்டுகிற சாதனத்தில் போடுவதுதான் வழக்கம். இதை எல்லோரும் கற்றுக் கொண்டால் குப்பையால் ஏற்படுகின்ற சுகாதாரக் குறைவு, உடல் நலக்குறைவு, தொற்றுநோயைப் பரவவிடுகின்ற நிலை ஏற்படாது.

இப்படிப்பட்ட உணர்வு வெளிநாடுகளில் இருக்கிறது. எங்கே குப்பை போடுகின்ற சாதனங்கள் இருக்கிறதோ, அதைத் தேடிப் பார்த்து அதில் குப்பையைப் போடுகின்ற பழக்கம் இருக்கிறது. ஆனால் நம் நாட்டில்

இந்தியாவிலும் சரி; நமது தமிழ் மாநிலத்திலும் சரி; அந்தப் பழக்கம் இல்லை. நம்முடைய உடமையை நாம்தான் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நமது நாட்டை நமது மாநிலத்தை - நமது பகுதியை நாம்தான் அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நாம்தான் சுகாதாரமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் இன்றைக்கு கவலைப்படக்கூடிய, பல நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடந்த ஓராண்டுக்கு முன்பு கோவை வட்டாரத்திலே மதக்கலவரம் நடந்து முடிந்தது. இப்போது தென்பகுதியில் - தென் மாவட்டங்களில் சாதிக்கலவரம் நடந்து முடிந்து இருந்தாலும் விட்ட குறை - தொட்ட குறை என்பார்களே அதைப்போல இன்றைக்கும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் சாதிக் கலவரங்கள். இந்த சாதிக் கலவரங்களும், மதக் கலவரங்களும் ஏன் ஏற்படுகிறது? ஒருவரையொருவர் பகைத்துக் கொண்டு அல்லது யாரோ ஒருவர் தலைவராக வர வேண்டுமென்பதற்காக, யாரோ ஒருவர் வீரராகத் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக, யாரோ ஒருவர் தான்தான் தீவிரவாதி. மற்றவர்களெல்லாம் கோழைகள் என்று சுட்டிக் காட்டுவதற்காக, ஒரு சுயநலத்தோடு நடைபெறுகின்ற காரியங்கள்தான் இந்தக் காரியங்கள். அதற்குப் பொதுமக்கள், தமிழ்நாட்டு மக்கள் பல்வேறு வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள், பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள், பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் இடம் தரக்கூடாது. நாம் இடம் தராவிட்டால் அங்கொன்றும், இங்கொன்றுமாக முளைக்கின்ற இந்தக் கலவரங்கள் நிச்சயமாக முளைக்காது.

வெடிகுண்டு செய்வதாகச் சொல்கிறான்; வெடிகுண்டு செய்பவனே அந்த வெடிகுண்டுக்கு பலியாகிறான். இது பத்திரிகைகளில் பரபரப்பாக செய்தி வருகிறது. செய்தி வந்தவுடன் அந்த சாதிக்காரன் வெடிகுண்டு செய்தானா, நாம் சும்மா இருப்பதா என்று இன்னொரு சாதிக்காரன் வெடிகுண்டு செய்ய ஆரம்பிக்கிறான். இந்த வெடிகுண்டுகளால் சாவது மனிதனாக இருந்தாலும் கூட இன்றைக்கு ஒரு மனிதன் வெடிகுண்டால் சாகலாம். ஆனால் இந்த நாட்டின் மானம், மரியாதை, இந்த நாட்டிலே நாம் கட்டிக் காத்த அன்புநெறி, அறநெறி இவைகளையும் அவர்கள் சாகடிக்கிறார்களே என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. எந்த மதத்தின் தலைவராக இருந்தாலும் அந்த மதத்தை உருவாக்கியவர்கள் இன்னொரு மதத்தைச் சேர்ந்தவர்களோடு சண்டையிட்டு, மோதிக் கொண்டு அடித்துக் கொண்டு ஒருவரையொருவர் கொன்று குவித்து, ஒருவர் வீட்டை ஒருவர் கொளுத்தி, ஒருவர் கடையை ஒருவர் நொறுக்கி இத்தகைய செயல்களில் ஈடுபடவேண்டுமென்று எந்த மதத் தலைவரும் சொல்லவில்லை. ஆனால் மதங்களின் பெயரால் அத்தகைய காரியங்கள் செய்யப்படுகின்றன.

## ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்

நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்கின்ற மனதைப் பெற வேண்டும். ஆண்டவனை நம்புகிறோம். எல்லாம் கடவுள் செயல் என்று கூறுகின்றோம். எண்ணிப் பார்க்க வேண்டாமா? அந்தக் கடவுள்தான் தன்னை படைத்தார் என்று கூறிக் கொள்கிறோம். நம்மைப் படைத்த அதே கடவுள்தான் தாழ்த்தப்பட்ட மக்களையும் படைத்தார்; இன்னொரு சாதிக்காரனையும் படைத்தார். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பேசப்படுகின்ற எல்லா மக்களையும் படைத்தவர் கடவுள்தான் என்கிறபோது அதிலே ஏன் இவ்வளவு வித்தியாசங்கள்? ஒரே கடவுளால் படைக்கப்பட்ட மக்கள் ஏன் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு சாக வேண்டும் என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**"எல்லோரும் சமத்துவமாக இருக்கவேண்டும் என்ற ஆசையின் விளைவே சமத்துவபுரம்".**

அந்த எண்ணம் ஏற்படத்தான் நாம் ஒரே குலம், ஒரே இனம், ஒரு தாய் வயிற்று மக்கள், ஒரே வயிற்றுப் பிள்ளைகள் என்ற அந்த எண்ணம் ஏற்படத்தான் சமத்துவபுரங்கள் இன்றைக்குத் தமிழகத்தில் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அடுத்தடுத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் சமத்துவபுரம் தோன்றுகின்ற செய்திகளைக் கேட்க இருக்கின்றீர்கள். விரைவில் தமிழகத்தையே சமத்துவபுரமாக ஆக்குவதற்கு என்னோடு ஒத்துழைப்புத் தாருங்கள், ஒத்துழைப்புத் தாருங்கள் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்."

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** அவர்கள் உரையாற்றினார்.

( அக்டோபர் 16, வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு நாள் )

# வீரம் விளைவித்த வீரபாண்டிய கட்டபொம்மன்

சரித்திர நாயகர்கள் ஒரு நாட்டின் வரலாற்றைத் தலைநிமிர வைக்கிறார்கள். வீரம் விவேகமாகிறபொழுது சரித்திரத்தின் முதுகெலும்பு தனக்காய் அர்ப்பணித்தவர்களின் மானுட மேன்மைகளை உச்சரித்த வண்ணமிருக்கின்றன.

இந்திய வரைபடத்தின் தென்கோடிப் பகுதியில், நெல்லைச் சீமையின் வீரத்திற்குக் கட்டியங் கூறிய விளைநிலம், பாஞ்சாலங்குறிச்சி.

நாயை எதிர்த்து முயல் தன் கால்பதித்த பாஞ்சாலங்குறிச்சி திருமண்ணைத்தான் கட்டபொம்மன் வம்சாவழியினர் நெட்டைத்துயர் நீக்கிடும் வெற்றி நிலமாகத் தேர்ந்தெடுத்தனர்.

இவர்களின் முதாதையர்கள் ஆந்திரப் பிரதேசம் துங்கபத்திரை ஆற்றின் கரையைக் கடந்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

அங்குள்ள முகம்மதிய அரசர்களின் ஆட்சியில் நிம்மதியற்ற நிலை இருந்ததால் தென்திசை நோக்கிக் கிளம்பினர். அப்போது அவர்களின் கால்நடைச் செல்வங்களை ஓட்டி வரும்போது, மாட்டு வாலைப் பிடித்து முன்னே வந்ததால் 'முத்த கொல்லவார்' என்றும் பெயர் உள்ளது என்பர் சரித்திராசிரியர். இந்த முந்தி வந்தவர்களான முந்தாலவார் இனத்தின் ஒரு பகுதி தோக்கலவார் கட்டபொம்மன் வம்சம்.


ஒன்பது கம்பளம் என்பது வழி வழி வந்த வகை. காப்புவார், பெத்தவார், சில்லவார், கொல்லவார், தோக்கலவார், பாலவார், எரசில்லவார், குருசில்லவார், நித்திரவார் ஆகியோரே அவர்கள்.

இதில் கட்டபொம்மன் தோக்கலவார் பிரிவும், எட்டயபுரம் ஜமீன் சில்லவார் பிரிவும், குடுகுடுப்பை ஜோஸ்யம் கூறும் பிரிவு நித்திரவார் என்றும் பிரிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் குலதெய்வமாம் ஜக்கதேவியை ஒரு நார்ப்பெட்டியில் வைத்துப் பாதுகாத்துத் தலையில் சுமந்து வந்தபோது இடையில் குறுக்கிட்ட காட்டாற்று வெள்ளத்திலிருந்து புங்கமரம் நிழல் கொடுத்து, கோரைப்புல் வளைந்து கொடுத்து ஜக்கதேவிக்குப் பாதுகாப்புக் கொடுத்ததால் இன்றும் கட்டபொம்மன் சந்ததியார் கோரையை அவமதிக்காமல் பாயில் உட்காராது கம்பளத்தில் அமர்வார்கள் என்பது ஓர் ஐதிகம் எனப்படுகிறது.

வீரத்தின் மறுபெயராக இவர்களின் பெயர்களில் அழகு, பொம்மு, பொன்னு, கெட்டி என்ற பெயர்களில் இடம் பெறும்.

இவர்களின் காலம் 1158ல் தொடங்கி ஜெகவீரபாண்டிய கட்டபொம்மு வீரபொம்மு 1171–1201, கெட்டிபொம்மு 1201–1230, ஆதிராமு 1230–1254, சின்னபொம்மு 1254–1282, வீரராமு 1282–1302, துரைராஜன் 1302–1327,



நல்லபொம்மு 1327–1354, முத்துவிஜயராமு 1354–1375, வீரசூடாமணி 1375–1405. தளவாய்குமாரசாமி 1405–1428, வீரமல்லு 1428–1450, அதிவீரராமு 1450–1480, ரணவீரசின்னு 1480–1493, வீரசேகரன் 1493–1501, ரகுநாதன் 1501–1513, ஜெகவீரபொம்மு 1513–1522, விஜயராகவன் 1522–1532, இராஜபாண்டியன் 1532–1544, துரைமல்லு 1544–1554, பொம்முதுரை 1554–1560, துரைசிங்கம் 1560–1568, ஜெகவீரராமு 1568–1575, துரைராஜபாண்டியன் 1575–1583, கெட்டுதளவாய் 1583–1588, விஜயரகுராமன் 1588–1595, ராஜபொம்மு 1595–1604, வீரசென்னவன் 1604–1611, பராக்கிரம பாண்டியன் 1611–1623, விஜயரகுபதி 1623–1630, துரைராஜபொம்மு 1630–1636, வீரதளவாய் 1636–1641, விஜயரகுநாதன் 1641–1648, குமாரவீரன் 1648–1653, ரணவீரராமு 1653–1659, ரகுவீரராமன் 1659–1670, பால்ராஜபொம்மு 1670–1676, ரகுவீரணன் 1676–1681, ஜெகவீரராகவன் 1681–1689, சின்னபொம்மேந்திரன் 1689–1694, ஜெகவீரராமகுமாரசாமி 1694–1700, ராஜசூடாமணி 1700–1709, ரகுவீரபாண்டியன் 1709–1736, பால்பாண்டியன்1736–1760, ஜெகவீர கட்டபொம்மு 1760–1790, வீரபாண்டிய கட்டபொம்மன் 1790–1799 – என்று வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றை எடுத்துரைக்கும் பாஞ்சாலங்குறிச்சி வீரசரிதம் கூறுகிறது.

இடம் பெயர்ந்து நடைபயின்ற கட்டபொம்மன் சந்ததியார் சாலிகுளம் வனப்பகுதியில் குடியேறினர்.

அப்போது ஒட்டப்பிடாரத்துக்கு மற்றொரு பெயர் அழகிய வீரபாண்டியபுரம் என்பதாகும். இதை ஆண்ட மன்னன் காலத்தில் மணிகட்டிக் கள்ளன் என்பவன் வழிப்பறி செய்துவந்ததாகவும், அவனை அடக்க கட்டபொம்மன் சந்ததியினரைக் காவலுக்கு அழைக்க, சந்ததியே இல்லாத மன்னரின் ஆட்சி கட்டபொம்மனுக்கே கைமாறியது என்றும் ஒரு வரலாறு கூறுவது உண்டு.

பின்னர் அவர்கள் வீரம் செறிந்த பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டையைக் கட்டி ஆட்சி அமைத்தனர். திருச்செந்தூர் முருகனையே வணங்கிச் சிறந்தனர்.

வெள்ளை ஆதிக்கம் இங்கே கால் ஊன்றிய போது அவர்களுக்கு வரிகட்ட மறுத்து வீரப்போருக்கும் துணிந்தவன் 46வது வீரபாண்டிய கட்டபொம்மன் ஆவான்.



1760–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் மூன்றாம் நாள் தோன்றி 1799–ஆம் ஆண்டு அக்டோபர் 16ல் கட்டபொம்மன் கயத்தாறில் தூக்குக்கயிறை முத்தமிட்டபடி மாய்ந்து மறைந்தது வரலாற்றுக் காவியம்.

39 ஆண்டு கால வரலாற்றுச் செதுக்கலில் கட்டபொம்மன் வாழ்ந்து மறைந்தது பொன்எழுத்தைப்போல் பதிக்கப்பட்டு விட்டது.

இங்கே ஓர் வீரம் விளைந்த வரலாற்றுப்போர் நடந்ததும்.. அந்த யுத்தத்தில் மறைந்தவர்களின் கல்லறைகளும்தான் இன்றும் கட்டபொம்மனின் பெருமையைப் பறை சாற்றுகின்றன.

வீரர்கள் அடக்கம் செய்யப்பட்ட ஒட்டப்பிடாரம் அருகேயுள்ள கல்லறைத் தோட்டத்தில் "1799–ஆம் ஆண்டு செப்டம்பர் 5–ஆம் நாளன்று நடந்த பாஞ்சாலங்குறிச்சிப் போரில் வீழ்ந்த லெப்டினண்டுகள் டக்ளஸ், காலின்ஸ், டார்மெக்ஸ், பிளேக், பீரங்கிக்கார பின்னி ஆகியோரின் நினைவாக" – எனக் கல்லின் மேல்வரிகள் பொறிக்கப்பட்டு நம் கவனத்தைக் கவருகின்றன.

தகுதி, திறமை, திட்டமிடும் வன்மை,
எதையும் திருத்தமாக – தெளிவாக
முடித்திடும் ஆற்றல், அறிவு,
ஆராயுந்திறன்– இத்தனையும் இன்று
மனிதனுக்குத் தேவை.

– கலைஞர்

இதேபோல் ஒட்டப்பிடாரத்திலிருந்து கவர்னகிரி செல்லும் சாலையில் பீரங்கிமேடு என்று ஒன்று இருக்கிறது. அங்கிருந்துதான் பீரங்கிக்கு மருந்து அடைத்து, கோட்டையைத் தகர்த்ததாக வரலாறு. பாஞ்சாலங்குறிச்சி வீரப்போரில் 48 சோல்ஜர்கள் மரணமடைந்துள்ளனர். அந்த வெள்ளையர்களுக்குரிய சமாதிக்கல்லறை ஒரே இடத்தில் அமைக்கப்பட்டு இன்றும் கட்டபொம்மனுக்குரிய வீரத்தின் இலக்கணமாகத் திகழ்கிறது.

இங்கு 17 வயதுள்ள சிப்பாய் ஒருவரின் கல்லறை மிக உயரமாகக் கட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வெள்ளை எதிரிகளால் அழிக்க முடியாத பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை 36 ஏக்கர் 66 செண்டு நீள அகல எல்லையைக் கொண்டதாக அமைந்திருந்தது.

ஐரோப்பிய அட்லாண்டிக் கடலிலிருந்து மத்தியதரைக் கடலுக்குப் பிரவேசிக்கும் வாயிலில் இருக்கும் துறைமுகம் "ஜிப்ரால்டர்". இதிலுள்ள கோட்டை இயற்கையாகவே குன்றுகளால் அமையப் பெற்றது. கர்னல் வெல்ஸ் பாஞ்சாலங்குறிச்சியை ஜிப்ரால்டர் கோட்டைக்கு ஒப்பிட்டுள்ளார் அந்நாளில்!

கட்டபொம்மன் கட்டிய பாஞ்சாலங்குறிச்சி கோட்டை வெள்ளையர்களால் அழிவுற்றாலும் ஊமைத்துரையால் பதனீரும் வெல்லச்சாறும் பிசையப்பெற்ற மண்ணால் 2.2.1801ல் மீண்டும் கோட்டை உருவாகியது.

27.3.1801ல் வெள்ளையர்களால் தாக்குண்ட பாஞ்சாலங்குறிச்சி கோட்டை மீண்டும் தகர்ந்தது.

பகதூர் வெள்ளையத்தேவர், தளபதி தானாபதிப்பிள்ளை, மாவீரன் சுந்தரலிங்கம், பொட்டிப் பகடை என்று சாதி வேற்றுமை பாராது, ஒற்றுமையுடன் அதிகாரத்திற்கு அடிபணியாமல், அடிமைகளாய் வாழாமல் நியாயத்திற்காகவே போராட வேண்டும் என்பதே பாஞ்சாலங்குறிச்சி வரலாறு!

அந்த வீரம் விளைவித்து அழிந்துபோன கோட்டை கலைஞரின் கைவண்ணத்தால் வடிவமைக்கப்பட்டு பஞ்சாலங்குறிச்சியின் வீரவரலாற்றுக்குச் சான்று பகரும் எழிலார்ந்த அக்கோட்டை முதல்வர் கலைஞர் அவர்களாலேயே, 18.8.1974ல் திறந்து வைக்கப்பட்டது.

7 ஏக்கர் நிலத்தில் அகழ்வாராய்ச்சித் துறையின் இரா.நாகசாமியால் அதை உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, சுற்றுலாக்காணவரும் பார்வையாளர்களின் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது. இங்குள்ள மணமேடைப் பகுதியில் எத்தனை வெயில் தாக்கினாலும் சூடு தெரிவதில்லை.

கோட்டை–உள்கோட்டைப் பகுதிகளில் தோண்டியபோது எடுக்கப்பட்ட வீரவாள்கள் – இரும்புக்குண்டுகள் – செம்பு நாணயங்கள் இன்றும் காட்சிப்பொருளாக நெல்லை அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன. இந்தத் தீரமிக்க மண்ணைத்தோண்ட தோண்ட இன்றும் எலும்புக்கூடுகள் தென்படுவதால் வீரம் விளைந்த மண்ணாகக் கருதப்படுகிறது.


அந்தத் தியாக வரலாற்றின் சந்ததியினர்க்கு 202 வீடுகள் மாண்புமிகு கலைஞர் அரசால் உருவாக்கப்பட்டு அவ்வீடுகளில் அவர்கள் குடியிருந்து வருகின்றனர்.

அதேபோன்ற, வீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு ரூ.1 கோடியில் முதல்வர் கலைஞர் ஆணையில் (கவர்னகிரியில் இலவச இல்லங்கள்) கட்டி முடிக்கப்பட்டு, அண்மையில் கலைஞர் அவர்களாலேயே திறந்துவைக்கப்பட்டுள்ளன.

கட்டபொம்மன் சந்ததியார் வழிபட்ட வீர சக்கதேவி ஆலயம் கோட்டையில் கட்ட 1945ல் கலெக்டர் விஸ்வநாதராவிடம் உத்திரவு வாங்கினர்.

1957ல் காவல்துறை துணை ஆய்வாளர் வி.ஆர்.ஆர். ராமலிங்க அய்யர் மீண்டும் சக்கதேவி ஆலயம் எழுப்பினார். வீரத்தின் விளைநிலமான இந்தப் பாஞ்சாலங்குறிச்சி – கட்டபொம்மனின் வீர வரலாற்றை இன்றும் நம்செவிகளில் உச்சரித்த வண்ணமிருக்கிறது. ஆண்டுதோறும் கட்டபொம்மனின் பிறந்தநாள் விழா அரசின் சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது.

– இளசை அருணா –



# கவிதைகளும் காலங்களும்!

— முதல்வர் கலைஞர்

"இன்னும் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு யாராவது ஒரு குறும்புக்காரர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதைகளை வெளியிடுகிறேன் என்று சொல்லி, அவர் எழுதிய சுயமரியாதைப் பாடல்கள், திராவிட நாட்டுப் பண்கள், தமிழ் இயக்கப் பாடல்கள் இவைகளையெல்லாம் புத்தகத்தின் முன் பகுதியில் வைத்துவிட்டு, பாரதிதாசன் பிறகு திருந்திவிட்டார் — ஆத்திகராக மாறிவிட்டார்; அந்தக் காலத்தில் எழுதியது "சுப்பிரமணியர் துதி அமுது" என்று கூட ஒரு புரட்டைச் செய்ய முடியும். எனக்குச் சந்தேகம் இது பாரதியார் யுகத்திலே நடந்திருக்குமோ என்று; சுப்பிரமணிய பாரதியார் யுகத்தில் நடந்திருக்கக்கூடும்! ஏனென்றால் அவர் பாடிய பாடல்கள் எவ்வளவு புரட்சிகரமானது என்பதை — சிலவற்றை மறைத்துவிட்டாலும்கூட மறைக்காமலே வெளியிடப்பட்ட சில கவிதைகள் இன்றைக்கும் மக்கள் மத்தியிலே பரவியிருக்கின்றன.

"பாப்பானை, ஐயர் என்ற
காலமும் போச்சே! — வெள்ளை
பரங்கியயைத் துரை என்ற
காலமும் போச்சே!"

— என்று பாரதியார் கவலைப்பட்டு அதைச் சொல்லவில்லை; அப்படிப்பட்ட காலமும் மாறிவிட்டது என்பதற்காக அதைச் சொல்கிறார்.

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்"


— என்கிறார் பாரதியார். அவைகளெல்லாம் வரிசையிலே ஒழுங்காக வைக்கப்படாமல் மாறி மாறி வைக்கப்பட்டு, பாரதியார் ஏதோ சமுதாயத்திலே புரட்சி செய்தவர் அல்ல என்பதைப் போலவும், சாதிமதங்களை வேரோடு வெறுத்தார் என்கின்ற நிலையை எடுத்துக்காட்டாமல், சமுதாயத்தில் ஒரு புரட்சிக்காரராக விளங்கினார் என்பதை எடுத்துக்காட்டாமல் அவரை முழுக்க முழுக்க ஒரு பக்தராக — தேவி உபாசகராக நாட்டிலே காட்டியிருக்கிறார்கள் என்றால் அவருடைய பாடல்கள் ஒழுங்காக வரிசைப்படுத்தப்படவில்லை என்பதுதான் அதற்குப் பொருள்.

அதற்காகத்தான் சொல்கிறேன். இந்தப் பாடல்களைக் கூட எதிர்காலத்திலே ஒழுங்காக வரிசைப்படுத்தாமல், வேண்டுமென்றே பாரதிதாசனுக்குக் களங்கம் கற்பிக்க அத்தகைய முயற்சியிலே கூட சிலர் ஈடுபடக்கூடும். ஏனென்றால் அவர் எழுதிய 'சுப்பிரமணியர் துதிஅமுது, 'கதர்பாட்டு' இவைகளெல்லாம் அவ்வளவு சிறந்த பாடல்கள்!

(18–10–1998ல் நடைபெற்ற கவிஞர் ஈரோடு தமிழன்பன் நூல்கள் வெளியீட்டு விழாவில் பேசியதில் இருந்து.)

# விடுதலைப் போராட்டங்களில் ஆவணக் காப்பகங்களின் பங்கு!

எம்.எஸ்.பாண்டியன்



புதுதில்லி தேசிய ஆவணக்காப்பகம்

**'இந்தியத் துணைக் கண்டத்தில், மற்ற எல்லா மாநிலங்களையும் விட தமிழ்நாடு தான் — பிளாஸி யுத்தத்திற்கு முன்பாகவே சுதந்திரப் போராட்டத்தைத் துவக்கியது!'— என்பது போன்ற பல அரிய உண்மைகள் ஆவணக் காப்பகங்கள் மூலமாகவே நமக்குத் தெரிய வருகின்றன என்பதை உணர்த்தும் கட்டுரை இது:**

ஒரு நாட்டுக்கு எல்லைகள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அவைகளைப் பாதுகாப்பது. அதையும் மீறி அந்த நாட்டின் மீது அந்நியர் படையெடுத்தால், அந்நாட்டு மக்கள் ஒன்று போரிட வேண்டும் அல்லது அன்னியர்களிடம் அடிமையாக வாழவேண்டும். முன்னதைத் தேர்ந்து அன்னியர்களை நாட்டைவிட்டு விரட்ட நடத்தப்படுவதே சுதந்திரப் போராட்டமாகும். உலகில் பல நாடுகள் முதலில் அடிமைப்பட்டு பின் சுதந்திரத்துக்காகப் போராடி அந்தப் போராட்டங்களில் வெற்றி பெற்றுப் பின்னர் அதன் பயனை இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய விடுதலைப் போராட்டங்களில் கலந்துகொண்ட வீரர்களே வரலாற்றில் இடம்பெறுகின்றார்கள். அவர்கள் பொதுமக்களாயினும், இராணுவ வீரர்களாயினும் அவர்களே விடுதலைப் போராட்ட வரலாற்றில் தியாகிகளாக, கதாநாயகர்களாக இடம்பெற்றுவிடுகிறார்கள்.

ஐக்கிய அமெரிக்கா, தனது சுதந்திரத்துக்காக 1775–1783ஆம் ஆண்டுகளில் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டது. இதில் ஆபிரகாம் லிங்கனின் பங்கு போற்றத் தகுந்ததொன்றாகும். அமெரிக்க மக்களின் அடிமை விலங்கொடித்தவன் என்று வரலாறு கூறும்! 1917இல் இரஷ்யப் புரட்சியில் உதித்தவன் லெனின். இவனே ஏகாதிபத்திய மன்னராட்சியை நீக்கி மக்களின் அபிமானமிக்க தலைவனானான். கி.பி.1789இல் ஏற்பட்ட பிரஞ்சுப் புரட்சியும் ஒரு சுதந்திரப் போராட்டமே! இது பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து நடத்தியதாகும். இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். ஒரு நாட்டு மக்கள் தங்கள் நாட்டில் தோன்றும் சர்வாதிகாரிகளை எதிர்த்துப் போரிடுவதையும்; ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டினரின் காலனி ஆட்சியை எதிர்த்துப் போரிடுவதையும்; கடந்த பல நூற்றாண்டுகளாக உலகம் கண்டுவருகிறது. இந்த நூற்றாண்டிலே இந்தியாவும், பாகிஸ்தானும், பர்மாவும் இலங்கையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அடிமைத்தளையிலிருந்து விடுவித்துக்கொண்டு

சுதந்திரக் காற்றைச் சுவாசித்தன.

விடுதலைப் போராட்டக் காலகட்டங்களில் பொதுமக்களும், மக்களை நேசித்த தலைவர்களும், எப்படிப் பாடுபட்டார்கள்; தங்கள், உடல், பொருள், ஆவி இவைகளைச் சுதந்திரத்தின் விலையாகத் தந்தார்கள் என்பதையெல்லாம், போராடிப்பெற்ற சுதந்திரத்தை அனுபவிக்கும் இன்றைய சமுதாய மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்! அத்தகைய சீரிய சிந்தனை இல்லையேல் மீண்டும் நாம் ஒரு அடிமை வாழ்வுக்கு உட்பட வேண்டிய சூழல் ஏற்படலாம்.




'சைமன் கமிஷனே திரும்பிப் போ', - சென்னை.

## இந்திய சுதந்திரப் போராட்டம்

முதல் இந்திய சுதந்திரப் போராட்டம் வங்கத்தில் பிளாசி யுத்தம் தொடங்கிய 1757ஆம் ஆண்டிலிருந்தே தொடங்கி விட்டதாக இன்றைய இந்திய வரலாற்றாய்வாளர்கள் கூறுகிறார்கள். (1857 ஆம் ஆண்டின் சிப்பாய்க் கலகம் முதல் சுதந்திரப் போர் அல்ல என்பது அத்தகையோர் கருத்து) எனினும் நம் தமிழகத்தில் கி.பி.1755 இல் சுதந்திரப் போராட்டம் தொடங்கப்பட்டதாகவும் இதற்குப் பாளையக்காரர்களும் குறுநில மன்னர்களும் முன்னணியில் நின்றார்கள் என்று நூலோர் பலர் எழுதியுள்ளார்கள். நம்நாட்டின் வரலாற்றை எழுதும்போது சுதந்திரத்துக்கு முன்பு என்றும் சுதந்திரத்துக்குப் பின்பு என்றும் இரு கூறாகப் பிரிக்கலாம்.

இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றைப் பல்வேறு கோணங்களில், பல்வேறு நபர்கள், பல்வேறு தலைவர்கள் பற்றித் தங்கள் தங்கள் போக்கில் எழுதிவிட்டார்கள். சிலர் இன்னும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். முற்றுப் பெறவில்லை. ஆயினும் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றைத் தென்னகம் தனியாகவும், வடவகம் தனியாகவும் பிரித்து வரலாறுகள் எழுதப்பட்டு வருகின்றன. இதனை ஒருமைப்படுத்தி எழுதுவதே சாலச்சிறந்தது. இதனை எப்படி – யாரால் செய்யமுடியும் என்பதே கேள்விக்குறி! தனி மனிதரோ, தனிக் கட்சியினரோ, செய்வதை விட அரசே இதனைச் செய்ய முடியும். அதற்கு அனைத்து ஆதாரங்களையும் வழங்கவல்லது ஆவணக் காப்பகங்களே!

## வரலாற்றில் ஆவணக் காப்பகங்களின் பங்கு

ஆவணக் காப்பகங்களில் பொது ஆவணங்கள் என்றழைக்கப்படும் – பொதுநல அரசுகளால் உருவாக்கப்படும் ஆவணங்களும், தனிப்பட்ட நபர்களால் உருவாக்கப்படும் ஆவணங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நமது இந்தியப் பெருநாட்டின் தலைநகரான டெல்லியில் உள்ள தேசிய ஆவணக்காப்பகம் இத்தகைய தேசீய வரலாற்று நூல்கள் வரைய முன்னோடியாக விளங்குகின்றது. அதுவே இச்செயற்கரிய செயல்களைச் செய்ய முடியும்.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆரம்பக் காலம் தொடங்கி (கி.பி.1600), நம்நாடு விடுதலை அடைந்த 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 வரையிலான இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்று நிகழ்ச்சிகள் யாவும் பொது ஆவணங்களில் கிடைக்கப்பெறும் வாய்ப்புள்ளன. அவற்றில் சென்னை, மும்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற தலைநகர்களில் உள்ள ஆவணக்காப்பகங்கள் இதற்கு உதவும் அரியதோர் வாய்ப்பைப் பெற்றுள்ளன. காரணம்; இந்த நான்கு ஆவணக் காப்பகங்களும் இந்திய சுதந்திரத்துக்கு முன்பிருந்தே இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் நிர்வகிக்கும் ஆட்சி அரசியல் அதிகாரங்கள் கோலோச்சிய ராஜதானிகளாக விளங்கிவந்தன. நம்நாட்டின் கலை, பண்பாடு, சமூகம், அரசியல், வாணிபம் (விஞ்ஞானம் தவிர) போன்ற அனைத்துத் துறை சார்ந்த ஆவணங்களையும் தன்னகத்தே வைத்துக்கொண்டுள்ளன.

இந்த அளவிலே டில்லி தேசிய ஆவணக் காப்பகம் எவ்வாறு



சுக்தேவ்



பகத்சிங்

சுதந்திரப்போராட்ட வேள்வியில் தன்னையும் ஈடுபடுத்திக்கொண்டு வருகிறது என்பதைச் சற்று அறிவோமாக! இத் தேசிய ஆவணக் காப்பகம் இதற்கு முன்பு இம்பீரியல் ரெக்கார்டு ஆபீஸ் என்று அழைக்கப்பட்டு, கல்கத்தாவில் 1891 மார்ச் 11 முதல் இயங்கி வந்தது. இந்தியாவின் தலைநகர் கல்கத்தாவிலிருந்து புதுடில்லிக்கு 1911இல் மாறிய பின்னர் தொடர்ந்து பலதுறைகள் அங்கிருந்து இடம் பெயர்ந்தன. அதில் ஒன்று இத்தேசிய ஆவணக் காப்பகம். இது அமைந்துள்ள இன்றைய கட்டடம் 1926ல் கட்டப்பட்டது. புதுடில்லி 'ஜன்பாத்' வீதியில் உள்ளது. எனினும் 1937–ல் தான் இந்தக் காப்பகம் முழுஅளவில் ஆவணங்களைப் பெற்று இயங்கத் தொடங்கியது. கல்கத்தா இம்பீரியல் ரெக்கார்டு ஆபீஸ் ஆவணங்கள் யாவும் புதுடில்லிக்கு மாற்றப்பட்டன. சென்னையில் 1748ஆம் ஆண்டு தொடங்கி இன்றைய நாள் வரையிலான அரசுத்துறை மற்றும் சில தனியார் ஆவணங்கள் யாவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த அலுவலக ஆவணங்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1) கிழக்கிந்தியக் கம்பெனி ஆவணங்கள் கி.பி.1748 முதல் கி.பி. 1856 வரை.

2) பிரிட்டிஷ் மன்னராட்சி ஆவணங்கள் கி.பி. 1857 முதல் கி.பி. 1947 வரை.

3) இந்திய சுதந்திரத்துக்குப் பிற்பட்ட, சுதந்திர இந்தியாவின், அதாவது 1947க்குப் பிறகு உள்ள ஆவணங்கள்.

### தேசிய ஆவணக் காப்பகமும் சமூகப் பணியும்

இந்திய சுதந்திரத்துக்குப் பிறகே 'இம்பீரியல்' என்ற பெயர்மாறி தேசிய ஆவணக் காப்பகம் என்றழைக்கப்படும் இன்றைய வழக்கு வந்தது. இதன் செயற்பாடுகள் காலப்போக்கில் பலப்பல முன்னேற்றங்களுக்குட்பட்டு இதனால் பெரும் மாறுதல்களை அடைந்துள்ளது. மேலும், தற்காலத்தில் இது ஒரு வழிகாட்டியைப் போல் தேசிய நீரோட்டத்தில் தன்னை அடையாளங்காட்டத் துவங்கியது. இதற்கு முன்னரே பலர் அடித்தளமிட்டனர். அவர்களில், ஜி.டபிள்யூ. பாரஸ்ட் சாமுவேல் சார்லஸ், எஸ்.சி. ஹில் போன்ற ஆங்கிலேயர்களும், அப்துல் அலி சுரேந்திரநாத் சென் போன்ற இந்தியர்களும் இந்த ஆவணக் காப்பகத்தை மிகவும் வலுவுடையதாக்கினார்கள். தேசிய ஆவணக்காப்பகம் தனது ஆவணங்களை வரலாற்று ஆராய்ச்சிக்காக 1939 முதல் பயன்படுத்த வாய்ப்பளித்தது.




அப்துல் அலி

இதன் விளைவாகப் பல்வேறு துறை சார்ந்த ஆவணங்களும் உலகிற்கு அறிமுகமாயின. யுனஸ்கோ போன்ற ஐக்கிய நாடுகள் சபை நிறுவனம் இதன் ஆக்கப்பணிகளுக்கு உதவின. சுதந்திரப் போராட்டக் கால ஆவணங்கள் யாவும் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. இவற்றில் அவர்கள் புதிய யுக்திகளைக் கையாளத் தவறவில்லை. அவைகளில் இரண்டு நிகழ்ச்சிகளை இங்கே கூறவேண்டும்.

கடந்த 1995ல் தேசிய ஆவணக்காப்பகம், ஜாலியன் வாலாபாக் படுகொலைகள் குறித்த ஆவணங்களை அக்காலத்தில் பத்திரிகைச் செய்திகள் மற்றும் படத்தொகுப்புகள் யாவற்றையும் ஒருங்கிணைத்து இந்திய நாடு முழுவதும் முக்கியத் தலைநகரங்களில் பொருட்காட்சி அரங்குகள் அமைத்து ஆதாரப் பூர்வமான செய்திகளை நாட்டுக்கு வழங்கியது.

நம் தலைநகர் சென்னையிலும், இத்தகைய பொருட்காட்சியை அவர்கள் நடத்தினார்கள். எழும்பூர் பொருட்காட்சி அரங்கில் நடைபெற்ற, இந்த விழாவில் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு ஆவணக் காப்பகமும் பங்கு பெற்றது. மறைந்த விடுதலைப் போராட்ட வீரர் ஆர்.ஆர்.தளவாய் இவ் விழாவில் கலந்து கொண்டு நூற்றுக் கணக்கான மாணவர், மாணவிகள் இடையே சுதந்திரப் போராட்ட வரலாற்று நிகழ்ச்சி களைத் தொகுத்துப் பேசினார்.

இத்தகைய முயற்சி ஒரு புதிய அணுகுமுறை என்றால் மிகையல்ல. தேசிய ஆவணக் காப்பகம் தனது வரலாற்று ஏடுகளையும் போட்டோக்களையும் எடுத்துக்கொண்டு நாடு முழுதும் ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்து மக்களை நேரில் சந்தித்தார்கள். மக்களின் உணர்வுகளை இதன் மூலம் அவர்களால் பதிக்க முடிந்தது. 1919ல் நடந்து முடிந்துபோன ஒரு வரலாற்று முக்கியம் கொண்ட பழைய நிகழ்ச்சியை அதனை நேரில் கண்டறியாத இந்திய வமிசா வழியினா் மத்தியில் அறிமுகப்படுத்தி, அதன் வழியாக மக்களின் மன வியாகூலங்களை ஓசைப்படாமல் எழுப்பிவிட்டனர். 'பஞ்சாப் படுகொலைகள்' என்ற நிகழ்ச்சி, 13.4.1919ல் நடந்தது என்றாலும், உலகினை உலுக்கிய அந்த நிகழ்ச்சிகள் பற்றிப்பேசாத நபர்களே உலகில் இல்லை எனலாம். இந்த நிகழ்ச்சியின் தாக்கம் இன்னும் நம்மிடையே காணப்படுகின்றது.



எஸ்.சி.ஹில்

தவிர, கடந்த 1997 ஏப்ரல் மாதத்தில் மற்றொரு புதுமையை இந்திய தேசிய ஆவணக் காப்பகம் நிகழ்த்தியுள்ளது. இதுவும் வித்தியாசமானது. வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் தரும் இந்த தேசீய ஆவணக்காப்பகம், இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஒரு மைல்கல்லாக விளங்கும் பகத்சிங், ராஜகுரு, சுக்தேவ் என்ற மூன்று புரட்சி வீரர்களின் தூக்கிலிடப்பட்ட துயர் நிகழ்ச்சி குறித்த ஒரு சடங்கு முறையிலான ஏற்பாடுகள் மூலம் உலகறியச் செய்தார்கள். இதன் வரலாற்றுப் பின்னணி :

சென்னையில் 1927இல் நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டின் இலக்கு 'பூரண சுயராஜ்யமே' என்று பிரகடனப்படுத்தப்பட்டது. அதே மாநாட்டில் 'சைமன் கமிஷனே' திரும்பிப்போ என்ற கோஷமும் எழுப்பப்பட்டது. இந்த சைமன் கமிஷன் முக்கிய நகரங்களுக்கு விஜயம் செய்தபோது அவர்களுக்கு எதிராகக் கோஷமிட்டவர்கள் மீது போலீஸ் அடக்கு முறையைப் பயன்படுத்தியது. இலக்னோவில் நேருவும், வல்லபபந்தும் லத்திக் கம்பால் அடிபட்டுக் காயமுற்றனா். இலாகூரில் இலஜபதிராய் அடிபட்டுக் காயமுற்றார். இதுவே அவரது உயிருக்கு எமனானது. அவரது மரணத்துக்கு ஒரு மாதம் கழித்து கொடூரமான முறையில் நடந்துகொண்ட 'சாண்டர்ஸ்' என்ற போலீஸ் அதிகாரி பட்டப்பகலில் பகத்சிங், ராஜகுரு, சுக்தேவ் ஆகிய மூவராலும் சுட்டுக் கொல்லப்பட்டான். இதனால் தொடரப்பட்ட வழக்கே இலாகூர் சதி வழக்காகும். இதில் புரட்சியாளர்களாக வர்ணிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட மூவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. 23.3.1931–ல் அவர்களை இலாகூர் மத்திய சிறைச்சாலையில் அன்றைய பிரிட்டிஷ் அரசு தூக்கிலிட்டது.

இந்தத் துக்ககரமான நிகழ்ச்சி நடைபெற்றபோது கராச்சியில், காங்கிரஸ் மாநாடு 5.3.1931ல் நடந்து முடிந்திருந்தது. அந்த மாநாட்டில் கலந்துகொண்ட இளைஞர்கள் காந்தியடிகளுக்குக் கறுப்புக் கொடி காட்டி கோஷம் போட்டார்கள். இதற்குக் காரணம் இலாகூர் சதி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நூற்றுக்கணக்கான இந்திய இளைஞர்கள் அன்று சிறைக்கூடத்தில் கொடுமைப்படுத்தப்பட்டதை பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் காந்தியடிகள் தட்டிக் கேட்கவில்லை என்பதன் எதிரொலியே. இதே நேரத்தில்தான் காந்தி – இர்வின் ஒப்பந்தமும் நடந்து முடிந்திருந்தது.

பல்வேறு போராட்ட நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அடிப்படையாக இருந்தது 23.3.1931 தேதியில் நடந்த அந்த மூவரது தூக்குமேடை நிகழ்ச்சியே. பின்னர் அவர்களது உடல்கள் 31.3.1931 அன்று எரியூட்டப்பட்டன. அதில் சுக்தேவின் அஸ்தியை சட்லஸ் நதிக்கரையிலிருந்து அவரது தாய் ரல்லிதாபா் எடுத்து வைத்திருந்தார். இந்த அஸ்தியை புனிதமாகக் கருதி இந்தியப் பிரிவினைக்குப் பிறகு இந்தியாவுக்கே எடுத்துவந்தார். தாம் இறக்கும் தருவாயில் தம் இளையமகனிடம் அந்த அஸ்தியை ஒப்படைத்துச் சென்றார். உத்திப் பிரதேசத்தில் ஹாபர் என்ற



சர் ஜார்ஜ் பாரஸ்ட்

இடத்தில் தம் வீட்டில் அதனைப் பொக்கிஷமாகக் கருதி, பாதுகாத்து வந்தான் சுக்தேவின் தம்பி. அப்போதே இதனைத் தேசிய ஆவணக் காப்பகத்திற்குக் கொடுத்துவிடுமாறு அவரது மனைவி சந்தோஷ் தாபரிடம் கூறியிருந்தான். ஆனால் காலங்கடந்த நிலையில், அந்தப் புனித அஸ்தியை தேசிய ஆவணக் காப்பகத்தில் உள்ள மியூசியத்தில் வைத்துப் பாதுகாக்கும் பொருட்டு சுக்தேவின் தம்பி மனைவி, திருமதி. சந்தோஷ் தாபர் 22.4.1937 அன்று இந்திய தேசிய ஆவணக் காப்பக இயக்குநர்/தலைவர் திரு.எஸ்.சர்க்கார் அவர்களிடம் வழங்கினார். இதனைப்பற்றிக் குறிப்பிட்ட திரு.எஸ்.சர்க்கார், இது பெருமைக்கும் பாராட்டுதலுக்கும் உரியதொன்றென்றும், வருங்காலச் சந்ததியினருக்கு ஓர் எழுச்சியூட்டும் காரியம் என்றும் சொன்னார்.

இந்தியத் துணைக்கண்டத்தில் அனைத்து மாநிலங்களிலும் தமிழகமே சுதந்திரப் போராட்டத்தினை பிளாசியுத்தத்துக்கும் முன்னரே துவக்கியது. சுமார் 18 பாளையக்காரர்கள் அன்றைய நாட்களில் வெள்ளை அரசினை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறார்கள். அன்று பாளையக்காரர்கள் எதிர்த்தது போன்றே மக்கள் இந்த 20 ஆம் நூற்றாண்டில் தனி நபர்களாகவோ, கூட்டாகவோ சேர்ந்து அன்னிய ஆட்சியை எதிர்த்தனர்; போராடினர்; மாய்ந்தார்கள்; வீழ்ந்தார்கள்; தூக்குக் கயிற்றில் தொங்கினார்கள். இந்த வரிசையில் இனம் தெரிந்தவர்களும், இனம் தெரியாதவர்களுமாக ஏராளமானோர் உண்டு. இவர்களை வெளிச்சத்துக்கு கொண்டுவரவேண்டியது ஆவணக் காப்பகங்களின் தலையாய கடமையாகும்.

புதுடில்லி தேசிய ஆவணக் காப்பகம், இதுபோன்ற செயல்களைச் செய்து மற்ற ஆவணக் காப்பகங்களுக்கு வழிகாட்டியாய்த் திகழ்கின்றது. அன்மையில் சென்னை ஆவணக் காப்பக விழா ஒன்றில் பேசிய தமிழகக் கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பதிவு செய்வதில் டெல்லியின் தனித்தன்மையை பாராட்டினார். இதே போன்று தமிழகத்திலும் பெரிதும் மக்களால் விரும்பத் தக்க வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்து மக்கள் சேவைக்கு அர்ப்பணிப்போம். வாழ்க ஆவணக் காப்பகம்! வளர்க அதன் பயன்மிகு பணிகள்!

★ ★ ★

# காலமும் காயமும்

கவிஞர் 'பாப்ரியா'



காலம் -
கருணையுள்ளது.

குழந்தை அழுகுரல்
கேட்டவுடன்
பால்சுரக்கும் - தாயின்
மனம் போன்றது.

காலம் -
தன்னை கைக்கொள்ள
விரும்புபவர்களுக்குக்
கதவுகளை -
கரிசனமின்றித் திறந்தே
விட்டிருக்கிறது.

காலத்தை
சரியாய் கைப்பற்றியவர்கள்.

'சாதனையாளர் பட்டியலை'
சந்தேகத்திற்கிடமின்றித்
தக்கவைத்துக்
கொள்கிறார்கள்.

மற்றவர்கள் -
வாழ்க்கையில் காயம்பட்டுப்
போயிருக்கிறார்கள்.



# மகாத்மா காந்தியும் அண்ணல் அம்பேத்கரும்



- கலைமாமணி பட்டுக்கோட்டை குமாரவேல்

இந்திய மக்கள் சுதந்திரத்தோடு வாழ, இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர் மகாத்மா காந்தி. சுதந்திர மடைந்த இந்திய மக்கள் சுதந்திரமாக வாழ அரசியல் சட்டம் வகுத்துக் கொடுத்தவர் அண்ணல் அம்பேத்கர்.

இருவருமே உலக அரசியல் சட்டம் பயின்ற மேதைகள். இந்திய நாடு சுதந்திரம் பெற்றதும், இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கும் பொறுப்பை மகாத்மாக காந்திஜி அண்ணல் அம்பேத்கரிடம்தான் ஒப்படைத்தார்.

காந்திஜி அவரைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் அம்பேத்கரின் பரந்த படிப்பும், ஆழ்ந்த அறிவும்தான். வியக்கத்தக்க நெஞ்சுரம் கொண்ட அவருடைய வரலாறு மனித வளர்ச்சிக்கு ஒரு வெற்றிப் படிப்பினையாகும்.

அண்ணல் அம்பேத்கர் பம்பாய் மாநிலத்தில் ரத்னகிரி மாவட்டத்திலுள்ள 'அம்பேத்' என்ற சிற்றூரில் தாழ்த்தப்பட்ட ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். 1883 ஏப்ரல் 14ல் பிறந்து 1946 டிசம்பர் 6 முடிய 63 வயது வாழ்ந்து வரலாறாக மறைந்தவர்.

இவருடைய இயற்பெயர் பீம்ராவ். அவருடைய பெற்றோருக்குப் பதினான்காவது கடைசிப் பிள்ளை. பம்பாயில் கல்லூரிப் படிப்பை முடித்தவர். பொருளாதாரம் - அரசியல், தத்துவம் முதலியவற்றை அமெரிக்காவில் கற்றுத் தேர்வு பெற்ற எம்.ஏ. பட்டதாரி.

இங்கிலாந்தில் சட்டம் பயின்று வழக்கறிஞராகத் திரும்பியதும் பல வழக்குகளின் வெற்றி இவரைச் செல்வந்தர் ஆக்கியது.

தாழ்த்தப்பட்ட ஏழைக் குடும்பத்தில் பிறந்து பள்ளிப் படிப்பிற்காக அவர் பட்ட துன்பங்கள், மேல்தட்டு மக்கள் அவருடைய வளர்ச்சிக்குத் தந்த தொல்லைகள் அவர் மனதை மிகவும் பாதித்து விட்டது. பல பள்ளிகளில் அவர் படிக்கவே இடம் தர மறுத்துவிட்டனர். மற்ற மாணவர்களோடு இணையாக உட்கார்ந்து கல்வி கற்கவும் இயலவில்லையே என்று வருந்தியிருக்கிறார்.

இவ்வாறு இளம் வயதில் பட்ட பாடும், கொடுமையும், எதிர்காலச் சந்ததிகளுக்கு வந்துவிடக்கூடாது என்று அவர் ஓயாமல் உழைத்தார். அவருடைய உழைப்பில் வரும் வருமானத்தில் பெரும் பகுதியை எல்லா வகையான நூல்களையும் வாங்கிப் படித்துத் தனது அறிவாற்றலை வளர்த்துக்கொண்டார்.

இந்திய மக்கள் சாதி, மதம் இவைகளால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகள் அவரைச் சிறந்த மத ஆராய்ச்சியாளராக ஆக்கியது. தீவிரவாதியாக்கியது. சிறந்த சட்ட நிபுணராக்கியது. கடவுள்களையும் அதன் ஆபாச ஆதாரங்களையும் காட்டி விளக்குவதில் அவருக்கு இணை அவரேதான்.

இவருடைய அறிவையும், ஆற்றலையும், துணிவையும் கண்ட மகாத்மா காந்தியும் இந்திய முதல் பிரதமர் நேருஜியும் அவரை இந்திய அரசின் முதல் சட்ட அமைச்சராக்கி இந்திய அரசின் அரசியல் சட்டத்தையே எழுதச் சொன்னார்கள். அவர் தலைமையில் உருவாக்கப்பட்ட சட்ட அமைப்புதான் இப்பொழுது நம்மை ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.

அவரால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டமே ஆட்சிக்கு வரும்போது தன் இன மக்களுக்கு நல்ல பயனை அளிக்க முடியாது என்று தெரிந்த அம்பேத்கர் தாழ்த்தப் பட்டோருக்காக ஒரு சங்கம் நிறுவி, அதற்கு அவரே தலைமை தாங்கிப் போராடினார்.

ஒரு நாட்டு மக்கள் எல்லோரும் எல்லா நன்மைகளும் பெற்று வாழவேண்டுமானால், மக்கள் ஒருமைப் பாட்டுணர்வோடு வாழ வேண்டும். அந்த ஒருமைப் பாட்டுணர்வு மக்கள் வாழ்வில் மலர்ந்திட முதலில் சமுதாய சீர்திருத்தம் அவசியம் வேண்டும் என்று தன் பேச்சாலும், எழுத்தாலும் சிந்திக்க வைத்தவர் டாக்டர் அம்பேத்கர்.

ஒவ்வொரு மனிதனும் அவரவர் சாதியை விட்டு வேறு சாதியில்தான் திருமணம் செய்ய வேண்டும் என்று மைய அரசு அவசரச் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று அமைச்சரவை யிலேயே சொன்னதோடு மட்டுமல்லாமல், சாதியை ஒழிக்க வழி என்ற நூலையும் எழுதியிருக்கிறார்.

★★★

# இருட்டான பகல்

அவர்கள் இருட்டைத் தவிர வேறொன்றும் அறிந்ததில்லை. அவர்கள் பார்த்த நிறம் கறுப்பு மட்டுமே. வானவில்லின் வர்ண ஜாலம், பசும்புல்லின் ரம்மியம், செம்மண் பூமியில் மழைத்துளி வரையும் கோலங்கள், குழந்தையின் வெள்ளைச் சிரிப்பு, எதுவுமே அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் பார்வை எனும் வரம் பறிக்கப்பட்டவர்கள்...தொலைத்தவர்கள்...

சிறிது நேரம் மின்சாரம் தடைப்பட்டாலே பதறிப்போய் ஆயிரம் வழிதேடும் நாம், வாழ்நாள் முழுவதும் இருட்டில் வாழும் பார்வையற்றோரின் தவிப்பை எண்ணிப் பார்த்திருக்கிறோமா? அவர்களுக்கு உதவ முயற்சியாவது செய்திருக்கிறோமா? பதில் நம் மனதுக்குத் தெரியும்!

***பெரிய உதவி***

என்னால் எந்த விதத்தில் உதவ முடியும் என்று யோசிக்கிறீர்களா? ஏன் முடியாது? உதவ வேண்டும் என்ற எண்ணமே போதுமே. கண்தானம்...எவ்வளவு அற்புதமான வழி இது! மனிதனை மகாத்மாவாக்கும் மகத்தான காரியம்! பார்வையற்ற ஒரு மனிதனுக்குச் சக மனிதன் எளிதாகச் செய்யக்கூடிய மிகப் பெரிய உதவி இது! ஓர் உயிருக்கு ஒளி தந்து வாழ்க்கையை வசந்தமாக்கும் செயல்!

கண்தானம் குறித்து சற்று விரிவாகத் தான் தெரிந்துகொள்ளலாமே? முதன் முதலில் கண்தானம் செய்தவர் – அதாவது புராணங்களின்படி சிவனுக்கே தன் கண்ணை அளித்த கண்ணப்ப நாயனார்தான்!

***என்ன செலவு?***

கண்தானத்தை மிக எளிதாகச் செய்யலாம். இதற்காக நாம் செலவிட வேண்டியது ஒன்றுமில்லை. நம் எண்ணத்தை ஒரு தாளில் பூர்த்தி செய்வது மட்டுமே செய்ய வேண்டிய ஒரே வேலை. இந்த வேலையைச் செய்வதால் நமக்கு இழப்பு எதுவுமில்லை. பார்வையற்ற ஒரு சக மனிதனுக்கு வாழ்வே ஒளிமயமாகிறது.

கண்தானம் என்றால் என்ன? நாம் இறந்தவுடன், கண்களைக் குறைபாடுள்ள ஒருவர் பயன்பெறத் தானமாக அளிப்பதே கண்தானம். ஒருவர் இறந்த ஆறு மணி நேரத்திற்குள் கண்தானம் செய்யவேண்டும். அதற்கு மேல் காலம் தாழ்த்தினால் பயன்படாது.

யார் செய்யலாம்? எந்த வயதில் ஒருவர் இறந்தாலும் கண்தானம் செய்யலாம். ஆண் பெண் பேதமில்லை. கண் நோயால் அவதிப்பட்டவரின் கண்ணையும் பயன்படுத்த முடியும். கண்ணாடி அணிந்தவர்கள், புரை (காட்ராக்ட்) உள்ளவர்கள் போன்ற எல்லோரும் கண்தானம் செய்யலாம்.

யார் செய்ய இயலாது? மஞ்சள் காமலை, மூளைக் காய்ச்சல், நாய்க்கடியால் இறந்தவர்கள் தங்கள் கண்களைத் தானம் செய்ய இயலாது. கண்ணுக்குள் புற்று நோய் வந்தவர்கள் மற்றும் இறப்பின் காரணத்தை அறிய இயலாதவர்கள் கண்தானம் செய்யமுடியாது.



### கண்தானம் செய்வது எப்படி ?

முதலில் அருகிலுள்ள கண் வங்கியை அணுகுங்கள். கண்தானம் செய்ய விரும்பும் ஒப்புதல் பத்திரத்தை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும். உங்கள் நெருங்கிய உறவினர் மகள்/மகன் (அ) கணவன்/மனைவி இறப்பிற்குப் பின் கண்களைத் தானமாகத் தரும் பொறுப்பை ஏற்க முழு ஒப்புதலுடன் கையொப்ப மிடவேண்டும். இப்பத்திரத்தைக் கண் வங்கியில் ஒப்படைத்தால் அவர்கள் உங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்வார்கள். அடையாள அட்டை ஒன்றையும் தருவார்கள்.

இந்த அட்டையில் உங்கள் பெயர், முகவரி, நீங்கள் கண்தானம் செய்துள்ள விவரம், கண் வங்கியின் முகவரி, தொலைபேசி எண்கள் போன்ற அனைத்து விவரங்களும் குறிக்கப்பட்டிருக்கும். இந்த அட்டை நெருங்கிய உறவினர் அருகில் இல்லாத நேரங்களில் மற்றவர்கள் உங்கள் கண்தான விருப்பத்தை அறியவும், ஆவன செய்யவும், உதவியாக இருக்கும். பெயரைப் பதிவு செய்யாதவர்கள்கூட, இறுதிக் காலத்தில் கண்தானம் செய்ய விரும்பினால் கண்வங்கியைத் தொடர்பு கொண்டு அவ்வாறே செய்யலாம். கண் வங்கியில் பெயரைப் பதிவு செய்தவர்கள் மட்டுமே கண்தானம் செய்யவேண்டும் என்ற கட்டாயமில்லை. விபத்தில் மூளை இறப்பு ஏற்படும் நபர் சிறுநீரகம், இதயம் போன்ற உறுப்புகளைத் தானம் செய்யும் போது கண்தானமும் செய்யலாம்.

### பாதுகாக்கும் முறை

கண்தானம் செய்யப் பதிவு செய்து கண்தானம் கொடுக்க விரும்பியவர் மறைந்த பின், மறைந்தது பற்றி உடனே கண் வங்கிக்குத் தகவல் கொடுக்கவேண்டும். மருத்துவர் வரும்வரை கண்களில் தூசிபடியாமல் தூய்மையாக இருக்கக் கண்களை மூடி, மேலே ஈரப்பஞ்சைப் பரப்பிவைக்கவும்.

இறந்தவர் உடலிலிருந்து கண்களை எடுக்கும் பணிக்கு 'எனுகிளேஷன்' (ENUCLEATION) என்று பெயர். இப்பணிக்கு 10 நிமிட நேரமே போதுமானது. கண்களை எடுத்த பின், அப்பொழுதே செயற்கைக் கண்களைப் பொருத்திவிடுவார்கள். ஆகையால் இறந்தவர் முகத்தில் எந்தவித மாற்றமும் இருக்காது.

### யாருக்குப் பொருத்தலாம் ?

தானமாகப் பெறப்பட்ட விழிகளை அப்படியே பார்வையற்ற நோயாளிகளுக்குப் பொருத்துவார்கள் என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். ஆனால் இது உண்மையல்ல.

கண்களில் உள்ள ஒளிபுகும் விழி வெளிப்படலத்தை (கார்னியா) மட்டும் நீக்கி, கார்னியா பாதிக்கப்பட்ட நோயாளிக்குப் பொருத்துவார்கள். இதற்கு "விழிவெளிப்படலம் மாற்றுச் சிகிச்சை" என்று பெயர். 'கண்களை மாற்றி வைப்பது' என்று பொதுவாகக் கூறுவது விழிவெளிப்படலம் மாற்றி வைப்பதையே குறிக்கும்.

**வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தால், ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் ஒரு வரலாறு உண்டு. கடந்த கால வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தால்தான் எதிர்கால முன்னேற்றத்திற்கு வழி கிடைக்கும். – கலைஞர்**

கார்னியா பாதிக்கப்பட்டவர்கள், அதில் குறைபாடுள்ளவர்கள் மட்டுமே இந்த சிகிச்சை செய்து கொள்ள முடியும். கண்களில் அடிபட்டு கார்னியாவில் காயம் ஏற்படுதல், வெள்ளை படுதல், கண்களில் வெங்காயச்சாறு, கள்ளிப் பால் மற்றும் ஊறு விளைவிக்கக் கூடிய இலைகளின் சாற்றை ஊற்றுதல், நெற்கதிர் மற்றும் குச்சி குத்துவதால் ஏற்படும் காயம், கண்களில் பிசிறு விழுந்து கவனிக்காமல் விடுதல், சரியான சிகிச்சையின்மை போன்றவற்றைச் சிகிச்சை மூலம் குணமாக்கலாம்.

கார்னியாவின் ஒளி ஊடுருவும் தன்மை பாதிக்கப்படும்போது, பார்வை தடைப்படுகிறது. இருள் சூழ்கிறது. தானமாகக் கிடைக்கும் கண்ணிலிருந்து பெறப்படும் கார்னியாவை, நோயாளியின் பாதிக்கப்பட்ட கார்னியாவை நீக்கிவிட்டுப் பொருத்தும்போது, பார்வை கிடைக்கிறது. வாழ்வு ஒளிமயமாகிறது.

இந்தியாவில், மொத்தப் பார்வையற்றோரில் 85 சதவீதத்தினர், அதாவது சுமார் ஒரு கோடியே 18 இலட்சம் பேரைக் குணப்படுத்த முடியும். நாம் ஒவ்வொருவரும் கண்தானம் செய்தால், பார்வையற்றோர் எண்ணிக்கை கணிசமாகக் குறையுமே! ஒளி பெற்ற ஒவ்வொரு உயிரும் உங்களை வாழ்த்துமே! இச்சிறிய செய்கை இறந்த பின்னும் வாழும் அற்புத வாழ்க்கைக்கு வித்திடுமே!

*மலரத் துடிக்கும் இளம் மொட்டுகள்...*
*உலகை காணத் தவிக்கும் தளிர்கள்...*
*கனவுகளைச் சுமக்கும் இளைஞர்கள்...*
*குடும்பப் பொறுப்பை எண்ணிக்*
*கலங்கும் மூத்தவர்கள்...*

பார்வையற்ற இவர்களின் உள்ளங்கள், உங்களின் தீர்மானத்திற்காக ஏங்குகின்றன. கண்தானம் பெறப் பரிதவிக்கின்றன.

அக்டோபர்–15 பார்வையற்றோர் தினம் ஆகும். ஒரு நிமிடம் இவர்களுக்காக ஒதுக்குங்கள். சிந்தியுங்கள்.

உங்கள் இரவைவிட இருட்டானது இவர்களின் பகல்!

*– மத்திய அரசு செய்தி வெளியீடு*

# இலக்கியங்களில் இரவுப் பொழுது

புதுமைப்பித்தன் ஒரு கதையில் எழுதிக்காட்டுவார்; ஒரு ஆட்டுக்குட்டி எப்படி இருந்ததாம்...? இருட்டைப் பிழிந்து வைத்ததுபோல், அவ்வளவு கறுப்பு நிறத்தில் கவனம் கவர்ந்ததாம்!

இருளைப் பற்றிக் கதை ஆசிரியர்கள் மட்டுமல்ல...கவிஞர்களும் பல்வேறு கோணங்களில் சிந்தித்து, வெளிச்ச விதைகளாய்ப் பல கவிதைகளைத் தந்துள்ளார்கள். நளவெண்பாவில், இரவு இப்படி வருணிக்கப்பட்டது...

"களிறுகள், கட்டுத்தறியை நோக்கிச் சென்றன; இனிய செவ்வழிப்பண் இசைக்கும் யாழ்களோ, உறைக்குள் சென்று நுழைந்தன; வண்டுகளோ, மலர்ப்படுக்கைக்குள் புகுந்தன. உலகத்து உயிர்களெல்லாம் உணர்வற்று உறங்கின...!" என்று புகழேந்திப் புலவர் பாடினார்.

"சேமங் களிறுபுகத், தீம்பாலின் செவ்வழியாழ்
தாம்உள் உறைபுக, தார் வண்டு –
காமன்தன் பூவாளி ஐந்தில்புக துயில்புக்கதே
ஓவாது முந்நீர் உலகு"

– என்பது அந்த நளவெண்பாப் பாடல்.

காப்பியக் கவிஞர் கம்பரோ அதே இரவுப் பொழுதை,


"பூ ஒடுங்கின; விரவு புள் ஒடுங்கின, பொழில்கள் மா ஒடுங்கின; மரனும் இலை ஒடுங்கின; கிளிகள் நா ஒடுங்கின; மயில்கள் நடம் ஒடுங்கின; குயில்கள் கூ ஒடுங்கின..."

– என்று சந்த நயத்துடன் பாடி வைத்தார்.

வில்லிபாரத ஆசிரியருக்கோ, இரவுப்பொழுது வித்தியாசமான ஒரு சிந்தனையை உருவாக்கிக் காட்டுகின்றது. ஆம்...அவரைப் பொறுத்து இரவு, அவர் நெஞ்சில் கணிகையின் மகளாக, உவமையின் வரவு வைக்கின்றது, எப்படி...?

பூரண நிலவைப் பொலிவு முகமாக ஏந்தி, செவ்வாம்பல் மலரைச் செவ்விதழாய்க் காட்டி, முல்லை அரும்பை முறுவலாய் வீசி, தாமரை மலரைத் தண்ணிய கரமாக நீட்டி, வஞ்சக அன்புடன் பலரையும் தழுவிப் பொருள் பறிக்கும் கணிகையைப் போல், கறுத்த இரவு விளங்கியதாகக் கற்பனை செய்கிறார் வில்லிபுத்தூரார்.

"குளிரும் மாமதி முகத்துஒளிர்
குமுதவாய் மலர்த்தி,
தளவ வாள்நகை பரப்பி,
வண்சத தள மலர்க்கை



அளவிலே குவித்து, அளியொடும்
அகன்றி லாமையினால்
களிகொள் தோள் விலைக் கணிகையைப்
போன்றது அக்கங்குல்".

– என்பது அவர் பாடல்.

– வெளிச்சம்தான் அழகு என்பது மட்டுமல்ல; இருட்டும் கவிஞர்கள் நோக்கில் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா!

– குடந்தை டி.எஸ்.பாலு

நூல் நயம் :

# 'தந்தை பெரியார்'

ஆசிரியர் : **திரு.பி.வி.கிரி**

பக்கம் : 104 விலை ரூ.25

வெளியிட்டோர்: திருமலைப் பதிப்பகம்,
பிளாக் எண்-385, அண்ணாநகர் கிழக்கு,
சென்னை - 600 102.

இந்த மண்ணில் பிறந்தவர்கள் அனைவரும் சமம்; சாதியின் பெயரால், சனாதனத்தின் பெயரால், சமயத்தின் பெயரால், செயற்கையாகப் புனையப்படும் வேறுபாடுகள் களையப்பட்டேயாக வேண்டும்; சமத்துவ சமுதாயம் உருவாகிட வேண்டுமென்று தன் வாழ்நாள் முழுவதும் போராடிய தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாறு, வளர்ந்து வரும் இளைய சமுதாயத்தினர் எளிதில் புரிந்திடும் வண்ணம் 'சித்திரக் கதை'யைப் போன்று திரு.பி.வி.கிரி அவர்களால் இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியரின் குழந்தை இலக்கியப் படைப்பின் தாக்கப் பிரதிபலிப்பை இந்நூலில் காணமுடிகிறது.

'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார் அவர்களின் பயணம் கரடுமுரடானது. ஏனெனில், ஒரு வசதியான குடும்பத்தில் தோன்றி, சாமானியர்களைப் பற்றிச் சிந்தித்து, எடுத்துக் கொண்ட காரியத்தை-எதிர்வரும் இடர்களைப் புறந்தள்ளி, விடாப்பிடியாகப் போராடிச் செய்து முடிப்பவர் பெரியார் என்பது இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.

சுதந்திரப் போராட்ட காலத்தில், அண்ணல் காந்தியடிகளின் தலைமையை ஏற்றுக் கொண்ட பெரியார், அவரது, 'சுதேசி இயக்க' முழக்கத்திற்கு வலுவூட்டும் வண்ணம் கதர்த்துணிகளை வினியோகித்திட எடுத்துக்கொண்ட முயற்சிகளும், தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்களில் எதிர்கொண்ட சிறைவாசகங்களும், கள்ளுக்கடை மறியலைப் பொருளுள்ளதாக ஆக்கிடத் தனது சொந்தத் தோப்பில், வருமானம் தந்து கொண்டிருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்திய முன்னோடிச் செயலாக்கங்களும், அவரது காந்தியப் பற்றை வெளிப்படுத்தின என்பன இந்நூலில் தெள்ளிதின் விளக்கப்பட்டுள்ளன.

ஆனால், அன்னிய ஆதிக்க எதிர்ப்பினை ஒருமுகப்படுத்திட ஏக இந்தியாவையும் காந்தியடிகளின் தலைமையின் கீழ், ஓரணியாய்த் திரட்டிட முயலப்பட்ட அக்கால கட்டத்தில், இயக்க உணர்வுகளுள்ளவர்களாக நம்பப்பட்டவர்கள் , மத்தியில் வேரூன்றியிருந்த வருணாசிரமப் பாகுபாடுகள் பெரியாரைப் பெரிதும் பாதித்தன.

இந்நாட்டில், வருணாசிரம - சாதிப்பாகுபாடு இருக்கிற வரை இந்த நாடு சுதந்திரம் பெற்றாலும் இந்த நாட்டு மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிட்டாது. அதனால், முதலில், 'வருணாசிரம தர்மம்' ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்ற கொள்கையில் அவர் விடாப்பிடியாக இருந்தார். அண்ணல் காந்தியடிகளின் சமரச வற்புறுத்தல்கள் கூட அவரை அக்கொள்கையிலிருந்து கிஞ்சிற்றும் நெகிழச் செய்ய முடியவில்லை என்ற செய்திகள் இந்நூலில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

எனவே, நாட்டுக்குச் சுதந்திரம் என்பதற்கு முன்னர், சாதியை ஒழித்து, சமரச சமதர்மச் சமுதாயம் காணப்பட வேண்டும்; மக்களுக்குள் சுயமரியாதையும், சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளரவேண்டும் என்று பெரியார் விழைந்தார். "நமது மூட நம்பிக்கையும், முட்டாள்தனமும் நம்மை விட்டு விலகி, சுயமரியாதை அடைந்த பிறகுதான், நாம் ஆட்சி புரிவதற்குத் தகுதி படைத்தவர்களாவோம்" போன்ற பெரியாரின் இலட்சிய முழக்கங்கள் இந்நூலில், தொய்வின்றித் தொகுக்கப் பட்டுள்ளன.

பக்கங்கள் குறைவெனினும், தந்தை பெரியாரின் வாழ்க்கைப் பாதையில் தோன்றிய ஒவ்வொரு திருப்புமுனையும், சமத்துவ சமுதாய நோக்கை அடித்தளமாகக் கொண்டே அமைந்தன என்பது வரலாற்றுச் சான்றுகளோடு இந்நூலின் ஆசிரியர் திரு.பி.வி.கிரியால் வெளிப்படுத்தப்பட்டிருப்பது சிறப்புக் குரியதாகும்.


அதோடு, 14 தலைப்புகளின் கீழ், இதை எழுதிய நூலாசிரியர் திரு.பி.வி.கிரி அவர்கள், பெரியாரின் சமகாலச் சான்றோர்கள் அவரைப் பற்றிக் கூறியுள்ள 'புகழாரங்களை' ஒவ்வொரு தலைப்பின் இறுதியிலும், சரமாகத் தொடுத்திருப்பது ஒரு பாராட்டுதலுக்குரிய முயற்சியாகும்.

தந்தை பெரியார் அவர்களின் 65, 70 ஆண்டுகளுக்கு முந்தைய சிந்தனை, அதாவது "பிறப்பால் உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே, நமது நாட்டில் வளர்ந்துவரும் 'சாதிச் சண்டை' என்னும் 'நெருப்புக்கு நெய்யாய்' இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிக்கப்பட்டு, 'அனைவரும் சமம்' என்றெண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளரவேண்டும்'' என்ற இந்த வாசகங்கள் எந்த அளவுக்குச் சமுதாய முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை நிகழ்காலச் சம்பவங்கள் கூட நினைவூட்டு கின்றனவல்லவா?

**– இரா.சௌமியனிளவல்**

# சாலைப் போக்குவரத்து கவனம்! கவனம்!!

வளர்ந்து வரும் உலகில் போக்குவரத்து மனித வாழ்க்கையில் ஒரு முக்கியப் பங்காக மாறிவிட்டது. போக்குவரத்து இல்லையேல் மனித வாழ்க்கை வாழ்வது என்பதே கேள்விக் குறியான காரியம். அதேசமயம் வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளதே தவிர, சாலை விதிகளைப் பின்பற்றுவதிலும் – போக்குவரத்து வளர்ச்சிக்குத் தகுந்தவாறு சாலை விபத்து ஆபத்துகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதிலும், போக்குவரத்துத் தொழிலில் இருப்பவர்களும், மற்றும் பொதுமக்களும் தேவையான விழிப்புணர்வும் எச்சரிக்கையும் பெறவில்லை.




இதனால் அதிக விபத்து மரணங்கள் அல்லது ஊனங்கள் நிகழ்கின்றன. சாலையை அன்றாடம் பயன்படுத்துபவர்கள், நோய்வாய்ப்பட்டவர்களாக இல்லாமல், நல்ல உழைப்பு உள்ளவர்களாகவும், மற்றவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் பயனுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். மரணப் படுக்கையில் உள்ள மனிதனுக்கு அவனால் எவ்வித நன்மையும் பிறருக்கு இல்லாமலிருந்தும் அவனைக் காப்பாற்ற மனிதர் படும் முயற்சிகள் எத்தனை? அப்படி இருக்க நலமுடன் வாழும் மக்களை அகால மரணங்களில் இருந்து காப்பாற்றுவது அதிமுக்கியமான ஒன்றாகும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மாநில அளவில் துவக்கப்பட்டதே ''சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துத் தடுப்பு இயக்கம்''.

இவ்வியக்கத்தின் புஞ்சைப்புளியம்பட்டி கிளை வெளியிட்டுள்ள பயன்மிக்க துண்டுப் பிரசுரம் இது. தன் செயல்முறைகளை கீழ்க்கண்டவாறு செய்கிறது:

எச்சரிக்கை வாக்கியங்கள் அடங்கிய போஸ்டர்களை பஸ் நிலையங்கள், பொது இடங்கள், ஆர்.டி.ஓ. அலுவலகங்களில் ஒட்ட வைத்து விளம்பரம் செய்தல்.

பேருந்து ஓட்டுனர்கள் மத்தியில் கருத்தரங்கம் நடத்துதல், விபத்து ஏற்படுத்தாத அனுபவம் வாய்ந்த ஓட்டுநர்களின் அனுபவங்களைப் புதிய, இளம் ஓட்டுநர்களுக்கு அளித்தல்.

விபத்தின் சூழ்நிலைகளை எடுத்துணர்த்தல், விபத்தின் பின்விளைவுகளை உணர்த்துதல்.

விபத்தில்லாமல் இயக்கும் ஓட்டுநர்களுக்கு விருதுகள் வழங்குவது மூலம் ஊக்குவித்தல்.

ஓட்டுநருக்கு முன்புறமாக– கண்ணாடியில் எச்சரிக்கை வார்த்தைகள் அடங்கிய ஸ்டிக்கர்களை ஒட்டுதல்.

விபத்தைத் தடுப்பதில் வாகனப் பராமரிப்பைப் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல்.

பொது மக்களுக்கு விபத்தின் சூழ்நிலைகளை உணர்த்தி சாலைகளைப் பயன்படுத்தும் விதத்தை துண்டுப்பிரசுரங்கள், போஸ்டர்கள், டி.வி. சாதனங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

விபத்தினால் பாதிக்கப்பட்டோரின் நிலைகளை பேட்டியின் மூலம் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டுதல்.

பொதுமக்கள் சாலையைப் பயன்படுத்துவதில் உள்ள சிரமங்களை வாகன ஓட்டுநர்களுக்குத் தெரியப்படுத்துதல்.

வாகனங்களின் தன்மை, அதன் வேகங்கள் போன்றவற்றைக் கையாள்வதில் உள்ள சிரமங்களைப் பொதுமக்களுக்கு எடுத்துணர்த்துதல்.

## ஐன்ஸ்டீனும் பெர்னார்ட் ஷாவும்!

ஒரு தடவை ஐன்ஸ்டீன் ஒப்புமைக் கொள்கையை இவ்வாறு விளக்கினார்: ''ஒருவன் தன் அன்பிற்குரிய காதலியோடு இரண்டு மணி நேரம் அமர்ந்திருந்தாலும் அது ஒரு நிமிடம் போலவே அவனுக்குத் தோன்றுகிறது. ஆனால் அவனே மிகவும் சூடேறிய அடுப்பு மீது ஒரு நிமிடம் இருப்பினும் அது அவனுக்கு இரண்டு மணி நேரமாகத் தோன்றுகிறது. இதுவே ஒப்புமைக் கொள்கை''.

**ஐன்ஸ்டீன்** பற்றிக் கேட்டபோது **பெர்னார்ட் ஷா** சொன்னார்:

''உலகிலேயே பெரிய மனிதர்கள் மூவர் இருக்கின்றனர். ஒருவர் கணிதமேதை ஐன்ஸ்டீன். மற்றொருவர் ருஷ்யத் தலைவர் ஸ்டாலின். இன்னுமொருவர்... நாணம் என்னைத் தடுக்கிறது''.

---

விபத்தின் புள்ளி விவரங்களைச் சேகரித்து மக்களுக்குத் தெரியப்படுத்துதல்.

பள்ளிகளில் விபத்து பற்றிய கருத்தரங்குகளை மேற்கொள்ளுதல்.

நகரப் பகுதிகளில் கூட்ட நெரிசல்களைத் தவிர்க்க வணிகர்களுக்குத் தக்க ஆலோசனை வழங்குதல்.

இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கான கருத்தரங்குகளை அந்தந்த ஊர் சமூக சேவை அமைப்புகளின் மூலம் நடத்தி கருத்துக்களை அறிவித்தல் மற்றும் கருத்துக்களைப் பெறுதல்.

அடிக்கடி விபத்து நடக்கும் இடங்களை விளம்பரம் மூலம் கேட்டறிந்து, அவற்றைத் தடுக்க அரசுக்குப் பரிந்துரை செய்வதோடு அவ்விடங்களில் அரசு அனுமதியுடன் தேவையான மாற்றங்களைச் செய்தல்.

வீடியோ சாதனங்கள் மூலம் இயல்பான போக்குவரத்து நிலைகளைப் படம் பிடித்து மக்களுக்கும் ஓட்டுநர்களுக்கும் உணர்த்துதல்.

வாகன ஓட்டுநர் சங்கங்களை அணுகி கருத்தரங்குகளை நடத்துதல், மாவட்ட அளவில் சிறந்த ஓட்டுநர்களுக்கு விருதுகள் வழங்கச்செய்தல்.

எல்லா வாகன ஓட்டுநர்கள் மத்தியிலும் விபத்தைப் பற்றிய தீவிர பிரசாரத்தை மேற்கொள்ளுதல்.

அனைத்துப் பணிமனைகளிலும் விபத்தைத் தடுப்பதில் பராமரிப்புப் பற்றிய எச்சரிக்கை போஸ்டர்களை ஒட்டுதல்.

மாநில அளவில் சிறந்த ஆர்.டி.ஓ. மற்றும் காவல் நிலையங்களைக் கண்டறிந்து விபத்துத் தடுப்பில் அவர்கள் ஆற்றிய பணிக்காக விருதுகள் பெறச்செய்தல்.

மாவட்ட அளவில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளைத் துவக்கி முறையான தீவிரப் பயிற்சியின் மூலம் தரமான ஓட்டுநர்களை உருவாக்குதல்.

அவ்வப்போது சாலைப் பாதுகாப்பு குறித்து அரசு வழங்கும் ஆணைகளை நடைமுறைப்படுத்த ஆவன செய்தல்.

தேவையான ஆலோசனைகளை அவ்வப்போது அரசுக்கு வழங்குதல் – பெறுதல்.

முறையான வாகன இயக்க முறைகளையும், விபத்து தடுப்பு முறைகளையும் புத்தகங்களின் மூலம் அறிவுறுத்துதல்.

மருத்துவ மனோதத்துவ முறைப்படியான ஆலோசனைகளை ஓட்டுநர்களுக்கு அறிவுறுத்துதல்.

மேலும், நடைமுறையில் அறியும் தகவல்களைத் திட்டங்களாகச் செயல்படுத்துதல் – போன்றவை.

இவ்வியக்கத்தின் செயல்பாடுகள் தமிழ்நாடு அரசு மோட்டார் வாகன சட்ட திட்டங்களுக்குட்பட்டது.

இவ்வியக்கம் மேற்கொள்ளும் மற்ற சேவைகளின் விவரம்:

1. ஊனமுற்றோர்கள், கண் பார்வையற்றோர்க்கான உதவிகளைச் செய்தல்.
2. அவ்வப்போது மனித சமுதாயத்திற்கு ஏற்படும் தீங்குகளைக் களைந்தெறிய ஆவன செய்தல்.
3. அரசு மேற்கொள்ளும் நோய்த் தடுப்பு முகாம்கள், இதர சமுதாய நலப் பணிகளுக்கு ஆதரவாக இருத்தல்.
4. நூலகங்களை அமைப்பதன் மூலம் கல்வியறிவையும், பொது அறிவையும் பெருக்க மக்களுக்கு உதவிசெய்தல்.
5. பொதுவான ஊர்நல, சுகாதார வழிமுறைகளை மக்களுக்கு விளம்பரம் மூலம் அறிவுறுத்தல்.
6. கட்சி சார்பற்றது இவ்வியக்கம்.

பொதுமக்களும், வேறுபல அமைப்புகளும், போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டுள்ளோரும் தங்களது மனமுவந்த ஒத்துழைப்பை மேற்கண்ட கோரிக்கைகளுக்கு வழங்க வேண்டுகிறோம். □

# உலக இரத்த தான நாள்



இளைஞர்கள் இரத்ததானம் செய்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் என வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. ரா. சிவக்குமார் இ.ஆ.ப., வலியுறுத்தினார்.

தேசிய இரத்ததான நாளையொட்டி வேலூரில் நடந்த "உலக இரத்ததான தினம்" நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

"பொருளாதார ரீதியில் தானங்கள் செய்ய முடியாவிட்டாலும், அவரவரும் இரத்ததானம் செய்ய முன்வர வேண்டும். ஆனால் எல்லா வயதினரும் இரத்ததானம் செய்யமுடியாது. இளைஞர்கள் நிச்சயமாக இரத்ததானம் செய்ய மருத்துவ ரீதியாகத் தடைகள் இல்லை. எனவே, இளம் வயதுப் பிரிவினரிடம் இரத்ததானம் செய்யவேண்டும் என்ற எண்ணம் வளர வேண்டும். மற்றவர்களிடமும் இந்த உணர்வை ஏற்படுத்த இளைய சமுதாயத்தினர் முயற்சிக்க வேண்டும்" என்றார் ஆட்சியர்.

அவ்விழாவில் – சுகாதாரத் துறை இணை இயக்குநர் டாக்டர் விமலா ஜே. சத்யா, துணை இயக்குநர் பஞ்சரத்தினம், பொதுச் சுகாதாரத்துறை துணை இயக்குநர் விட்டல்ராஜ், சி.எம்.சி. மருத்துவமனை இரத்த வங்கிப் பொறுப்பு டாக்டர் சோமா பைடியா, டி.கே.எம். கல்லூரி முதல்வர் ஏ. ஜயா, உதவும் உள்ளங்கள் தலைவர் இரா.சந்திரசேகரன், ஊரிஸ் கல்லூரி மாணவி வி. பிரியா ஆகிய பலரும் பேசினர்.

மாவட்ட விரிவாக்கக் கல்வியாளர் திரு. கி. இராச குபேர காந்தன் இவ்விழாவில், வரவேற்புரை யாற்றினார். மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு. எம். கலைமணி நன்றி கூறினார்.

நூறு முறை இரத்ததானம் செய்துள்ள முதியவர் திரு. சின்னசாமிக்கு மாவட்டாட்சியர் திரு. ரா. சிவகுமார் கேடயம் பரிசளித்துக் கௌரவித்தார். இரத்ததானம் செய்தால் உடல்நிலை கெட்டுவிடுமோ என்ற அச்சம் தேவையில்லை என்பதற்குத் திரு.சின்னசாமி நல்ல உதாரணம் என மாவட்ட ஆட்சியர் குறிப்பிட்டார்.


---

## தந்தை பெரியாரின் சிக்கனம்

ஒரு சமயம் ஈரோடு எஸ்.ஆர். சாமி அவர்கள் வீட்டில் பெரியார் உணவருந்தினார். உணவை முடித்ததும் பெரியார் கையலம்ப, சாமி சொம்பிலிருந்த நீரைப் பெரியார் கையில் ஊற்றினார். அப்போது பெரியார் சாமியின் தலையில் ஒரு அடி கொடுத்தார்.

உடனே சாமி 'ஐயா என்னை ஏன் அடிக்கிறீர்கள்?' என்று கேட்க "சொம்பில் தண்ணீருக்குப் பதில் நெய் இருந்தால் இப்படி சடசடவென்று இவ்வாறு அதிகமாக ஊற்றுவாயா? அதுபோலத் தண்ணீராக இருந்தாலும் அளவோடுதான் ஊற்ற வேண்டும்" என்று கூறினார்.

செய்தி: ஐ.எஸ். ஆனந்தராஜன் ("வரலாறு கண்ட வைக்கம் வீரர்" நூலிலிருந்து)




தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, கோவை மாவட்டம் போளுவாம்பட்டி வித்வான் திரு. ஐ. இராமசாமி அவர்களிடமுள்ள சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைத் தமிழ் எழுத்துகளும் மற்றும் அசோகன் பிராமி எழுத்துகளும் கலந்து எழுதப்பெற்ற களிமண் தகடுகளைக் கண்டறிந்துள்ளது.

மேலும் சில சுடுமண் பொம்மைகளின் பீடப் பகுதியிலும் மற்றும் தலைப் பகுதியிலும் இவ்வெழுத்துகள் எழுதப் பெற்றமையும் தெரிய வந்துள்ளன. மேற்கண்ட களிமண் தகடுகளும் மற்றும் சுடுமண் பொம்மைகளும் தம்மிடம் உள்ளன என்பதை வித்வான் திரு. ஐ. இராமசாமி அவர்களே இத்துறையின் கோவைக் கிளை அலுவலகக் காப்பாட்சியர் திரு. இரா. பூங்குன்றன் அவர்களிடம் தெரிவித்து, அவற்றைப் பொதுமக்கள் அறியும் வண்ணம் வெளிப்படுத்துதல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அதனடிப்படையில் திரு. இரா. பூங்குன்றன் போளுவாம்பட்டி சென்று திரு. ஐ. இராமசாமி அவர்களிடமிருந்து களிமண் தகடுகள், சுடுமண் பொம்மைகள் ஆகியவற்றை ஆராய்ந்து இத்துறைக்குத் தெரியப்படுத்தினார். உடன் இத்துறையின் இயக்குநர் திரு. நடன. காசிநாதன் போளுவாம்பட்டிக்கு திரு. இரா. பூங்குன்றன் அவர்களோடு சென்று அங்கிருந்த மேற்கண்ட பொருள்களை ஆய்ந்து நிழற்படமும் எடுத்து வந்தார். இவ்வாறு இத்துறையால் கொண்டு வரப்பட்டிருக்கிற நிழற்படங்களின் உதவியால் இத்துறை படித்து, அதுபற்றிய குறிப்பைச் சீர்செய்து தருமாறு பண்டைத் தமிழ்க் கல்வெட்டு அறிஞர் திரு. ஐ. மகாதேவன் அவர்களிடம் இத்துறை கேட்டுக்கொண்டபோது அவரும் இவற்றைப் படித்துச் செம்மைப்படுத்தி உதவியுள்ளார்.

பண்டைத் தமிழ் எழுத்தும், அசோகன் பிராமி எழுத்தும் கலந்து எழுதப்பெற்ற களிமண் தகடுகள் மூன்றும் மற்றும் சுடுமண் பொம்மைகள் 20க்குக் குறையாமலும் இருக்கின்றன. இவற்றோடு செப்புத் தகடு ஒன்றில் ஓர் ஆண் உருவமும் மற்றும் அவரது பெயரான "காடன்" என்ற பண்டைத் தமிழ் எழுத்தால் எழுதப் பெற்றும் காணப்படுகின்றன. இக்களிமண் தகடுகள் மற்றும் சுடுமண் பொம்மைகள் நேர்த்திக் கடனுக்காக ஒரு கோயிலுக்கு வழங்கப்பெற்றதாக இருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. இக்களிமண் தகடுகள் மற்றும் சுடுமண் பொம்மைகள் கோவைக்கு அருகிலுள்ள பேரூர் என்ற ஊருக்குப் பக்கத்தில் வீடுகள் கட்டுவதற்காக நிலம் அகழ்ந்த பொழுது கிடைக்கப் பெற்றதாகக் கூறி சிலர் திரு. ஐ. இராமசாமி அவர்களிடம் கொடுத்துள்ளதாக அவர் கூறினார்.

இத்தகைய களிமண் தகடுகளையும் மற்றும் சுடுமண் உருவங்களையும் நேர்த்திக் கடனாக அளிக்கின்ற ஒரு மரபு வடநாட்டில் மிகுதியாக இருந்திருக்கிறது. தமிழகத்தில் பிற்காலத்தில் குழந்தை வேண்டிக் குழந்தை உருவத்தோடு கூடிய மரத் தொட்டில் மற்றும் துணி ஏணை, அய்யனார் மற்றும் வேடியப்பன் கோயில்களில் குதிரை பொம்மைகள் மற்றும் யானை, நாய் பொம்மைகள் அமைத்துத் தருவது வழக்கத்தில் இருந்திருக்கிறது.


இத்தகைய வழக்கம் பல்லவர் காலம் முதல் இருந்ததாக நமக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. தற்பொழுதுதான் இத்தகைய தகடுகள் தமிழகத்தில் இருந்துள்ளது என்பது முதன்முதலாகத் தெரியவந்துள்ளது.

திரு. இராவதம் மகாதேவன் அவர்களால் சில ஆண்டுகளுக்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பெற்ற ஒரு செப்புப் பட்டயத்தில், பேரூர் நகரில் "அருஹத ஆயதனம்" என்ற சமணக் கோயில் இருந்ததாகவும், அக்கோயிலுக்குக் கங்க மன்னனின் ஆசை நாயகியால் கார்ஷா பணம் (வெள்ளிக் காசுகள்) கொடையளிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது.



கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த களிமண் தகடுகளாக இவை இருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது.

இந்த கண்டுபிடிப்பு மிக முக்கியம் வாய்ந்ததாகும். இவ்வாறான களிமண் தகடுகள் மற்றும் சுடுமண் பொம்மைகள் தம்மிடம் இருக்கின்றன என்பதை இத்துறைக்கும் தெரிவித்த வித்வான் திரு. ஐ. இராமசாமி அவர்கள் பாராட்டுக்கு உரியவராவார். இவருக்கு வரலாறு மற்றும் தமிழ் அறிஞர்கள் மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டவர்களாவர்.



எனவே, பேரூரில் சுங்கர் ஆட்சிக் காலத்தில் ஒரு சமணக் கோயில் இருந்திருக்கிறதென்பது இச் செப்புப் பட்டயத்தால் உறுதியாகிறது. அச் சமணக் கோயில் மிக நீண்ட நெடுங்காலமாக அங்கிருந்திருக்க வேண்டும் போன்றே தெரிகிறது.

மேற்கண்ட தகடுகளில் ஒரு குறிப்பிட்ட நாடும், ஊரும் பல இடங்களில் எழுதப்பெற்றிருப்பது அறிய முடிகிறது. 'எருமிநாடு' என்ற நாடும், 'குமுழ்ஊர்' என்ற ஊரும் அடிக்கடி இதில் காணப்படுகின்றன. மேலும் சில நாடுகள், ஊர்கள், மனிதப் பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன. 'தம்மம்' என்ற பிராகிருதச் சொல்லும் இதில் காணப்படுகிறது. இக்கல் வெட்டுகளில் உள்ள வரிகளை அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் படிக்க முடிகிறது. இவற்றை முழுமையாகப் படிப்பதற்கு மேலும் சில நாட்கள் ஆகலாம்.

எருமிநாடு, குமிழி ஊர் என்று குறிப்பிடப்படும் தொடர் புதுக்கோட்டை மாவட்டம், சித்தன்ன வாசலில் உள்ள பண்டைத் தமிழ்க் கல்வெட்டிலும் காணமுடிகிறது. எனவே அக் காலத்தை அதாவது

★ ★ ★

உருது மூலம் :
சாதத் ஹாசன் மாண்டோ

தமிழாக்கம் :
ந. முருகேச பாண்டியன்

# கறுத்த குறிப்புகள்



சில சுயநலவாதிகளின் கரங்களில் இன்று மதவெறி, பயங்கரமான ஆயுதமாகச் செயல்பட்டு வருகிறது. இந்தச் சூழலில் 1947இல் காந்தியார் இருந்த காலத்தில் இந்தியா–பாகிஸ்தான் பிரிவினையின் போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை நேரடியாகக் கண்ட சாதத் ஹாசன் மாண்டோ (1912–55) (உருதுச் சிறுகதையின் முன்னோடி ஆவார்) குட்டிக் கதைகள் மூலம் மனிதனுடைய மடமையையும் மதவெறியையும் வெளிப்படுத்தியுள்ளார். அவை மேலோட்டமாகக் கிண்டல் செய்வது போலத் தோன்றினாலும், மதவெறி காரணமாக மக்கள் அனுபவித்த துயரத்தினை நினைவூட்டுகின்றன. அவரது 34 குட்டிக் கதைகளில் சில கதைகள் ஆங்கிலம் வழியாகத் தமிழில் தரப்பட்டுள்ளன இங்கே:

## ஒத்துழைப்பு

சுமார் ஐம்பது பேர் அடங்கிய கும்பல் கையில் லத்தியுடன் கொள்ளையடிப்பதற்காக ஒரு வீட்டை நோக்கி ஓடியது.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னே வந்த மெலிந்த தோற்றமுடைய மனிதன் கும்பலைப் பார்த்து உத்தரவிடும் குரலில் சொன்னான், “நண்பர்களே! இந்த வீட்டிலுள்ள பணக்காரர்களைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது இல்லையா? இங்கு பணத்தைத் தவிர விலை உயர்ந்த பொருள்கள் உள்ளன. இந்த வீட்டைக் கைப்பற்றிப் பொருள்களை நமக்குள் பங்கிட்டுக் கொள்வோம்”.

லத்தியைக் காற்றில் ஆட்டி, வேகமாகக் கை, முஷ்டிகளை உயர்த்தி வானத்தைத் தொடுமளவு கும்பல் கூக்குரலிட்டது. அது நீரூற்றிலிருந்து காற்றில் பீறிடும் நீரைப் போலிருந்தது.

கூட்டத்தினர் ஒல்லியான மனிதன் பின்னால் கடமை வீரர்கள் போல நடந்து வர, அவன் வழிநடத்திச் சென்றான்.

அந்த வீட்டின் தலைவாசலின் வெளியே எல்லோரையும் தடுத்து நிறுத்தி நோஞ்சலான மனிதன் சொன்னான், “நண்பர்களே! இந்த வீட்டில் உள்ளவை எல்லாம் உங்களுடையவை. எனவே இதுக்காக சண்டையிடவோ உங்களுக்குள் மோதிக் கொள்ளவோ வேண்டாம். உள்ளே செல்லுங்கள்”.

கூட்டத்திலிருந்த ஒருவன் கத்தினான், “கதவில் பூட்டு இருக்கு”.

இன்னொருவன் சொன்னான், “நாம் அதனை உடைத்துக் கதவைத் திறக்கலாம்”.

நோஞ்சலான மனிதன் கைச் சைகை மூலம் கும்பல் கதவை உடைக்க முயலுவதைத் தடுத்து நிறுத்தினான். “நண்பர்களே! சற்றுப் பொறுங்கள்! சாவியினால் அந்தப் பூட்டை நானே திறப்பேன்” என்று புன்முறுவலுடன் சொன்னான்.

அவன் தனது பையிலிருந்து சாவிக் கொத்தை எடுத்து ஒரு சாவியைத் தேர்ந்தெடுத்துப் பூட்டினுள் நுழைத்துத் திருகினான். பூட்டுத் திறந்தது. பெரிய கதவை கிரீச்செனச் சத்தமிடத் தள்ளித் திறந்தான். கூட்டம் வீட்டினுள் முண்டியடித்து ஓடியது.

ஒல்லியான மனிதன் தனது நெற்றியில் வழியும் வியர்வையைக் கையினால் துடைத்தவாறு சொன்னான், “நண்பர்களே! அவசரப்பட வேண்டாம். ஒவ்வொரு பொருளும் உங்களுக்குத்தான். அதுக்காக போட்டி போட்டுச் சண்டை போடாதீர்கள்”.

உடனே கூட்டத்தினர் பொறுமையாக ஒருவர் பின் ஒருவராக ஒழுங்காக வீட்டிற்குள் நுழைந்தனர். விலையுயர்ந்த பொருளைக் கண்டவுடன் நெருக்கியடித்து ஓடினர். எங்கும் ஒரே கூச்சல், குழப்பம்.

“அமைதி! அமைதி! சண்டை போடவோ பறித்துக் கொள்ளவோ எந்த அவசியமும் இல்லை. அமைதியாயிருங்கள். உங்களில்

உண்மையினாலும் அன்பினாலும் நாம் உலகத்தையே வெற்றி கொள்ள முடியும்.

– காந்தியடிகள்

ஒருத்தர் அதிக மதிப்புள்ள பொருளை அடைந்தால் அதுக்காகப் பொறாமைப்படாதீர்கள். ஒவ்வொருத்தருக்கும் அந்த வாய்ப்புக் கிட்டும். இது அருமையான பொருட்கள் நிரம்பிய வீடு. காட்டுமிராண்டி போல நடந்து கொள்ளாதீர்கள். உங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டால் இந்த விலைமதிப்பற்ற பொருட்களை உடைத்து விடுவீர்கள். அப்புறம் அந்த நஷ்டம் பூராம் உங்களுக்குத்தான்", ஒல்லியான மனிதனின் குரலில் வேதனை தொனித்தது.

சூறையாடும் கும்பல் ஒழுங்கானது. ஒவ்வொரு பொருளாக எடுத்துச்செல்ல முயன்றனர்.

ஒல்லியான மனிதன் அறிவுரைகளைத் தாராளமாக வழங்கலானான்.

"ஐயா, அது ரேடியோ.... அதனைக் கவனத்துடன் தூக்குங்கள். கூட ஒயரையும் எடுத்துச் செல்லுங்கள்".

"அதனை மடித்துத் தூக்குங்கள். அந்தக் கருங்காலி மர டீபாயின் மீது தந்த வேலைப்பாடு உள்ளது. ம்... அதுதான் சரி... அப்படி மெல்ல அதனைத் தூக்கிச் செல்லுங்கள்.

"வேண்டாம்! வேண்டாம்!... இங்கு குடிக்க வேண்டாம். அது உங்கள் மண்டைக்குள் ஏறிடும். பாட்டிலை வீட்டுக்கு எடுத்துப்போவது தான் நல்லது".

"பொறுங்கள்... பொறுங்கள்... மெயின் சுவிட்சை நான் நிறுத்துறேன். இல்லாட்டி உங்களுக்கு 'ஷாக்' அடிக்கும்".

திடீரென்று ஒரு மூலையில் அலறல் கேட்டது. பட்டுத் துணிக்காகச் சிலர் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். ஒல்லியான மனிதன் அங்கு வேகமாக ஓடினான்.

"நீங்கள் முட்டாள்கள்" என்று குற்றம் சாட்டும் வகையில் ஒல்லியான மனிதன் சொன்னான். "இப்படி இழுத்தால் துணி கிழிந்து கந்தலாயிடும். அது ரொம்ப விலை உயர்ந்த பட்டுத் துணி... இந்த வீட்ல எங்கேயோ அளவுகோல் இருக்கும். அதாலே துணியை அளந்து சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுங்கள்."

திடீரென நாய் குரைக்கும் ஒலி. பெரிய நாய் வேகமாக அறைக்குள் நுழைவதை எல்லோரும் கண்டனர். அது கோபத்துடன் சூறையாடுகிறவர்களை நோக்கிப் பாய்ந்தது.

"டைகர்... டைகர்" ஒல்லியான மனிதன் கத்தினான்.

டைகர் தனது வாயில் சூறையாடுகிற ஒருத்தன் சட்டையை கவ்விக்கொண்டு வாலை ஆட்டியவாறு ஒல்லியான மனிதன் முன்னால் தலையைத் தாழ்த்தியபடி வந்தது.

நாயைப் பார்த்தவுடன் கும்பல் கலைந்தோடி விட்டது. நாயினால் கடிபட்டவன் மட்டும் மிஞ்சியிருந்தான்

அவன் ஒல்லியான மனிதனை நோக்கிக் கேட்டான். "யார் நீ?"

நோஞ்சலான மனிதன் புன்முறுவலுடன் சொன்னான். "நான்தான் இந்த வீட்டின் சொந்தக்காரன். உன் கையிலுள்ள கண்ணாடி ஜாடி கீழே விழுந்திடப் போகுது... ஜாக்கிரதை!".

★ ★ ★


## கூலி

வெறி பிடித்த கும்பல் நகரை மும்முரமாகச் சூறையாடிக் கொண்டிருந்தது. வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்படுவதால் நகரமெங்கும் வெக்கையடித்தது.

ஒருவன் தனது தோளில் ஆர்மோனியத்தைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தவாறு அருவருப்புடன் பாடினான். "ஜாப் தும் ஹே ஹையா பர்டேஸ் லக்கார் தய்ஸ் ஒ ப்ரிதம் ப்யார்ஸி, துனியாமேன் கவுன் ஹமரா" (ஓ! எனது இனிய காதலியே! நீ என்னை விட்டு தொலைவாகப் போனபோது யார் அங்கே இருக்க முடியும்... அது நான் எனலாம் தானே).

ஒரு சிறுவன் தனது மடியில் அப்பளக் கட்டினைப் பொதிந்து கொண்டு ஓடினான். அவன் தடுக்கி விழவே தரையில் மோதி சில அப்பளங்கள் நொறுங்கின. அப்பொழுது தையல் மிஷனைத் தூக்கிச் செல்கிறவன் அவனுக்கு அறிவுரை சொன்னான். "மகனே! மிச்சமிருக்கிறத... அவை எங்கிருந்தனவோ அங்கேயே வைத்து விடு... தானாகவே அவை வெப்பத்தில் பொரிந்து போகும்".

திடீரென ஒரு சாக்கு மூட்டை 'தட்'டென நடுரோட்ல விழுந்தது. ஒருவன் முன்னே வந்து கத்தியினால் சாக்கைக் கிழித்தான். மூடையிலிருந்து



வெள்ளைச் சர்க்கரை கொட்டியது. உடனே மூடையைச் சுற்றிக் கூடிய கும்பல், சர்க்கரையை அள்ளித் தமது பைகளில் நிரப்பியது. உடம்பில் சட்டையில்லாத ஒருவன் தனது இடுப்பு வேட்டியை அவிழ்த்துத் தரையில் விரித்து இரண்டு கைகளாலும் சர்க்கரையை அதில் அள்ளிப் போடலானான்.

கார் ஹார்ன் இடைவிடமால் ஒலித்தது. ஆனால் காற்றில் வந்த இரு பெண்களின் கதறல் ஒலியே பலமாகக் கேட்டது.

சுமார் ஒரு டஜன் பேர் ரொம்பச் சிரமப்பட்டுப் போராடி பெரிய இரும்புப் பெட்டியினை வீட்டிலிருந்து வெளியே கொண்டுவந்து 'லத்தி'யினால் அதனை உடைக்க முயன்றனர்.

பால் டின்களைத் தனது தோளில் தூக்கியவாறு கடையிலிருந்து கீழிறங்கி ஒருவன் வேகமாக ஓடினான்.

காற்றினில் ஒரு சப்தம். "லெமனட்! லெமனட்! வாருங்கள்! வந்து லெமனட் குடித்து குளிர்ச்சியடையுங்கள்! கோடையில் இளைப்பாற அற்புதமான பானம்."


தனது கழுத்தில் கார்ச் சக்கரத்தை மாட்டியுள்ளவன் முன்னே வந்து இரண்டு லெமனட் பாட்டில்களை எடுத்துக் கொண்டு விற்கிறவனுக்கு நன்றி கூட சொல்லாமல் போனான்.

திடீரென அலறல் குரல் காற்றில் ஒலித்தது. "தீ... தீ... எனது பொருள்கள் தீப்பிடித்து எரிகின்றன. தயவு செய்து யாராவது தீயணைப்புப் படையினரைக் கூப்பிடுங்கள்." யாரும் அவனது வேண்டுகோளைக் கவனிக்கும் நிலையில்லை.

சூறையாடல் இன்னும் மும்மரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த உற்சாகத்துடன் பற்றியெறிந்து வேகமாகப் பரவும் நெருப்பும் கூட்டுச் சேர்ந்து கொண்டது. திடீரென துப்பாக்கி சுடும் ஓசையைச் சூறையாடுகிறவர்கள் கேட்டனர். கும்பல் கலைந்தோடியது.

போலீசார் ஆளரவமற்று வெறிச்சோடிய கடைவீதியையே கண்டனர். ஆனால் தொலைவில் புகையினூடே மங்கலான உருவம் தெரிந்தது. போலீசார் விசிலை ஊதியவாறு அதனைப் பிடிக்க ஓடினர். உருவமோ கரும் புகைக்குள் மறைந்தது.

போலீசார் மனம் தளராமல் புகைக்குள் நுழைந்து அடுத்த பக்கம் வெளியே வந்தனர். அங்கே ஒரு காஷ்மீரியக் கூலிக்காரன் முதுகில் பெரிய மூடையுடன் ஓடிக் கொண்டிருந்தான். அவனை நிற்கச் சொல்லி தொண்டை கிழியும் வரை பலமாக விசில் ஊதினர். காஷ்மீரியக்காரனோ நிற்பதாக



இல்லை. அவன் மூடையின் இயக்கத்தில் இயங்குகிறவனைப் போல ஓடினான். அது உண்மையிலே ரொம்ப கனமான மூடை. அதைத் தூக்கிச்செல்ல வேண்டுமென்ற ஆசை காரணமாக 'மூடை கனமில்லாதது' போல அவனுக்குத் தோன்றியது.

போலீசாருக்கு மூச்சிறைத்தது. ஒரு போலீஸ்காரர் துப்பாக்கியை எடுத்து சிறிதும் நம்பிக்கை இல்லாமல் சுட்டார். புல்லட் காஷ்மீர்க்காரனின் கெண்டைக்கால் சதையில் பாய்ந்தது. முதுகிலிருந்த மூடை கீழே விழுந்தது. அவன் பயமில்லாமல் திரும்பி பார்த்தான். போலீசார் ஓடி வந்து கொண்டிருந்தனர். தனது காலைப் பார்த்தான். இரத்தம் வழியத் தொடங்கியிருந்தது. அவன் வேகமான குலுக்கலுடன் மூடையை முதுகில் தூக்கிக் கொண்டு திரும்பவும் ஓட ஆரம்பித்தான்.

> **சிந்திக்கும் தன்மையின் கூர்மைக்குப் பெயர்தான் பகுத்தறிவு!**
>
> **– தந்தை பெரியார்**


"அவன் நரகத்துக்குப் போகட்டும்'. அவனை விரட்டுவதைக் கைவிட நினைத்த போலீஸ்காரர் சொன்னார்.

காஷ்மீரியக் கூலி திடீரென தடுக்கி விழுந்ததில் மூடையின் கீழே மாட்டிக் கொண்டான்.

போலீசார் அவனைப் பிடித்துக் காவல் நிலையத்திற்கு கூட்டிப் போயினர்.

காஷ்மீரியக் கூலி வழி முழுக்க கெஞ்சினான். "எனதருமை நல்ல மனுஷர்களே! ஏன் என்னைப் பிடிச்சீங்க? நான் ரொம்ப ஏழை. அது ஒரு மூடை அரிசிதான். அதைச் சமைச்சு உணவு தயாரிப்பேன். ஒன்னுமில்லா விஷயத்துக்குப் போயி என்னைச் சுட்டுக் காயப்படுத்திட்டிங்களே..." அவனது கெஞ்சலைப் போலீசார் பொருட்படுத்தவில்லை.

காவல் நிலையத்தில் காஷ்மீர்க்காரன் தன்னைக் காப்பாற்றும் வகையில் எல்லாவற்றையும் சொல்லத் தொடங்கினான். "அங்கே மத்தவங்க பெரிய பொருள்களைச்



சூறையாடினாங்க. நான் ஒரு மூடை அரிசியை மட்டும் தூக்கினேன்... அய்யா! நான் பாவப்பட்ட ஏழை மனுஷனுங்க... எனக்கு அரிசிதான் கிடைச்சது. எனக்கு சாப்பிட வேறு எதுவுமில்லை. இப்ப தினமும் சோறு சாப்பிட அரிசி கிடைச்சது". போலீஸ் அதிகாரி மறுப்பது போல அமைதியாக இருந்தார்.

கடைசியில் களைத்துப் போன காஷ்மீரியக் கூலி நெற்றி வியர்வையைத் தொப்பியால் துடைத்தான். அரிசி மூடையை ஏக்கத்துடன் திரும்பிப் பார்த்தான். பின்னர் போலீஸ் அதிகாரி முன்னர் கையை நீட்டியவாறு சொன்னான். "நீங்களே அரிசி மூடையை வைச்சுக்கங்க. ஆனால் இதை சுமந்திட்டு இங்க கொண்டு வந்ததுக்கு எனது கூலியைக் கொடுங்க... ம்... நாலணா".

★ ★ ★

## சரியான பயன்

பத்து ரவுண்டுகள் சுட்டு மூன்று பேரைக் காயப்படுத்திய பிறகு கடைசியில் பாதன் தனது இலக்கை அடைந்தான்.

அங்கு எல்லாமே பெருங்குழப்பத்தில். அது ஒரு சூறையாடல். ஒருவர் வைத்துள்ள பொருளை இன்னொருவர் அடையத் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். பாதன் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி கூட்டத்தினுள் நுழைந்தான். சுமார் ஒரு மணி நேரம் மல்லுக்கட்டி கடைசியில் ஒரு தர்மாஸ் குடுவையைக் கைப்பற்றுவதில் வெற்றியடைந்தான்.

போலீஸாரைக் கண்டவுடன் கலைந்தோடிய கும்பலுடன் பாதனும் ஓடினான்.

சீறிப் பாய்ந்த ஒரு குண்டு, பாதனின் வலது காதை உரசிப் போனது. அவன் எதையும் பொருட்படுத்தாமல் குடுவையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விழுந்தடித்து ஓடினான்.


வீட்டையடைந்த பாதன் குடுவையைத் தனது நண்பர்களிடம் பெருமை பொங்க காட்டினான்.

ஒரு நண்பன் புன்முறுவலுடன் சொன்னான். "சாகேப்... உங்களுக்கு இதைவிட வேறு நல்ல பொருள் கிடைக்கவில்லையா?"

சாகேப் பளீரென மின்னும் குடுவை உறையைப் புகழ்ச்சியுடன் பார்த்தவாறு கேட்டான். "ஏன்... இதுக்கென்ன? இதில ஏதாச்சும் தப்பிருக்கா?"

"இது ஒரு பாட்டில்... சூடான பொருளைச் சூடாக வைச்சிருக்கும்... குளிர்ச்சியான பொருளை குளிராக வைச்சிருக்கும்" என்றான் ஒருவன்.

சாகேப் உடனே குடுவையைத் தனது பைக்குள் திணித்தவாறு, "நல்லது... எனது மூக்குப் பொடியை இதில் வைத்துக் கொள்வேன். அது வெயில் காலத்தில் வெப்பமாகவும், குளிர்காலத்தில் குளிர்ச்சியாகவும் இருக்கும்" என்று பதில் கூறினான்.



★ ★ ★

## மடமையே பேரின்பம்

துப்பாக்கியின் குதிரை அழுத்தப்பட்டது. குண்டு வெடித்தது.

ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தவன் சுருண்டு விழுந்தான்.

சிறிது நேரங்கழித்து மீண்டும் குதிரை அழுத்தப்பட்டது. இன்னுமொரு குண்டு. தண்ணீர் தூக்குகிறவனின் தோள்பை கிழிந்து சுக்கலானது. அவன் பரிதாபகரமாகக் கீழே விழுந்தான். தரையில் ஓடிய நீருடன் அவனது ரத்தமும் கலந்தது.

மூன்றாவது சூடு வீணாகியது. ஈரமான சுவரில் புல்லட் பாய்ந்தது. நான்காவது குண்டு வயதான பெண்ணின் பின்பக்கத்தைத் தாக்கியது. கீழே விழுந்து சாவதற்குள் அவளால் கத்தக்கூட முடியவில்லை.

ஐந்தாவது, ஆறாவது குண்டுகள் குறி தவறின. யாரும் கொல்லப்படவில்லை.


அது சுடுகிறவனுக்கு ரொம்பக் கோபத்தைத் தந்தது. திடீரென ஒரு குழந்தை நடுரோட்டில் நிற்பதைக் கண்டான். அவன் உடனே குழந்தையை இலக்காகிக் குறிபார்த்தான்.

"என்ன செய்கிறாய்?", அவனுடன் இருந்தவன் கத்தினான். "ஏன்?" அவன் கேட்டான்.

"உனது துப்பாக்கியில் குண்டு இல்லை".

"நீ வாயை மூடு. அந்தக் குழந்தைக்கு அது தெரியாது.

★ ★ ★



## ஒரு மோசமான பேரம்

இரு நண்பர்கள் ரொம்பக் கவனமாக இருபது வயதுப் பெண்கள் பலரை நுணுக்கமாகப் பார்த்து, இறுதியில் ஒருத்தியைத் தேர்ந்தெடுத்தனர். அவளை நாற்பத்து இரண்டு ரூபாய் விலை கொடுத்து வாங்கினர். ஒருவன் அவளை வீட்டிற்குக் கூட்டிச் சென்றான். காலையில் அவளது பெயரினைக் கேட்டான்.

அவள் சொன்னாள். அவன் திடுக்கிட்டு, "நீ வேறு மதத்தைச் சார்ந்தவள் என்று அவர்கள் என்னிடம் சொன்னார்களே?" என்றான்.

"இல்லை. அவர்கள் உன்னிடம் சொன்னது பொய்" என்றாள் அவள்.

அவன் உடனே தனது நண்பன் வீட்டிற்கு விரைந்தோடிச் சென்று கத்தினான். "அந்த தடியனுங்க நம்மளை ஏமாத்திட்டானுங்க... நம்ம மதத்துப் பெண்ணைப் பற்றி நம்மகிட்டேயே மறைச்சிருக்கானுங்க.. வா. அவளை அவனுக மூஞ்சியிலே திரும்பி விட்டெறிஞ்சிட்டு வந்திடுவோம்."

★ ★ ★

## அவையடக்கம்

இரயில் நிறுத்தப்பட்டது.

வேறு மதத்தைச் சார்ந்த பயணிகள் மட்டும் தனியாகப் பிரிக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவராக இரயிலிலிருந்து வெளியே இழுக்கப்பட்டு குத்தியோ அல்லது சுடப்பட்டோ கொல்லப்பட்டனர். அந்த வேலை முடிந்ததும் ஒரே மதத்தினரான மிச்சமுள்ள பயணிகளுக்கு அல்வா, பால், பழங்கள் வழங்கி சந்தோசப்படுத்தினர்.

மீண்டும் இரயில் புறப்படுவதற்கு முன்னர் கொலையாளிகளின் தலைவர் பயணிகளிடையே உரையாற்றினார். "சகோதர சகோதரிகளே! முதலில் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம். இரயில் காலதாமதமாக வரும் என்று எங்களுக்குச் செய்தி கிடைத்திருந்தது. அதனால் தான் நாங்கள் விரும்பியவாறு உங்களை உபசரித்து மகிழ்ச்சியடையச் செய்ய முடியாமல் போய்விட்டது!"

★ ★ ★

> ***கல்வியும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்!***
>
> **– தந்தை பெரியார்**

## மாபெரும் தவறு

வயிற்றினுள் சொருகப்பட்ட கத்தி, அடிவயிறு வரை கீழ்நோக்கி இழுக்கப்படுகையில் பைஜாமா கயிறை இரண்டு துண்டாக்கி அவன் ஒரு ஆண்பிள்ளை என்பதை வெளிப்படுத்தியது.

"சே !... மாபெரும் தவறு செய்துவிட்டனே!" கொலையாளி பெருமூச்சு விட்டான்.

★ ★ ★



## ஒய்வு தேவை

"அவன் சாகவில்லை. அவனுக்கு இன்னும் மூச்சிருக்கிறது."

"சனியன்! அவன் இனி எக்கேடோ கெட்டுப் போகட்டும். நான் ரொம்பக் களைத்துப் போய்விட்டேன்".

★ ★ ★

## இரக்கம்

"தயவு செய்து... ப்ளீஸ்... எனது சின்னமகளை என் கண்முன்னால் கொல்ல வேண்டாம். உங்களைக் கெஞ்சி கேட்கிறேன்."

"நல்லது. அவளிடம் யாரும் கடுமையாக நடக்க வேண்டாம். அவன் வேண்டுகோளை ஏற்போம். அவள் உடுத்தியுள்ள துணிகளை மட்டும் வாங்கிக் கொண்டு வெளியே துரத்துங்கள்."

★ ★ ★

**வேளாண்மை:**

# பருத்தியில் சாம்பல்கூண் வண்டு

பருத்தி நம் நாட்டின் பொருளாதாரத்தின் மிக முக்கியப் பங்கு வகிக்கும் பணப்பயிர்களுள் ஒன்றாகும். இந்தியாவில் மட்டும் சுமார் 160 பூச்சியினங்கள் பருத்தியினைப் பல்வேறு பருவத்தில் தாக்கி 60–70 விழுக்காடு வரையிலும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றில், பருத்தி நன்கு பூத்துக் காய்த்திருக்கும் பருவத்தில் (100–120 நாட்கள்) பயிரைத் தாக்கி ஒரு குறிப்பிட்ட அளவு சேதத்தை ஏற்படுத்துவதில் சாம்பல் வண்டுகளும் முக்கிய இடம் பெறுகின்றன.

### *சாம்பல் வண்டின் தாக்குதல்:*

சாம்பல் நிறத்தில் நீண்ட கூர்மையான வாயைக் கொண்ட இவ்வண்டுகள் இலைகளில் பிறை வட்ட வடிவமான சேதத்தை ஏற்படுத்துகின்றன. இவை இலை நரம்புகள் தவிர்த்து, மற்ற பாகங்களைக் கடித்துத் தின்னும். மூன்று வகையான இச்சாம்பல் வண்டுகள் பருத்தியைத் தவிர கத்தரி, வெண்டை, சோளம், ராகி மற்றும் பயிறு வகைப் பயிர்களையும் தாக்குகின்றன. இவ்வண்டுகள் ஆண்டு முழுவதும் காணப்பட்டாலும் அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை அதிகம் காணப்படும். பருத்தியில் இவை இலைகளைத் தின்பதால் அதிகம் பாதிப்பு ஏற்படுவதில்லை. ஆனால் இவ்வண்டின் புழுக்கள் மண்ணில் இருந்துகொண்டு வேரைக் கடித்துத் தின்னும்பொழுது தாக்கப்பட்ட செடி முழுவதுமே வாடிவிடும். இதனால் பருத்தியில் பெரும்பாதிப்பு ஏற்படுகிறது.



### *சாம்பல் வண்டு வாடல் நோய்:*

இவற்றின் புழுக்கள் பருத்திச் செடியின் சல்லி வேர்களையும், பின் ஆணி வேரையும் சுரண்டிக் கடித்துத் தின்பதால் செடிகள் வாடிவிடுகின்றன. இதுபோன்ற பாதிப்பு டிசம்பர் – ஜனவரி மாதங்களில் காணப்படும். முதலில் சேதம் ஆங்காங்கே காணப்படும்.பின்பு வயல் முழுவதுமே பரவிவிடும் வாய்ப்பு உள்ளது. செடி முழுவதுமே காய்ந்து விடுவதால் சுமார் 50–60 விழுக்காடு வரை மகசூல் குறைகிறது.

### *புழு தாக்கிய செடியைக் கண்டறிதல்:*

வாடல் தோன்றிய செடியின் அடிப்பாகம் தரை மட்டப் பகுதியில் வீக்கம் ஏற்பட்டது போலிருந்து, பின்பு செடி முறிந்து வாடி விடும். இது தண்டு கூண் வண்டினால் ஏற்படுவது. வீக்கம் போன்ற பகுதியில் பட்டையை நீக்கிவிட்டுப் பார்த்தால் கூண் வண்டு இருப்பது தெரியும். சில பூசணங்களாலும் வாடல் நோய் ஏற்படும். அத்தகைய செடிகளை வேரோடு பிடுங்கி, வேரின் மேல் தோலை இழுத்தால், வேர் அழுகியிருப்பதால் கையோடு வந்து விடும். இதன்மூலம் பூசணங்களின் தாக்குதலை அறியலாம்.

வாடல் நோய் தாக்கிய செடிகளை சுற்றிலும் மெதுவாக மண்ணைத் தோண்டி எடுத்து மண்ணை உன்னிப்பாகக்கவனித்தால் அரிசி போன்ற வெண்நிறப் புழுக்களைக் காணலாம். ஒரே செடியைச் சுற்றிலும் குறைந்தது 10–15 புழுக்கள் காணப்படும். பின் செடியை மெதுவாகத் தோண்டி எடுத்துப் பார்த்தால் புழுக்கள் சுரண்டித் தின்ற பாகங்களையும் அவை பழுப்பு நிறமடைந்திருப்பதையும் கண்டறியலாம்.

### *வாழ்க்கைச் சுழற்சி:*

பெண் வண்டுகள் செடியின் அடிப்பாகத்தில், மண்ணில் 20–25 வெண்மை நிற முட்டைகளை இடுகின்றன. ஒரு வண்டு சுமார் 100–150 முட்டைகளை இடும். இவற்றிலிருந்து வெளிவந்த சிறிய கால்கள் இல்லாத பழுப்பு வெண்நிறம் கொண்ட புழுக்கள் வேரைத் தின்று வளர்கின்றன.

பின்பு 30–35 நாட்களில் கூட்டுப்புழுவாகி, பிறகு வண்டாக மாறி இலைகளைத் தாக்குகின்றன.

### *கட்டுப்பாடு முறைகள்:*

பொதுவாக இவ்வண்டு கத்தரிச் செடியில் மிக அதிகமாகக் காணப்படுவதால் சேதம் அதிகம் தோன்றி பின் பருத்திக்கு பரவ வாய்ப்புள்ளது. எனவே கத்தரிப் பயிரை ஊடு பயிராகவோ அல்லது பருத்திக் காட்டின் அருகிலோ நடுவதைத் தவிர்க்க வேண்டும்.

வண்டுகள் பருத்தியில் அதிகம் காணப்படும். அக்டோபர் – நவம்பர் மாதங்களில் – குறிப்பாக வீரிய ஒட்டுப் பருத்தி உற்பத்தி செய்பவர்கள் குளோர்பைரிபாஸ், எண்டோசல்பான், மானோகுரோடோபார்ஸ் அல்லது மீதைல் பாரதியான் போன்ற மருந்துகளில் ஏதாவது ஒன்றை விசைத்தெளிப்பான் மூலம் 10 லிட்டர் தண்ணீருக்கு 70–75 மில்லி மருந்து என்ற விகிதத்தில் கலந்து தெளிப்பதால் வண்டுகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். இவ்வண்டுகளைக் கையால் பிடித்து அழித்துவிடச் செய்வது சிறந்த முறையாகும். பருத்திச் செடியின் 70–90 நாட்கள் உள்ளபோது வாடல் தென்பட்டால் அதற்குச் சரியான காரணத்தை அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாடல் சாம்பல் கூண் வண்டினால் தான் ஏற்பட்டது என்றால் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைக் கடைபிடித்து இவ்வண்டின் சேதம் பரவாமல் தடுக்கலாம்.

*செ. பழனிசாமி, கோ. ஸ்ரீநிவாசன்,*
*கோ. அன்பழகன்,*
*பூச்சி இயல் துறை,*
*தமிழ்நாடு வேளாண்மைப்*
*பல்கலைக் கழகம்,*
*கோவை 641 003.*




தமிழகத்தில் பயிரிடப்படும் காய்கறிகளில் கத்தரிக்காய்க்கு முதன்மையான இடம் உண்டு. ஏழை மக்கள் அதிக அளவில் விரும்பி உண்ணும் காயாகும் இது. கத்தரியை எழுபதற்கும் மேற்பட்ட பூச்சி இனங்கள் தாக்கி சேதத்தை விளைவிக்கின்றன. அவற்றுள் முதன்மையானதான, தண்டு மற்றும் காய் துளைப்பான் அதிக சேதாரத்தை ஏற்படுத்துகிறது.

இது கத்தரி மட்டுமல்லாது – தக்காளி, உருளைக்கிழங்கு, மணத்தக்காளி, சுண்டைக் காய் மற்றும் களைச் செடியான கண்டங்கத்தரி போன்றவற்றையும் தாக்குகிறது.

அந்தப் பூச்சியானது 1 செ.மீ. நீளமுடையது. அதன் முன் இறக்கையில் பழுப்பு நிறமும், கருப்பு நிறமும் திட்டுத்திட்டாகப் பரவிக் காணப்படும். சில இடங்களில் செந்நிறப் புள்ளிகளும் காணப்படும். பின் இறக்கையானது ஒளி ஊடுருவக் கூடியதாகவும் கருப்புப் புள்ளிகளுடனும் காணப்படும். இதன் வளர்ந்த நிலைப்புழு இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

***தாக்குதலின் அறிகுறிகள்***

பெண் அந்துப்பூச்சி இலையின் அடிப்பாகம், தண்டு, பூ மொட்டு மற்றும் காயின் மீது முட்டைகளை இடுகிறது. இலையிலுள்ள, முட்டைகளிலிருந்து வெளிவரும் இளம்புழு, இலையின் மத்திய நரம்பைத் துளைத்து, இலைக் காம்பு வழியாக இளங்குருத்தை அடைகிறது. குருத்தின் உட்பகுதியை உண்பதால் முதலில் செடியின் நுனி வாடி, சாய்ந்து காணப்படும். பிறகு காய்ந்தும் போய்விடும். சில சமயங்களில் இதன் தாக்குதலினால் செடி இறந்துபோய்விடும் வாய்ப்பும் உள்ளது. பின்னர் பூ, மொட்டுக்களையும் காய்களையும் இப்புழுக்கள் தாக்குகின்றன. அதனால், பூ மொட்டுக்கள் உதிர்ந்துவிடுகின்றன.

காய்களைத் துளைத்து உள்ளே செல்லும் இப்புழுக்களைக் காய்களின் மீதுள்ள வட்ட வடிவத்துளைகளையும், அத்துளைகளைப் புழுக்களின் கழிவுகள் அடைத்துக் கொண்டிருப்பதையும் வைத்து அடையாளம் காணலாம். காய்களில் இப்புழுக்களின் தாக்குதலினால், அவற்றின் மீது பூசனங்கள் வளர்ந்து, சாப்பிட உபயோகமற்றதாக்கி விடுகிறது. ஒரு புழு கிட்டத்தட்ட 4 முதல் 6 காய்கள் வரை தாக்கும். இது கத்தரியின் 75 விழுக்காடு வரையில் சேதாரத்தை ஏற்படுத்துகிறது.

***வாழ்க்கை சுழற்சி***

தாய் அந்துப் பூச்சி இலையின் அடிப்பாகம், குருத்து, பூ மொட்டுகள் மற்றும் காய்கள் மீது சுமார் 250 வெண்நிறத் தட்டையான முட்டைகளை ஆங்காங்கு இடுகின்றன. முட்டையிலிருந்து இளம்புழுக்கள், 3' முதல் 5 நாட்களில் வெளிவருகின்றன. குருத்து மற்றும் காய்களின் உட்பகுதியை உண்டு வளரும் இப்புழுக்கள் 7 முதல் 13 நாட்களில் முழுமையான வளர்ச்சியடைகின்றன. முழுவளர்ச்சியடைந்த புழுக்கள் காய் மட்டும், குருத்திலிருந்து வெளிவந்து செடிகளின் மீதோ அல்லது கீழே விழுந்துள்ள இலைகளின் மீதோ கூட்டுப்புழுக்களாக மாறிவிடுகின்றன.

கூட்டுப் புழுப்பருவம் படகு படிவ, பட்டுப் போன்ற பொருளாலான கூட்டுக்குள் இருக்கும். கூட்டுப்புழுக் காலம் 9 முதல் 11 நாட்களாகும். 19 முதல் 28 நாட்களுக்குள் அதன் மொத்த வாழ்க்கைச் சுழற்சி முடிவடைந்துவிடுகிறது.

***தடுப்பு முறைகள்***

தாக்கப்பட்ட காய்கள், சாய்ந்த செடிக் குருத்துக்கள் ஆகியவற்றைச் சேகரித்து அழித்து விடவேண்டும். கீழே விழுந்த இலைகள் மற்றும் செடியின் பிற பாகங்களைச் சேகரித்து அழிப்பதன் மூலம் கூட்டுப்புழுக்களையும் அழிக்கலாம்.

டிரைக்கோகிரம்மா, ட்ராதலா ஃப்ளோயூர் பிட்டாலிஸ், பிரக்கான் மற்றும் சிரக்கியா ஸ்னோபி போன்ற ஒட்டுண்ணிகள் இயற்கையாகவே சிறந்த கட்டுப்பாட்டைத் தருகின்றன. கிரைசோபெர்லா என்ற ஊன்விழுங்கியும் சிறந்த முறையில் இப்பூச்சியைக் கட்டுப்படுத்துகிறது. இப்புழுவின் தாக்குதல் மிகவும் அதிகமாக இருந்தால் கார்பரில் (2 கிராம்/லிட்டர் தண்ணீருக்கு) எண்டோசல்பான் குனோல்பாஸ் அல்லது மோனோகுரோட்டோபாஸ் பயிரை இப்புழுக்களின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கலாம்.

**– கோ.ஸ்ரீநிவாசன், பி.சி.சுந்தரபாபு, எஸ். பழனிச்சாமி மற்றும் கோ.அன்பழகன்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை.**

# மானுடத்தின்
# மாமருந்து...

கவிஞர் செ.சு. மலரடியான்

பந்திஇலை இல்லையவள் பருதிக் காற்று;
பாழ்வெளியை வளமாக்கிப் பார்க்கும் மேகம்!
கந்தருவப் பொன்வீணை மனிதம் தன்னை
கருவாகச் சுமக்கின்ற பெருமைப் பேறு!
விந்தையல்ல குடும்பத்தின் தலைமை ஏற்று
வீட்டரசி எனவாசம் வீசும் முல்லை!
மந்தையென மண்டியிட்டு மடமை தன்னில்
மதிமயங்கும் மானுடத்தின் மாம ருந்து!

பெண்ணென்றால் பாறையல்ல! வாழ்வ ரங்கில்
பெரும்பதவி வகிக்கின்ற புகழின் தோன்றல்!
பண்ணென்றால் அவள்பாடும் தாலாட் டுத்தான்
பால்மனதை சமுதாய சிற்பி யாக்கும்!
விண்ணென்றால் அதுகூட சுருக்க மாகும்;
விரிவான நேயமனம் பெண் மனம்தான்!
கண்ணென்றால் சிறப்பென்பர் அதனின் மேலாய்
காணுகின்ற ஒன்றுண்டு, அதுவே பெண்மை!

குறைந்துவரும் சமுதாய மனிதத் தன்மை
கொடுநோயைத் தீர்க்கின்ற தாய்தான் பெண்மை!
மறைந்துவரும் தனித்தன்மை இழப்பை யெல்லாம்
மாறாத இலக்கியமாய் மாற்றும் தூய்மை!
கரைந்துவரும் பண்பாட்டுச் சிதில மெல்லாம்
கலையாமல் காப்பதற்கு முயலும் சேவை!
உறைந்துவரும் விழிப்புணர்வைத் தூசு தட்டும்
உறக்கமிலாத் தியாகத்தால் உயர்த்தும் பெண்மை!

குற்றமெலாம் சாதனையால் நினைத்தே மூடர்
கொடுமைகளில் குருதிஉலா நிகழச் செய்து
வற்றல்மரம் போலுள்ளம் கொண்டாள்; பெண்ணை
வாலிபத்தின் வயலாக மட்டும் கண்டார்!
அற்பசுகத்தால் சிலபேர் ஆடும் ஆட்டம்
அழகல்ல பெண்மைக்கு! அவரை வைத்தே
கற்பரசியா யிருக்கும் மகளிர் தம்மைக்
கற்பனைசெய் தல்கூடக் கீழ்மை தானே!



# மதநல்லிணக்கம் - சமூக ஒற்றுமைக்காக

## எடுக்கப்பட்ட முடிவுகள்

மத நல்லிணக்கம் - சமூக ஒற்றுமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையில் அக்டோபர் 22 மற்றும் 26 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் எல்லாக் கட்சியினரும் தங்களுடைய கருத்துகளை எடுத்துரைத்தார்கள். இரண்டாம் நாள் கூட்ட முடிவில் - அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:

### *சாதிச் சங்கங்கள் மற்றும் அமைப்புகள்*

வன்முறையைத் தூண்டிவிடும் வண்ணம் செயல்படுகின்ற சாதிச் சங்கங்கள், சாதி அமைப்புகள் மற்றும் அவைகளின் தலைவர்கள் மீது சட்டப்படி அரசு கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.



### *பேரணிகள் மற்றும் ஊர்வலங்கள்*

சாதி-மத உணர்வுகளைத் தூண்டக்கூடியதும் வன்முறை விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதுமான ஊர்வலங்களை நடத்துவதற்குத் தடை விதிக்கவேண்டும்.

### *வன்முறையைத் தூண்டும் - சுவரொட்டிகள்*

சாதி-மத அடிப்படையில் வன்முறைகளைத் தூண்டும் சுவரொட்டிகளை ஒட்டுவதையும், சுவரில் எழுதுவதையும் அனைவரும் முற்றிலுமாகத் தவிர்க்கவேண்டுமென்பதுடன், அத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் மீது சட்டப்படி அரசு கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

### *சிலைகள்*

இனிமேல், புதியதாகச் சிலை வைப்பதாக இருந்தால், அது அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே வைக்கப்பட வேண்டும். சிலைகளை வைப்பவர்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே வைக்கப்பட்டுள்ள சிலைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பும், பாதுகாக்கின்ற பொறுப்பும் அந்தச் சிலைகளை வைத்த சங்கம் அல்லது பிரிவு அல்லது தனிப்பட்டவரையே சாரும்.

### *ஓய்வுபெற்ற அலுவலர்கள் சாதிச் சங்கங்களில் பங்கேற்றல்*

பதவியில் இருக்கும்போது, அரசு அலுவலர்கள் சாதிக் கூட்டங்களிலும், சாதிச் சங்க நடவடிக்கைகளிலும் பங்கேற்கக் கூடாது என்று அரசு அதிகாரிகள் நடத்தை விதிகளில் ஏற்கெனவே விதிமுறைகள் உள்ளன. அதேபோல், ஓய்வுபெற்ற பின்னரும் சாதிச் சங்க நடவடிக்கைகளிலும், சாதிக் கூட்டங்களிலும் பங்கேற்பதைத் தவிர்க்கும்படி விதிகளில் வழிவகை செய்துவதுபற்றி மாநில அரசு பரிசீலிக்க வேண்டும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களின் நடத்தை விதிகள் மைய அரசால் வகுக்கப்படுவதால், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் நடத்தை விதிகளிலும் மேலே குறிப்பிடப்பட்ட மாறுதல்களைச் செய்யும்படி மாநில அரசு, மைய அரசிற்குப் பரிந்துரை செய்யவேண்டும்.

### *தீண்டாமை ஒழிப்பு*

தீண்டாமை ஒழிக்கப்படுவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகளைத் தீவிரப்படுத்த அனைத்து வகுப்பினரும், அனைத்துக் கட்சியினரும் முழுமையாக ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

குடும்பக் கட்டுப்பாடு போன்ற திட்டங்களுக்காக அரசு, பிரச்சார நாடகங்களை நடத்தி வருவதுபோலத் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்வதற் காகத் தேவையான நிதியை ஒதுக்கி மதநல்லிணக் கத்திற்கும், சமூக ஒற்றுமைக்கும் மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்ட நாடகங்களை நடத்தத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும். தொலைக்காட்சிகள், வானொலி மற்றும் கலைநிகழ்ச்சிகள், செய்திப் படங்கள், கல்வி நிலையங்களில் போதனைகள் மூலமும் இத்தகைய பிரச்சாரம் நடத்த அரசு தொடர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**வருணமா! மரணமா? - கலைஞர்**

பரணி பலபாடிப்
பாங்குடன் வாழ்ந்த
பைந்தமிழ் நாட்டில்,
சொரணை சிறிதுமிலாச்
சோதாக்கள் சிலகூடி
வருணத்தை நிலைநாட்ட
வகையின்றிக்
கரணங்கள் போட்டாலும்
மரணத்தின் உச்சியிலே
மானங் காக்க
மறத்தமிழா போராடு!

(-1945ல் எழுதியது)

### *அமைதிக் குழுக்கள்*

தற்போது, மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ள அமைதிக் குழுக்களின் பணிகளை மேலும் தீவிரப்படுத்துவதோடு, ஒவ்வொரு கிராமத்திலும் சமுதாய மதநல்லிணக்க அமைதிக்குழுக்களை அமைக்க மாநில அரசு நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும். இந்த அமைதிக் குழுக்கள் கிராம அளவில், தீண்டாமையைத் தடுத்து நிறுத்த முயற்சி மேற்கொள்ளவேண்டும். அப்படி முடியாவிட்டால் அதுகுறித்துக் காவல்துறைக்குப் புகார் செய்யவேண்டும். இக்குழுக்கள் சில அதிகாரங்களுடன் செயல்பட மாநில அரசு, வழிகாட்டும் நெறிகளைப் பரிசீலித்து உருவாக்க வேண்டும்.

"இருட்டறையில் உள்ளதடா
உலகம்; சாதி
இருக்கின்ற தென்பானும்
இருக்கின்றானே!
மருட்டுகின்ற மதத் தலைவர்
வாழ்கின் றாரே!
வாயடியும் கையடியும்
மறைவ தெந்நாள்?"

- புரட்சிக் கவிஞர் **பாரதிதாசன்**

### *தென் மாவட்டங்களில் வேலைவாய்ப்பு*

வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் தென் மாவட்டங்களில் தொழிற்சாலைகளை ஏற்படுத்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்.

### *பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளின் பங்கு*

சாதி-மதக் கலவரங்கள், மோதல்கள், வன்முறைகள் ஆகிய நிகழ்வுகள் ஏற்படுகின்றபொழுது, அவைகளைப் பற்றிய செய்திகளைப் பெரிதுபடுத்தியும், முக்கியத்துவம் கொடுத்தும் வெளியிடுகின்ற காரணத்தால், வன் முறைகள் பரவவும், தீவிரமடையவும் வழி வகைகள் ஏற்படுவதால் சாதி மதக் கலவரங்கள் பற்றிய செய்திகளை மிகைப்படுத்தி வெளியிடுவதைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்டப் பத்திரிகைகள், தொலைக் காட்சிகள், வானொலி ஆகியவை உறுதுணையாக அமையவேண்டும் என்று இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. இதற்கெனப் பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தி வெளியிடுவோர் கொண்ட ஒரு கூட்டத்தை முதல்வர் கூட்டிட வேண்டும்.

*- இவ்வாறு, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்ட முடிவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

# சிறுகதை பரிணாமத்தில் எழுத்தாளர்கள்

**– முத்து. பார்த்திபன்**

இலக்கியத்தின் தனிப்பெரும் அமைப்பாகக் கவிதை, கட்டுரை, நாடகம், நாவல், சிறுகதை ஆகியன விளங்கின. சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே சிறு கதையானது இலக்கிய வடிவத்தின் ஆணிவேராகத் திகழ்ந்து விளங்கியிருக்கிறது.

தற்போது பத்திரிக்கைகளில் வெளிவரும் சிறுகதைகள் வளர்வதற்கு முன்பே - பாட்டி கதை, ஏசு கதை, ராமர் கதை, நீதிக் கதை, பீர்பால் கதை, தெனாலிராமன் கதை, ராஜாராணி கதைகளெல்லாம் சிறுகதை வடிவத்தைத் தொட்டுவிட்டன.

18ஆம் நூற்றாண்டில்தான் சிறுகதை வித்தாக விழுந்திருந்தாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் மக்களுக்குப் பயன்படும் கனிமரமாக அது தழைத்தோங்கியது.

**நிர்பந்தம்**

இலக்கிய, இலக்கண வரம்புக்கு உட்பட்டு - பத்திரிக்கைகளின் வாயிலாகச் சிறுகதையானது இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்தது. வளர்ந்துவரும் கம்ப்யூட்டர் யுகத்திற்கு ஏற்ப காலத்தின் வேகமும், உலகின் அளவும் குறைந்துகொண்டே வருவதால், அதற்கேற்றபடி மக்களின் ரசனையும், வேகமும், நிர்பந்தமும் காலமாற்றத்தின் தேவைக்கேற்ப ஈடுகொடுக்க வேண்டியதாகிறது. இலக்கியவாதிகளின் இந்த வேகத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில்தான் சிறுகதை வளர்ச்சி பெற்றது.

குறைந்த நேரத்திற்குள் துரிதமாக ஒரு கருத்தை 'பசக்'கென்று மனதில் பதிய வைக்க வேண்டிய நிர்பந்தம் சிறுகதை எழுத்தாளர்களுக்கு ஏற்பட்டதை மறுக்க முடியாது.

**உத்திகள்**

ஒரு சம்பவக் கோவையையோ, பாத்திரத் தன்மையையோ, குணத்தின் மிகுதிப்பாட்டையோ, ஆழமாய் நமக்குள் பதியச் செய்ய எழுத்தாளர்கள் சிறுகதை வாயிலாக முயன்று வந்திருக்கிறார்கள்.

ஜீன்பால் சார்ட்ரே, எட்கர் ஆலன்போ, ஜான், கால்ஸ்வொர்த்தி, மாபஸான் எர்னஸ்ட் ஹெமிங்வே, வில்லியம் ஃபால்க்னர், ஜாக்லண்டன் போன்ற வெளிநாட்டு எழுத்தாளர்கள் வெவ்வேறு வகை உத்தியைச் சிறுகதையில் கையாண்டுள்ளார்கள்.

சிறுகதை என்பதே குட்டையாகத்தான் இருக்க வேண்டும் என்கிற வாதத்தை உடைத்தெறிந்த இந்திய எழுத்தாளர்களில் எம்.டி. வாசுதேவன் நாயர், கே.ஏ. அப்பாஸ், வி.ஸ. காண்டேகர், கிஷன் சந்தர், பாபனி பட்டாச்சார்யா, பாலகும்மி, பத்மராஜு போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஜெயகாந்தனின் 'விழுதுகள்', எம்.டி. வாசுதேவன் நாயரின் 'இருட்டிண்டே ஆத்மா', காண்டேகரின் 'கள்ளக் காதலி' போன்ற புகழ்பெற்ற சிறுகதைகள் அதிகப் பக்கங்களில் வெளிவந்த சிறுகதைகளாகும்.




## அச்சாணி

1826ஆம் ஆண்டில் தர்ண்டவராய முதலியார் என்பவர் மராத்தி மொழியில் வழக்கிலிருந்த பஞ்சதந்திரக் கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துச் சிறுகதை உலகிற்கு முன்னோடியாக விளங்கினாலும் வ.வெ.சு. ஐயர் தான் இந்தச் சிறுகதை உலகியலுக்கு அச்சாணியாக விளங்கினார்.

1910-1920ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அவர் எழுதிய 'குளத்தங்கரை அரசமரம்', 'மங்கையர்கரசியின் காதல்' போன்ற சிறுகதைகள் தாம் தமிழில் வெளிவந்த முதல் சிறுகதைகளாகும்.

இவரது கதையில் நாட்டுப் பற்றும், பொது நல நோக்கமும், மண்ணின் மணமும், வாழ்க்கைப் பிரச்சினைகளும் பிரதிபலித்ததை மறந்துவிட முடியாது.



## பொற்காலம்

1930-ஆம் ஆண்டு முதல் 1950ஆம் ஆண்டு வரையில் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதை உலகப் பொற் காலமாகத் திகழ்ந்தது. அந்தக் காலகட்டங்களில்தான் இலக்கியப் பத்திரிக்கைகளும், சமூக பொறுப்புள்ள பத்திரிக்கைகளும் வெகுவாக வளர்ச்சி அடைந்தன.

ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி), புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன் ஆகிய மூன்று ஜாம்பாவான்களும் சிறுகதை உலகில் தங்களுக்கென்று புதிய பாணியைப் பறைசாற்றியவர்கள்.

வெ.நா. பிச்சமூர்த்தி, கு. அழகிரிசாமி, தி.ஜ. ரங்கநாதன், அசோகமித்ரன், மௌனி, சி.சு. செல்லப்பா, தேசிகன் போன்ற எழுத்தாளர்கள் பத்திரிக்கையில் ஆசிரியர்களாகவும், உதவி ஆசிரியர்களாகவும் பலகாலம் தொண்டு புரிந்த சிந்தனைவாதிகள். சொந்தப் படைப்பிலும், வெளியாக்கப் படைப்புகளிலும், பல புதுமைகளைத் தமிழுக்குக் கொணர்ந்து பெருமை சேர்த்தவர்கள்.

## புதுமைப்பித்தன்

நன்கு வளர்ச்சியடைந்த மேலைநாட்டுச் சிறுகதை இலக்கியத்தை மொழி பெயர்த்து வெளியிட்டவர். 'அகல்யை', 'தேக்கங்கள்', 'தெருவிளக்கு'ப் போன்ற கதைகளில் புதுமையான சோதனைகள் செய்தவர். கருத்தின் வேகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தவர்.

சில சமயம் மக்களுக்குப் புரியாத பாஷையில் எழுதியிருக்கிறார் என்பதும் அவரே ஒத்துக்கொண்ட உண்மை. 'தமிழ்ச் சிறுகதை மன்னன்' புதுமைப்பித்தனின் புதிய முயற்சிதான் இன்றைய எழுத்தாளர்களின் பெருக்கத்திற்கு மூலம் என்றால் அது மிகையாகாது.

## கு.ப.ரா.

தனித்துவம் வாய்ந்த மென் எழுத்துக்குச் சொந்தக்காரர், கு.ப.ரா. அவர்கள். மன உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாத்திரங்களை வடிவமைப்பதில் சிறந்தவர்.

மாபஸான் பாணியிலே குணச்சித்திர உணர்வுகளுக்கும் தன் எழுத்தைப் பதியமிட்டார். ஒரு சிறு விஷயத்தைப் பெரிதாக்கி அதற்கு இலக்கிய வடிவம் கொடுத்து உருக்கொடுத்த இவரின் 'தாய்', 'கனகாம்பரம்', 'விடியுமா?' ஆகிய சிறுகதைகள் இலக்கியப் பிரசித்தி பெற்றவை.

## கல்கி

இவர் பாத்திரங்களை முன்னிலைப்படுத்தி, சம்பவக் கோவைகளுக்கு முக்கியத்துவம் அளித்தவர். கதையம்சமும், கலையழகும் கொண்ட இவர் கதைகள் சாதாரண வாசகர்களும் எளிமையாகப் புரிந்துகொள்ளும் வண்ணம் இருக்கும். சிறிதளவு பிரச்சாரச் சங்கதியும், சமூக ஏற்றத்தாழ்வுகளை அலசும் கதையம்சமும், கற்பனைக் கலவையும் இவர் கதைகளில் மிளிரும் உண்மைப் படைப்பாகும். 'ஒற்றை ரோஜா', 'மயில்விழி மான்' போன்ற கதைகளை எழுதியதோடு விந்தன், பகீரதன், ஜெகசிற்பியன், சுந்தா, கௌசிகன் போன்ற மூன்றாம் தலைமுறை எழுத்தாளர்களையும் எழுத ஊக்கப்படுத்தியவர் கல்கி.

ந.சி.சு.யின் படைப்புகள் வாழ்க்கை அனுபவங்களைக் கற்பனை கலந்து எழுதிய இவரின் 'சக்கரவாகம்', 'ஊர்வலம்', 'சூரியகாந்தி,' 'வருஷப் பிறப்பு' ஆகிய சிறுகதைகள் புகழ்பெற்றவை.

'வெந்தழலால் வேகாது' கதையை நெல்லைத் தமிழ் மணம் கமழும் நடையில் எளிமையாக எழுதியவர் கு. அழகிரிசாமி.

வரலாற்றுக் கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதிப் புகழ்பெற்றவர் தி.நா. சுப்பிரமணியன். 'நடன சரஸ்வதி', 'தீராத ஏக்கம்' ஆகிய சிறுகதைகள் இவரின் இலக்கியத் தாகத்திற்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்திருந்தன.

தேசிகனின் 'மழையிருட்டு', 'அவள் அருள்', 'தாயா குழந்தையா' ஆகியன பெரும் பாராட்டைப் பெற்றிருந்தன.

மூதறிஞர் ராஜாஜி எழுதிய 'திக்கற்ற பார்வதி', 'முகுந்தன்', 'கூனி', 'சாந்தி', 'பட்டாசுக் கட்டு' ஆகிய படைப்புகள் இவரின் காலம்காட்டும் எழுத்துக்களாகும்.

**அண்ணா - கலைஞர்**

சுயமரியாதைக் கொள்கை, சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்பும் வகையில் அறிஞர் அண்ணாதுரை, கலைஞர் மு. கருணாநிதி ஆகியோரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

புதுமையான மறுமலர்ச்சி பெற்ற எழுத்தாளர்களில் மு. வரதராசனார் குறிப்பிடத்தக்கவர். இவரின் 'குறட்டை ஒலி'யும், 'விடுதலை'யும் பெயர் சொல்லும்படி இருந்திருக்கின்றன.

அவர்களைத் தொடர்ந்து 1950 முதல் 1965க்குள் ஜெகசிற்பியின், கோவி. மணிசேகரன், விந்தன், அகிலன், தி. ஜானகிராமன், லா.ச. ராமாமிர்தம், நா. பார்த்தசாரதி, ஜெயகாந்தன், லட்சுமி, ஆர். சூடாமணி ஆகிய எழுத்துலக மன்னர்கள் எழுத்துலகிற்கு வலிமையும், வளமும் சேர்த்தவர்கள் ஆவர்.

புதுமைப்பித்தனின் வாரிசாகவே ஜெயகாந்தன் திகழ்ந்தார் எனலாம். அவரின் 'உதயம்', 'ஒரு பிடி சோறு', 'விழுதுகள்', 'கருணையினால் அல்ல' ஆகியனவும் - சுந்தரசாமியின் 'பிரசாதம்'
லா.ச. ராவின் 'ஜனனி', 'இதழ்கள்', 'அலைகள்', 'கங்கா', 'தயா' ஆகியவையும்
தி. ஜானகிராமனின் 'சிவப்பு ரிக்ஷா', 'கொட்டு மேளமும்' - ஆர். சூடாமணியின் 'ஒளியில் என்ன மாயமோ'வும் - விந்தனின் 'முல்லைக் கொடியாள்' - சமுதாய விரோதியும் அழகான வாழ்வியல் சிறுகதைகளாகும்.


**எதிர்காலம்**

600 சிறுகதைகளுக்கு மேல் கோவி. மணிசேகரனும், எழுநூறு சிறுகதைகளுக்கு மேல் லட்சுமி சுப்பிரமணியும் எழுதி சாதனை படைத்தவர்கள். காளையார் கோயில் ரதம், கண்ணே கனியே, கற்கண்டே, உயிரும் ஒளியும், பாதுஷாவின் பாதுகையும் அபூர்வச் சிறுகதைகளாகும்.

ரா.கி. ரங்கராஜனின் 'பல்லக்கு', 'நிலா நனையுமா?' சிறுகதையும் - ஜெக சிற்பியனின் 'நரிக்குறத்தி', 'நொண்டி பிள்ளையார்' ஆகிய சிறுகதையும் புகழ்பெற்றவை.

இலக்கிய வரலாற்றில் தனக்கென்று இடம் பிடித்த சிறுகதையின் வளர்ச்சி, ஆக்க சிந்தனை உள்ள இன்றைய எழுத்துலக அறிவு ஜீவிகளின் பேனா முனையில்தான் இருக்கிறது. அதை அவர்கள் ஒளி மிகுந்த எதிர்காலத்திற்குப் படிப்போரை இட்டுச் செல்வதாகப் பயன்படுத்திட வேண்டும்.

## வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்



*ஒரு காலகட்டத்தில் பெரியார் - வரதராசுலு - திரு.வி.க. என்று முப்பெரும் தலைவர்களாக இவர்களை இணைத்தே குறிப்பிடும் அளவுக்கு அவர்களின் செயல்பாடுகள் இருந்தன.*

*பெரியார் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகியது 1925-ஆம் ஆண்டு நவம்பர் 21,22-ல் நடந்த காங்கிரஸ் கட்சி மாநாட்டில், அம்மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் திரு.வி.க.தான். பெரியார் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிய அச்சம்பவம்தான் தமிழ்நாட்டின் சமூக, அரசியல் களத்துக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது.*

*'சுயமரியாதை இயக்கத்தின் தந்தை ஈ.வெ.ராமசாமி - அதன் தாய் நான்' என்று திரு.வி.க.குறிப்பிட்டார்.*

*1938-ஆம் ஆண்டு நடந்த முதல் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை திரு.வி.க. ஆதரித்ததும், 1947-ல் கடலூரில் 'திராவிட நாடு' படத்தைத் திறந்து வைத்து 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று முழக்கமிட்டதும், திரு.வி.க.வரலாற்றிலும் தமிழக வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்.*

*பெரியாரின் 'குடியரசு' பத்திரிகையும், திரு.வி.க.வின் 'நவசக்தி'யும் எதிர் எதிராக நின்று கரும் கருத்துப் போர் நிகழ்த்தின. அதே நேரத்தில் இருவரும் தனிப்பட்ட முறையில் நண்பர்களாகவே இருந்தனர். இதை திரு.வி.க.வே பெருமையுடன் பதிவு செய்திருப்பது இன்றைய பொது வாழ்க்கைக்கு வழிகாட்டக் கூடிய நிகழ்ச்சிகள் அல்லவா?*

*- மு.பாலகுரு*

# வறுமையின் நிறங்கண்ட மனித நேயர்: அமார்த்திய சென்



இந்த ஆண்டின் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றவர் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பேராசிரியர் அமார்த்திய சென். இதுவரை மேற்கத்திய நாட்டைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் இப்பரிசினைப் பெற்றுவந்தனர். சென் இப்பரிசினைப் பெற்றதில் பல சிறப்புக்கள் உண்டு. இப்பரிசினைப் பெறும் முதல் இந்தியர், முதல் ஆசியர், முதல் மூன்றாவது வளரும் நாட்டைச் சேர்ந்தவர். நெறிசார்ந்த மற்றும் மக்கள் நலம் போற்றும் சமூக நலச் சிந்தனையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலமாக இவர் நோபல் பரிசினைப் பெறுவார் என்ற பேச்சு உலக முழுவதும் நிலவி வந்தது. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக மேலைநாட்டில் – குறிப்பாக பிரிட்டன் பல்கலைக் கழகங்களிலும், அமெரிக்கப் பல்கலைக்கழகங்களிலும் தொடர்ந்து பொருளாதார ஆய்வுகளை மனித நல நோக்கோடு நடத்திவருகின்றார். செல்வச் செழிப்பு நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்கானச் செயல்திட்டங்களை மட்டுமே முதன்மையாகக் கொண்டு 'வளர்ச்சி மாதிரிகளை' இதுவரை நோபல் பரிசு பெற்ற அனைத்துப் பொருளியல் நிபுணர்களையும் இவர் கடுமையாகச் சாடி வருகின்றார். ஏழை, எளிய மக்களின் பொருளியல் மேம்பாட்டிற்கான சிந்தனைகளை இவர் முன் நிறுத்தி, சமூக நலச் சிந்தனையோடு தொடர்ந்து ஆய்வு நடத்தி வருகின்றார். எனவேதான் இவர் இப்பரிசினைப் பெற்றதில் குறிப்பாக வளரும் நாடுகள் மனநிறைவு கொள்கின்றன.

## தாகூரின் தாக்கம்

தாகூரின் சாந்தி நிகேதனில் 1933 நவம்பர் மூன்றாம் நாள் இவர் பிறந்தார். தாகூரைப் போலவே கிராமப்புற மக்களின் நல வாழ்வில் இவருக்கு ஆரம்பம் முதலே நாட்டமுண்டு. தாய்வழிப் பாட்டனார் சமஸ்கிருத இலக்கியங்களில் நாட்டங்கொண்டு படைப்புகளை உருவாக்கியவர்; சென் இவருக்குத் துணை நின்றவர். இந்திய தத்துவத்திலும், இலக்கியத்திலும் சென்னிற்கு ஈடுபாடுண்டு. எனவேதான் இவருக்குச் சமூகக் கண்ணோட்டம் தொடர்ந்து துளிர்க்க ஆரம்பித்தது. தமது ஒன்பதாவது வயதிலேயே வங்கத்தில் ஏற்பட்ட (1943) கொடும் பஞ்சத்தின் பரிமாணங்களை நேரில் கண்டு நெஞ்சம் வெதும்பியவர். இதுவே இவரது பஞ்சம் பற்றிய ஆய்விற்கு அடித்தளமிட்டது. தாகூர்தான் இப்பெயரினை இவருக்கு இட்டவர். "அமர்த்திய" என்ற வங்க மொழிச் சொல்லுக்கு "அழியாதவர்" (immortal) என்பது பொருள்.

## கல்வியும், பணிகளும்

குழந்தைப் பருவத்தில் சமஸ்கிருத மொழி வல்லுனராக வர ஆசையிருந்தது. பள்ளிக்குவந்த பின்னர் ஆரம்பத்தில் கணிதவியலாளராகவும் பின்னர் இயற்பியலராகவும் வர வேண்டுமென விரும்பினார். தமது கல்லூரி வாழ்க்கை கல்கத்தா மாநிலக் கல்லூரியில் தொடங்கிய போதுதான் பொருளியல் துறையில் இவரது ஆய்வுப் பயணம் தொடங்கியது.

தமது பத்தொன்பதாவது வயதில் கேம்பிரிட்ஜ் நகரில் TRINITY கல்லூரியில் படிக்க வந்தார். இங்கேதான் லார்டு பைரன், பென்னிசன், சர் ஐசக் நியூட்டன் போன்றோர் பயின்றனர். முதலில் இங்கே படிக்க இவருக்கு வாய்ப்பு கிட்டவில்லை. சேர்ந்த ஒரு மாணவர் விலகியபோது சென் சேர்த்துக் கொள்ளப்பட்டார் (1953). தமது முதுநிலைப் பட்டப்படிப்புகளை 1956ல் வெற்றிகரமாக முடித்து அங்கேயே தமது ஆய்விற்காகக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்துகொண்டார். CHOICE OF TECHNIQUES என்ற ஆய்வேட்டினைச் சமர்ப்பித்து 1959ல் முனைவர் பட்டமும் பெற்றார்.

இதற்கிடையே தமது 24வது வயதில் ஜாதவ்பூர் பல்கலையில் பொருளியல் துறையில் 1956ல் நியமிக்கப்பட்டு இரண்டாண்டுகள் பணியாற்றினார். பின்னர்

பேராசிரியர் கா.மு. பாதுசா

TRINITY கல்லூரியில் 1958ல் சேர்ந்து 1963 வரை பணியாற்றினார். டெல்லியிலுள்ள DELHI SCHOOL OF ECONOMICS–ல் 1963ல் பணியாற்றத் தொடங்கி, ஒன்பதாண்டு காலம் பணியாற்றினார்.

இங்கேதான் வறுமை, பஞ்சம், பொருளாதார சமத்துவமின்மை – எத்தகைய தாக்கங்களைச் சமுதாயத்தில் உருவாக்குகின்றன என்ற ஆய்வினை மேற்கொண்டார். இந்த ஆய்வுதான் இன்று இவர் நோபல் பரிசு பெறுவதற்கான வித்தினையிட்டது என சென் நினைவுகூர்கின்றார். இந்திய நாட்டில் இவர் கடைசியாக ஆற்றிய ஆசிரியர் பணி இங்கே முடிவடைந்தது. பின்னர் LONDON SCHOOL OF ECONOMICS, OXFORD, CAMBRIDGE பல்கலைக்கழகங்களில் பணியாற்றிவிட்டு HARVARD, CALIFORNIA பல்கலைக்கழகங்களிலும் பணிபுரிந்தார். பன்னிரெண்டாண்டு பணியாற்றிய பிறகு 1998 ஜனவரியில் அமெரிக்காவிலிருந்து TRINITY கல்லூரிக்கே ``MASTER'' என்ற தலைமைப் பொறுப்பில் இங்கிலாந்து அரசு இவரை நியமித்தது. இங்கிலாந்து

> ஏற்கெனவே, நம் இந்திய நாட்டில் – ரவீந்திரநாத் தாகூர் (இலக்கியம் - 1913), சர் சி.வி.இராமன் (இயற்பியல் - 1930), குரானா (மருத்துவம் - 1968), அன்னை தெரசா (அமைதி-1979), எஸ்.சந்திரசேகர் (இயற்பியல்-1983) ஆகியோர் நோபல் பரிசு பெற்றிருக்கிறார்கள். ஆனால், இப்போதுதான் – பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை நம்நாட்டிலேயே முதலாவதாகப் பெற்றிருப்பவர் பற்றிய கட்டுரை இது!

நாட்டிலேயே கல்வித் துறையில் மிகவும் சிறப்புமிக்க தலைமைப் பணியிது. சென் இப் பதவியில் தமது எழுபதாவது வயதுவரை வகிக்கலாம். பின்னரும் எழுபத்தைந்து வயதுவரை நீடிக்கவும் வாய்ப்புண்டு. இப்பணி இதுவரை எந்த இந்தியருக்கும் தரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்குப் பதினான்கு கௌரவ டாக்டர் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. உலகலாவிய பொருளாதார அமைப்புக்களின் தலைவராகப் பொறுப்பேற்றுத் திறம்படப் பணியாற்றினார். இவர் படித்த, பணியாற்றிய TRINITY பல்கலையில் 1991ல் Honorary follow-வாக நியமிக்கப்பட்டார். இத்தகைய பெருமையினை எந்தவொரு இந்தியரும் மேலைநாடுகளில் பெறவில்லை என்பது இங்கே சுட்டத்தக்கது.

மேலைநாட்டின் ஆய்விதழ்களிலும் பொருளியல் ஆய்விதழ்களில், ஆசிரியர் குழுவில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார், இவர் TRINITY கல்லூரியில் Adam Smit Prize, Wrenburay Scholarship, Stevenson Prize போன்ற பரிசுகளையும் இவர் பெற்றிருக்கிறார்.

## சென்னின் பங்களிப்பு

கடந்த நாற்பதாண்டுகளில் இவருக்கிணையாக எந்தப் பொருளியியல் அறிஞரும் பொருளாதாரத்தின் பல்வேறு பரிமாணங்களிலும் பங்களிப்புச் செய்ததில்லை. பொருளாதார வரலாறு, வளர்ச்சி, மேம்பாடு, சமூகத் தேர்வு கோட்பாடு, வறுமை, சமத்துவமின்மை, நெறிசார்பு பொருளாதாரம், பஞ்சம், குறை உணவு, மகளிர் மேம்பாடு போன்ற துறைகளில் இவர் தமது அறிய பங்களிப்பினைச் செய்து வருகின்றார். இவர் இருபது அரிய நூல்களையும், 200க்கும் மேலான ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கியுள்ளார். அவற்றுள் 'Choice of Techniques', `Employment, Technology and Development', `Collective choice and Social Welfare', `Poverty and Femine', `India: Economic Development and Social Opportunity' போன்றன சிறப்பானது. இன்னும் இரண்டு நூல்கள் அச்சிலுள்ளன. இன்னு மொரு நூல் உருவாகிக் கொண்டிருக்கிறது.

## பஞ்சம் பற்றிய ஆய்வு

குழந்தைப் பருவத்திலேயே பஞ்சம் மக்களைத் தாக்கியதை அறிந்த இவர் பஞ்சம் பற்றிய ஆய்வினைத் தொடர்ந்து மேற்கொண்டார். தனது பள்ளி செய்தித் தாளிலேயே பஞ்சம் ஏன் ஏற்படுகின்றது என்பது பற்றி எழுதினார். உணவுப் பொருள் பற்றாக்குறை இல்லாமலிருந்தும் மக்கள் பசியால் மடிந்தது கண்டு வருந்தினார். மக்களிடையே வாங்கும் சக்தி இல்லாததுதான் பஞ்சம் ஏற்படுவதற்குக் காரணம் எனக் கண்டறிந்தார். இந்தியா, சீனா, எத்தியோப்பியா, வங்கதேசம், ஆப்பிரிக்கா, சகாரா நாடுகள் போன்றவற்றில் ஏற்பட்ட பஞ்சங்களுக்கானக் காரணம் – விளைவுகளை தொடர்ந்து ஆராய்ந்தார். இங்கெல்லாம் உணவு பற்றாக்குறையே பஞ்சத்திற்கான காரணமென்ற கருத்தை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

மாறாக, பஞ்சப் பகுதிகளிலிருந்து உணவுப் பொருள்கள் ஏற்றுமதியானதை சுட்டிக் காட்டினார். சமூகப் பொருளாதாரக் காரணங்களும் பஞ்சத்திற்கு காரணமாகின்றன என்ற ஆய்வினை வெளியிட்டார்.

இவர் Jean Dreze (1989) உடன் இணைந்து எழுதிய நூலில் எப்படி பஞ்சத்தைத் தவிர்க்கலாம், ஏற்பட்டபின் அதன் விளைவுகளை எப்படிக் குறைக்கலாம் என்பது பற்றியும் ஆராய்ந்தார். 1840களில் அயர்லாந்தில் ஏற்பட்ட உருளைக் கிழங்கு பஞ்சம், 1980ல் எத்தியோப்பியாவில் ஏற்பட்ட பஞ்சம் பற்றி ஆராய்ந்தார். உணவுப் பொருள்கள் வறட்சிப் பகுதிகளிலிருந்து கூட கொண்டுவரப்பட்டன. எங்கு பணம் புழங்குகிறதோ அங்கேதான் உணவுப் பொருள்கள் நகர்ந்தன. பட்டினி கிடந்த மக்களிடையே

அவை போய்ச் சேரவில்லை. எனவே பஞ்சத்தினைப் போக்க மக்களின் வாங்கும் சக்தியைப் பெருக்கவேண்டுமெனக் கூறுகிறார். 1970ஆம் ஆண்டு ஆரம்பகாலத்தில் மராட்டிய மாநிலம் தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்டது. 1980களில் African Sahel பாதிக்கப்பட்டது. மராட்டிய மாநிலத்தில் வேலைக்கு உணவு என்ற திட்டத்தின் கீழ் பஞ்சத்திலிருந்து தப்பிக்கப் போதிய பணம் தரப்பட்டது. ஆனால் African Sahel–ல் உணவுப் பொருள்கள் நிரம்பக் கிடைத்த போதிலும் இந்தமாதிரித் திட்டங்கள் இல்லாததால் ஆயிரக் கணக்கான மக்கள் மடிந்ததாகக் கூறுகின்றார். மூன்றாவது உலக நாடுகளும் அதற்கு உதவி செய்யும் முகமைகளும் இதனை ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென சென் பரிந்துரைப்பது, இங்கே குறிப்பிடத்தக்கது.

சீனாவில் மாவோவின் 'Great Leap Forward' என்ற இயக்கம் தோன்றியபோது, ஏறக்குறைய முப்பது மி ல்லியன் மக்கள் பசியால் மாண்டனர். பொதுவுடைமைச் சீனாவில் இரும்புத்திரை அரசுதான் இயங்கியது. பத்திரிகைகளோ, கட்சிகளோ மக்களின் இன்னல்களை வெளிச்சம் போட்டுக் காட்டவில்லை. ஆனால் ஜனநாயக நாடுகளில் இத்தகைய வாய்ப்புகள் நிரம்பவுள்ளன. எனவே பஞ்சங்கள் மக்களாட்சி அமைப்புகளில் ஏற்படவில்லை என்பது இவரது கருத்து. மா.வோ.வை விமர்ச்சித்த சென்னை பொதுவுடைமை பொருளியல் அறிஞர் டாக்டர் கே.என். ராஜ் கண்டித்தார். எனவே இவரைப் பொதுவுடைமைவாதி என்று வர்ணிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல; சுதந்திரம், மனித நேயத்தின் காவலர் எனக் கூறலாம்.

மேலும் சீர்திருத்தத்திற்கு எதிரியல்ல. சென் பெரும்பாலும் தவறாகவே புரிந்து கொள்ளப்பட்டார். சீர்திருத்தத்திற்கு எதிரியாகவே வர்ணிக்கப்படுகிறார். கவுசிக்பாசு சென்–னின் பழைய மாணவர். உலக வங்கியின் பொருளாதார நிபுணர் இவர். சென் மன்மோகன் சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டாரென்று வெளிப்படையாகவே கூறியுள்ளார். நோபல் பரிசு பெற்ற பின்னர் நியூயார்க்கில் நிருபர்களிடம் பேசுகின்றபோது ஏழை நாடுகளின் மக்களுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்துவிட்டு பொருளாதாரத்தில் உலகமயமாக்கல் கொள்கையைக் கடைப்பிடிப்பதில் தவறில்லை என்று கூறுகின்றார். வளரும் நாடுகளில் இக்கொள்கையைச் செயல்படுத்து வதற்கு முன்னால், அரசு மாற்றுத் திட்டங்களை வகுக்க வேண்டுமென வலியுறுத்துகின்றார். உகந்த தேசிய பொருளாதாரத் திட்டங்களை வகுத்துக்கொள்வதன் மூலம், சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் பலன் கிடைக்கு மென்பதனை உறுதி செய் வேண்டுமெனக் கூறுகின்றார் இவர். அவசியப் பண்டங்களின் பற்றாக்குறை மட்டுமல்ல, விநியோக அமைப்பிலுள்ள துறைகளாலும் பஞ்சமும், இழப்பும் ஏற்படும் என எச்சரிக்கிறார்.

உலகமயமாக்கும் கொள்கையால் இந்தோனேசியா நாட்டில் அசுர வேகத்தில் வளர்ச்சி ஏற்பட்டது. செலாவணி நெருக்கடி ஏற்பட்டு அங்குள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவும், பாகிஸ்தானும் தங்களுடைய பொருளாதாரத் துறைகளைத் திறந்துவிடவில்லை. அப்படித் திறந்து விட்டால்தான் தென்கொரியா, சீனா, தைவான் ஆகிய நாடுகளில் வெற்றியைப் பெற முடிந்தது; இந்தியாவும், பாகிஸ்தானும் பின்தங்கின என்று சிலர் கூறுவதுண்டு.

உண்மை என்னவென்றால் நிலச் சீர்திருத்தம், கல்வி, சுகாதாரம் ஆகியவற்றை இந்தியாவும் பாகிஸ்தானும் புறக்கணித்தன. தாராளமயமாக்கல், பொருளாதாரச் சீர்திருத்தம் ஆகியவை கொண்டுவரப்பட்டபோது, அதை எப்படி எதிர்கொள்வது என்று பெரும்பாலான மக்களுக்குத் தெரியாமல் போனதால்தான் சீர்குலைவு ஏற்பட்டது என்றார் அமார்த்ய சென்.

## நோபல் பரிசு

Robert Merton, Myron Seholes 1997க்கான பொருளாதார நோபல் பரிசினைப் பெற்றனர். இவர்கள் இருவரும் நிதித் துறையைச் சார்ந்த குறிப்பாகச் சந்தையில் பங்குகள் பற்றிய கோட்பாட்டினை அறிவித்திருந்தனர். Long Term Capital Management (LTCM) என்ற மிகப் பெரிய மூலதன நிறுவனத்தில் (200 பில்லியன் டாலர்கள்) பங்காளிகள். அண்மைக் காலத்தில் உலக நிதி நெருக்கடி ஆசியாவிலிருந்து, ரஷியாவுக்குப் பரவியபோது, இந்த நிறுவனம் கடந்த 1998 செப்டம்பரில் அடியோடு நொறுங்கத் தொடங்கியது, எனவே நோபல் பரிசு தேர்வுக் குழுவின் நம்பகத்தன்மைக்குச் சற்றுக் களங்கம் ஏற்பட்டதாக பரவலான செய்திகள் வெளிவந்தன.

எனவேதான் இந்த முறை சந்தைப் பொருளியல் அல்லது நிதி சார்ந்த பொருளியல் அறிஞர்களுக்கு இதுவரை வழங்கியதுபோல வழங்காமல் சமூக நலன் கருதும் இந்தியப் பேராசிரியர் பொருளாதார நிலைமைகளில் முன்னேற்றம் காண சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில் அதிக முதலீடு செய்யப்பட வேண்டுமென வற்புறுத்திய சென்னுக்கு இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது. இது அறிஞர்கள் வரவேற்கத்தக்கது ஆகும். □

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906



தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

